ஜெர்மனியிலும் வன்னியன் தொலைபேசி அட்டைகள்


'சொல்லும் நிமிடங்களை சொன்னபடியே தருவது'
தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro — பிரான்ஸ்

# ஈழமுரசு
ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 — 28 Juillet - 03 Août 2004 — 24

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)



# கருணாவின் கைக்கூலிகள் 7 பேர் சுட்டுக்கொலை
# இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவரும் பலி?
## கொட்டாவ வீட்டின் மீது அதிகாலை தாக்குதல்

26.07.2004

கொட்டாவ - அத்துருகிரிய வீதியிலுள்ள ஆடம்பர வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, கருணாவின் வலதுகரமான குகநேசன் உட்பட ஏழுபேரும் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் ஒருவரும் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பிரதான வீதியிலிருந்து சுமார் நூறு யார் தூரத்தில் ஒதுக்குப்புறமாயிருந்த மாடி வீடொன்றில் எண்மரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த போதே, அவர்களுடன் இருந்த ஒரு சிலரே இந்த எண்மரையும் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றிருக்கலாமென சிறீலங்கா காவல்துறையினர் கருதுகின்றனர்.


கருணாவின் மிக நெருங்கிய சகாவான சச்சி மாஸ்டர், அண்மையில் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லபட்ட நிலையில், கருணாவின் வலது கரமான குகநேசனும் நேற்றுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

►11

### புதிதாகத் தோற்றம் பெற்றுள்ள குழுக்களே
# போர் நிறுத்த உடன்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளன

சு.ப.தமிழ்ச்செல்வன்

►28



(27.07.2004)

புதிதாக தோற்றம் பெற்றுள்ள ஆயுதக் குழுக்களே போர் நிறுத்த உடன்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளன என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். இன்று கிளிநொச்சியில் நடைபெற்ற நோர்வேத் தரப்புப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் பின் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



## இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு உலகத் தமிழர் பேரமைப்பு மாநாடு கண்டனம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படும் பாதுகாப்பு உடன்படிக்கையைப் பெங்களூரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த உலகத்தமிழர் பேரமைப்பு மாநாடு கண்டித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் மூலம் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராகத் தனது இராணுவத்தைப் பயன்படுத்தும் பொறிக்குள் புதுடில்லி சிக்கிக் கொண்டுவிடும் என்றும் மாநாடு எச்சரித்துள்ளது. உலகத் தமிழர் பேரமைப்பின் இரண்டாவது மாநாடு பெங்களூரில் இடம்பெற்றது. அதில் தலைமையுரையாற்றிய தமிழ்த்தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

►28

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்




உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



**V.T.Cash & Carry**

900g யாழ்ப்பாணம் மிளகாய்துள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord

# டக்ளஸ் தேவானந்தாவின் இந்து கலாசார அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமைக்க கட்டிட உரிமையாளர் எதிர்ப்பு

சிறீலங்காவின் உல்லாசப் பயணத்துறை அமைச்சு இயங்கிவரும் கட்டடத் தொகுதியில் டக்ளஸ் தேவானந்தாவின் இந்து கலாசார அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமை தொடர்பாக அக்கட்டடத்தின் உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அலுவலகத்தை அனுரா பண்டாரநாயக்கவின் அமைச்சுக் கட்டிடத்துக்கு மாற்றிய தன் காரணமாகவே இப்பிரச்சினை எழுந்துள்ளது.

உல்லாசப் பயணத்துறைக்கு மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ள தனது கட்டடத் தொகுதியில் இந்து கலாச்சார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமை காரணமாக, தனது கட்டடத் தொகுதிக்குக் கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கட்டட உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விகாரம் அக்கட்டடத்தை வாடகைக்கு பெறுவது தொடர்பாக தனக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறும் செயலெனவும் சுட்டிக்காட்டியுள்ள கட்டிட உரிமையாளர் குறித்த கட்டிடத் தொகுதியில் இருந்து உல்லாசப் பயணத்துறை அமைச்சு வெளியேறிச் செல்லுமாறும், உல்லாசப் பயணத்துறை அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கருணாவைச் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லவில்லை
## அனுரா பண்டாரநாயக்கா மறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலத்தப்பட்ட கருணாவைச் சிங்கப்பூர் அழைத்துச் சென்றதாக வெளியாகிய செய்திகளைச் சிறீலங்காவின் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா நிராகரித்துள்ளார்.

அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவுடன், கருணா சிங்கப்பூர் சென்றுள்ளதாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இக்குற்றச்சாட்டு குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமைச்சர், தான் சிங்கப்பூரில் ஒரு சில மணி நேரங்களே கடந்து செல்வதற்காகத் தங்கியிருந்தாகத் தெரிவித்துள்ளார். தான் சிங்கப்பூரில் தங்கியிருந்த சமயம், சிங்கப்பூரில் சிறீலங்காவின் தூதுவருடன் மாத்திரமே தனது நேரத்தைச் செலவு செய்ததாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

சிறீலங்காவின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, பண்டாரநாயக்கா குடும்பத்திற்கு அவதுாறு ஏற்படுத்துவதற்காகவே இப்பொய்க் குற்றஞ்சாட்டைப் பரப்பி விட்டுள்ளதாகவும் அனுரா பண்டாரநாயக்கா இவ்விடயம் குறித்து கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் சிங்கப்பூர் சென்றுள்ள கருணாவை மீண்டும் சிறீலங்காவிற்கு அழைத்து வராமல் அங்கேயே வைக்குமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தக் கருத்துக் குறித்து அந்நேரம் நாடாளுமன்றத்தில் சமூகமாக இருந்த ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் எதுவித கருத்துக்களையோ மறுப்புக்களையோ தெரிவிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் தமிழீழக் காவல்துறையினர் தேடுதல்

கொக்கட்டிச்சோலையின் சில சந்தேகத்திற்குரிய பகுதிகளில் கடந்த சனிக்கிழமை தமிழீழக் காவல் துறையினர் மற்றும் விடுதலைப்புலிகளின் மாவடி முன்மாரிக் கோட்டப் படையணிப் போராளிகளும் இணைந்து திடீர் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

மக்களின் பாதுகாப்பு நலனைக் கருத்திற் கொண்டு குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுக்கும் வகையில் நடாத்தப்பட்ட இத்தேடுதலின் போது வீடுவீடாகச் சென்ற தமிழீழக் காவல்த்துறையினரும் விடுதலைப் போராளிகளும் மக்களுக்குக் கருத்துரைகளும் வழங்கினர்.

இதேவேளை இத்தேடுதல் நடவடிக்கையின் போது சில முக்கிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இரகசிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தமிழீழக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்நடவடிக்கையினைத் தமிழீழக் காவல்துறையின் மட்டு. அம்பாறை மாவட்ட கண்காணிப்பாளர் ச.தமிழரசன், மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணன் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் துணைத்தளபதி யோகராஜ், மட்டு. அம்பாறை காவல் பணிமனைப் பொறுப்பாளர் அஜந்தன் ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**EUROCONSULT SARL TRADUCTIONS**

மொழி பெயர்ப்பு நிலையம்

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

**அதிசயம் ஆனால் உண்மை**

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்
**VIMAL DISTRIBUTION**
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

**போட்டோ பாலா**

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

**LA CHAPELLE**
**இறைச்சிக் கடை**

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

**பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி!**
**உங்கள் பற்களில் பிரச்சினையா ?**



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**Errances Travels**

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# தேசியத்தலைவரின் தீர்க்கதரிசனம் மக்களையும் போராட்டத்தையும் காத்தது – சு.ப. தமிழ்ச்செல்வன்

ஆரம்பம் முதலே மருத்துவப் பிரிவின் தேவை குறித்த எமது தேசியத்தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனை எமது மக்களையும் போராளிகளையும் போராட்டத்தையும் காத்தது என்று தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு வைத்தியர் பொன்னம்பலம் வைத்தியசாலை நவீன வசதிகளைக் கொண்ட கட்டத்திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்:-

மர நிழல்களிலும் ஓலைக் கொட்டில்களிலும் இருந்து எமது மருத்துவர்கள் மக்களையும் போராளிகளையும் காத்த நாட்களை மறந்துவிட முடியாது. எமது மக்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வருகின்றபோது எதிரியின் குண்டு வீச்சுக்களினாலும் தொற்று நோய்களினாலும் மிகவும் மோசமாகப் பாதிக்கபட்டிருந்த நேரங்களில் எமது தேசியத் தலைவர் எம்மை அழைத்து போராளிகளைக் காப்பாற்றுவது போல் போராட்ட சூழலுக்குள்ளே நெருக்கடிபடுகின்ற எமது மக்களையும் காப்பாற்றுகின்ற பணியை எமது மருத்துவப் பிரிவு செம்மையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கமைவாக மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் பெரும் சுமையை மிகக் குறைந்த விரல் விட்டு எண்ணக்கூடிய எமது மருத்துவர்கள் இதனைத் தாங்கி நின்றார்கள். உண்மையில் அன்றைய நாட்களை இலகுவில் மறந்துவிட முடியாது.

ஏதிரியின் அனைத்து நெருக்குவாரங்களையும், அழுத்தங்களையும் பாரிய அச்சுறுத்தல்களையும் நாம் எதிர்க்கொண்டு நிற்கின்றபோது கொடிய நோய்களும் எம்மை அச்சுறுத்தத் தவறவில்லை.


அப்படியான சூழலில் எமது மருத்துவப் பிரிவின் வராலாற்றை நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.


இன்று புதுக்குடியிருப்பில் நடைபெறுகின்ற பொன்னம்பலம் ஞாபகார்த்தக் கட்டடத்திறப்பு விழாவை நாம் வெறும் கட்டடத்திறப்பு விழாவாகப் பார்க்கவில்லை எமது மருத்துவப் பிரிவின் ஒரு பாய்ச்சலான படிக்கல்லாகவே பார்க்கின்றோம்.

இந்தக் கட்டடத்தைப் பற்றிப் பேசுவதை விட, உள்ளே என்ன நடக்கின்றது என்பதைப்பற்றிப் பேசுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

எமது போராட்டம் எப்போது முனைப்பு பெற்றதோ, அப்போது இருந்தே எங்களுடைய தலைவர் மருத்துவப்பிரிவினுடைய வளர்ச்சியிலும் கூடிய அக்கறை செலுத்தினார். போராட்டத்தின் அதி உச்சப் பக்கமாக எங்கள் மருத்துவப் பிரிவின் வளர்ச்சியில் தலைவர் கவனமெடுத்தார்.

ஆரம்பத்தில் நாம் தமிழ் நாட்டைத் தளமாக் கொண்டிருந்தோம்.





தமிழ்நாட்டில் தளமாக் கொண்டிருந்த காலத்தில் பல வைத்திய கலாநிதிகள் எம்முடன் சேர்ந்து பணியாற்றினார்கள். அவர்களிடம் எமது தலைவர் எமக்கென மருத்துவப்பிரிவு அமைக்க வேண்டும் என்றும் அதற்காகப் போரளிகளைக் கற்பிக்க வேண்டுமென்றும் கேட்டு, அவர்களுக்கு மருத்துவக் கல்வி ஊட்டி, அன்றே எமது போராட்டத்துக்கான வல்வான அடித்தளத்தை இட்டார்.

எங்கள் தேசியத்தலைவர் அன்றைய காலத்தில் தீர்க்கதரிசனமாகச் சிந்தித்தன் விளைவுதான் பின்னைய காலத்தில் போர் எங்களை ஆக்கிரமிக்க முற்பட்டபோது, எதிரி எம்மை முற்றாக அழிக்க முற்பட்ட போது, நாங்கள் அதற்குத் தாக்குப் பிடித்து எங்களுடைய மக்களையும் எமது போராட்டத்தையும் போராளிகளிளையும் காக்கத் துணை புரிந்தது.

உண்மையில் எங்கள் வைத்தியர்கள் பட்ட துன்பங்கள் சாதாரணமானவையல்ல. எமது தலைவர் ஒவ்வொரு துறையிலும் கூடிய கவனமெடுத்து முன்னெடுத்து வந்ததால் தான் இன்று இப்படியான மாற்றத்தைக் காண்கிறோம்.

உண்மையில் நாம் இன்று ஒரு பெரும் வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம் எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதுவித அத்தியாயம் இருக்கிறது. எல்லா நாடுகளிலும் போராட்டம் நடந்து பெரும் அழிவுகள் எல்லாம் நிகழ்ந்து ஆக்கிரமிப்புக்களிலில் இருந்து விடுபட்டதன் பின்னர் தான் நாடு வளர்ச்சியை நோக்கி முன்னேற்றமடைந்து செல்லும்.

ஆனால் எங்களுடைய விடுதலைப் போராட்டத்தைத் தலைவர் ஆரம்ப காலத்தில் இருந்தே எதிரியை எமது மண்ணில் இருந்து விரட்டியடிக்கின்ற சமகாலத்திலேயே எமது தயாகத்தின் அனைத்து துறைகளையும் கட்டியெழுப்புவதை முன்னெடுத்து வந்ததால் தான் நாம் போராட்ட காலத்தில் எமது இருப்பைத் தக்க வைக்கின்றோம். அதனால்தான் எமது மக்களின் வாழ்க்கை நிலையை ஓரளவேனும் பாதுகாத்துக்கொள்ள முடிகின்றது.

இன்று எமது மருத்துவப் போராளிகள் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நிற்கின்றார்கள். தலைவரின் சிந்தனையில் உருவான திலீபன் மருத்துவ சேவை இன்று எவ்வித வசதியும் இல்லாத அடிமட்டக் கிராமங்களிலிலே வாழ்கின்ற மக்கள் மத்தியில் மருத்துவச் சுகாதார விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, அந்த மக்களுக்கு அங்கேயே சிகிச்சைகளை வழங்கிப் பாரிய நோய்த் தாக்கங்களில் இருந்து தப்புகின்ற ஒரு மார்க்கத்தை உருவாக்கியிருக்கின்றார். இதனை இன்று வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒரு படிப்பினையாக எடுக்க வேண்டியிருக்கிறது.

எமது மருத்துவர்களின் கடமையுணர்வு, அர்ப்பணிப்பு, அவர்களின் செயற்திறன் என்பனவற்றால் நாம் இன்று மருத்துவத்துறையில் வளர்ச்சி அடைந்திருக்கின்றோம். தென்னிலங்கையில் சகல வசதிகள் இருந்தும் அவர்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் யாழ்ப்பாணத்தை விட்டு தந்திரோபாய ரீதியாகப் பின்வாங்குகின்றபோது, எதிரி நினைத்திருந்த பல விடயங்களில் ஒன்று, விடுதலைப் புலிகள் வைத்திய ரீதியாகப் பெரும் பின்னடைவைச் சந்தித்து விடுவார்கள் எனவே இவர்கள் இனி மேல் மரபுவழித் தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ள முடியாது சிறு சிறு தாக்குதல்களை மேற்கொண்டு அழிந்து விடுவார்கள் என்பதேயாகும்.

மருத்துவ ரீதியில் இவர்களால் இனி எதுவும் செய்துவிட முடியாது என்று நினைத்துக் கொட்டமடித்தார்கள். இவர்கள் எண்ணத்தையெல்லாம் சிதறடிக்கும் வகையில் நாம் எதிரிக்கு ஒரு புதிய செய்தியைக் கொடுத்தோம். அது தான் முல்லைச் சமர். நாம் மருத்துவ ரீதியாக எவ்வளவு பலம் பெற்றிருக்கின்றோம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். இன்று புலம்பெயர் நாடுகளில் இருந்து பெருமளவான வைத்தியர்கள் இங்கு வந்து பெரும்பணியாற்றுகிறார்கள். எமது அடுத்த கட்ட வளர்ச்சிக்குப் பெரும் தூண்களாக நின்று செயற்படுகிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பேச்சுவார்த்தையில் தலையீடு செய்வதற்கு இந்தியா மறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசாங்கத்துக்கும் இடையே நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடாத்த உதவுவதற்கு இந்திய அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

சமாதான முயற்சிகளில் அனுசரனை வழங்கிவரும் நோர்வேயை இந்த முயற்சிகளில் இருந்து தவிர்க்கும் நோக்கத்தோடு விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் உதவவேண்டும் என்று சிறீலங்காவின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ விடுத்திருந்த கோரிக்கையை இந்திய தலைவர்கள் நிராகரித்து விட்டதாக இந்திய ஊடகமொன்று தெரிவித்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, இந்திய தேசிய படைத்துறை ஆலோசகர் ஜே.என். டிக்ஸித் ஆகியோரும் மஹிந்த ராஜபக்ஸவின் கோரிக்கையை நிராகரித்திருப்பதாகவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் கூடுதல் ஒத்துழைப்பு வழங்க இந்தியத் தலைவர்கள் உறுதியளித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களைச் சிறீலங்காவுடன் பரிமாற்றம் செய்து கொள்வதற்குத் தேசியப் படைத்துறை ஆலோசகர் ஜே.என்.டிக்ஸித் உறுதியளித்திருக்கிறார்.

இதேவேளை, சிறீலங்கா படைத்துறையின் நடவடிக்கைளைத் துல்லியமாகக் கண்காணிக்கும் வல்லமை கொண்ட நவீன தொழில்நுட்ப உபகரணங்களை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருவது போன்ற பல தகவல்களை இந்திய புலனாய்வுத்துறை, சிறீலங்கா படைத்துறைக்குத் தெரிவித்திருப்பதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## வவுனியா வளாகத்தை வன்னி பல்கலைக்கழகமாக மாற்றுவதற்குக் கொள்கையளவில் இணக்கம்

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினைத் தனியான வன்னி மாவட்ட பல்கலைக்கழகமாக மாற்றுவதற்குச் சிறீலங்காவின் கல்வி, உயர்கல்வி பிரதியமைச்சர் தினேஸ் குணவர்த்தன இணக்கம் தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் அமைச்சரை நாடாளுமன்ற அலுவலகத்தில் சந்தித்து தனியான வளாகமாக மாற்றுமாறு கோரிக்கை விடுத்த போது கொள்கை அளவில் பிரதியமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதிகாரிகளோடு இது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடலை நடத்தி இறுதி முடிவு எடுக்கவும் பிரதியமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், வவுனியா மாவட்ட வவுனியா வளாக உயரதிகாரிகளும் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# கிழக்கில் தமிழ் ஆயுதக்குழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டும்

## கண்காணிப்புக் குழுத் தலைவர் அரசிடம் வலியுறுத்தல்


மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் கருணா குழு மற்றும் ஈ.பி.டி.பி. உட்பட தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு அரசிடம் கடுமையாக வற்புறுத்தியுள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் துருண்ட், பியூறு ஹொவ்ட தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை காலை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த போதே, ஜெனரல் பியூறு ஹொவ்ட இதனைத் தெரிவித்தார்.

21ம் திகதி புதன்கிழமை மாலை சிறீலங்கா விமானப் படையின் விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி சென்ற ஜெனரல் பியூறு ஹொவ்ட, வியாழக்கிழமை காலை 8 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேச்சுக்களை நடத்தினார்.

கிழக்கில், குறிப்பாக மட்டக்களப்பில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சம்பவங்கள், போர் நிறுத்த உடன்பாட்டுக்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்திச் சமாதானச் சூழ்நிலையைச் சீர்குலைத்து விடுமென எச்சரிக்கப்பட்டு வரும் நிலையில், இந்த உடன்பாட்டைப் பலப்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

இதன்போது, கிழக்கு நிலைமைகள், மற்றும் போர் நிறுத்த உடன்பாட்டைப் பலப்படுத்துவது தொடர்பாக, சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மற்றும் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோருடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தான் நடத்திய பேச்சுகள் குறித்து சுருக்கமாக விளக்கமளித்தார்.



இதன்போது, கிழக்கில் ஆயுதங்களுடன் செயற்படும் பல்வேறு தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகள் குறித்தும் மட்டக்களப்பின் சட்டம், ஒழுங்கு நிலை குறித்தும் தமிழ்ச்செல்வன் கேள்வியெழுப்பினார்.

அத்துடன், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் நடவடிக்கையில் நிராயுத பாணிகளாக ஈடுபடும், தங்கள் உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் குறித்தும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

போர் நிறுத்த உடன்பாட்டின் 1.8 ஆவது சரத்து தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டு அவர்கள் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்ற போதிலும், அது மீறப்படுவது குறித்தும், அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் தான் நன்கறிந்துள்ளதாக ஜெனரல் பியூறு ஹொவ்ட தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார்.

இந்த நிலைமையைத் தடுப்பதற்காக, கிழக்கில் கருணா குழு மற்றும் ஈ.பி.டி.பி. உட்பட தமிழ்க் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, நிலைமை மோசமடைவதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு அரச தரப்பிடம் தான் கடுமையாக வலியுறுத்தியுள்ளதாக பியூறு ஹொவ்ட கூறினார்.

இந்தச் சூழ்நிலையைத் தொடர விடாது தடுப்பதன் மூலமே போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து பேண முடியுமெனவும் அதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்குமாறும் அரச தரப்பைக் கேட்டுள்ளதாகவும் பியூறு ஹொவ்ட அங்கு தெரிவித்தார்.

அத்துடன், போர் நிறுத்த உடன்பாட்டை எவ்வாறு மேலும் பலப்படுத்துவது என்பது குறித்தும் இங்கு, இரு தரப்பும் ஆராய்ந்தன.

இதேநேரம், இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய ஜெனரல் பியூறு ஹொவ்ட, வியாழக்கிழமை பிற்பகல் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்து மேற்படி, சந்திப்புகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

## படையினர் அச்சுறுத்தல் தாழையடி வாசி வழக்குத் தாக்கல்

முகமாலை சோதனைச் சாவடியில் சோதனை என்ற பெயரில் சிறீலங்காப் படையினரால் தான் கடுமையாக அச்சுறுத்தப்படுவதாகக் கூறித் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிக்கும் ஒருவர் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சிக் கிழக்கிலுள்ள தாளையடிப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகரே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இந்த வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார்.

வர்த்தக நடவடிக்கைகளுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகத் தான் முகமாலைச் சோதனைச் சாவடியின் ஊடாக சென்ற போது படையினர் தன்னை அச்சுறுத்தித் தனது அடையாள அட்டையைக் கிழித்தெறிந்ததாகவும், இதனால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

## காணாமல் போனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணையில் முக்கிய திருப்பம்

1997ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமல் போனதாகக் கூறப்பட்ட இளைஞனைத் தான் கைது செய்ததாகச் சிறீலங்கா படையதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டதையடுத்து, காணாமல் போனவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு வழக்கு விசாரணையில் முக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

மடத்தடி வீதி கொடிகாமம் பகுதியினைச் சேர்ந்த வேலுப்பிள்ளை உதயகுமார் 1997ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் இவரைத் தேடி இவரது குடும்பத்தினரால் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறிப்பிட்ட இளைஞனைத் தானே கைது செய்ததாக, யாழ்ப்பாணத்தில் முன்னர் கடமையாற்றியவரும், தற்போது காங்கேசன் துறையில் கடமையாற்றி வருபவருமான ரி.எம்.மகிந்தரட்ன எனப்படும் படையதிகாரி ஒப்புக்கொண்டுள்ளார்.

இது தொடர்பான ஒப்புதலை எழுத்து மூலம் ரி.எம்.மகிந்தரட்ன எனப்படும் படையதிகாரி யாழ். நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்த போதிலும் அவர் வழக்கிற்குச் சமூகமளிக்காமை காரணமாக எதிர்வரும் 23ம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த காலங்களில் படையினரால் கைது செய்யப்பட்டு காணமல் போனோர் தொடர்பான விசாரணைகளில் படையினர் தரப்பில் இருந்து மறுப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், இந்த வழக்குத் தொடர்பாகப் படையதிகாரி ஒருவர் தன்னைத் தொடர்புபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழ்த் தேசியத்தைக் கூறுபோட முடியாது

### கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்

தமிழ் தேசியத்தைக் கூறுபோட பேரினவாத சக்திகள் முயன்று வந்த போதும் அவை வெற்றி பெறவில்லை என்றும், பிரதேச வாதம் என்பது காலத்துக்குக் காலம் சிலரால் தூண்டிவிடப்படுகின்ற போதும் அதனை வடக்கு கிழக்கு மக்கள் பூரணமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சிறீலங்கா நாடாளுமன்ற கட்டிடத்தில் நடைபெற்ற ஊடகர் மாநாட்டில் கருத்துரைத்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இடைக்கால தன்னாட்சி எனப்படும் சுயாட்சியே தமிழர்களின் தற்போதைய கோரிக்கையாகும் என்பதை வலியுறுத்தினர்.

வடக்கு, கிழக்குப் பிரதேசம் தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கு இணைந்தே செயற்பட வேண்டும் என்பதை முன்னைய தமிழ்த் தலைவர்களும், தமிழ் மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எவரும் அவற்றைப் பிரித்தாள முடியாது எனவும் கூறினர்.

இந்த மாநாட்டில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி கதிர்காமர், ஜெயானந்தமூர்த்தி, கனகசபை, ஜோசப் பரராஜசிங்கம், மற்றும் அரியநேந்திரன் ஆகியோரும் அம்பாறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பத்மநாதன், திருகோணமலையை பிரதிநிதித்துவப்படுத்தும் துரைரட்ணசிங்கம் ஆகியோரும் பங்கேற்றனர்.


நேசன் Cash and Carry



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 8574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

ஈழமுரசு
POORALAM WEEKLY

# 83 ஜூலை கலவரத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட கோரமான வன்முறைச் சம்பவங்களுக்குச் சிறீலங்கா ஜனாதிபதி மன்னிப்புக் கோரியுள்ளார் !

(24.07.2004)

தமிழ் மக்கள் மீது 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையில் கட்டவிழ்த்து விடப்பட்ட கோரமான வன்முறைச் சம்பவங்களுக்காகச் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளார்.

அந்த துன்பகரமான காலப் பகுதியில் இடம்பெற்ற இனக்கலவரமே நாடு இன்று எதிர்நோக்கும் முரண்பாடுகளுக்குப் பிரதான காரணம் என அவர் சுட்டிக் காட்டினார்.

1983ம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதற் கட்ட நஷ்டஈடு வழங்கும் வைபவம், ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்றபோது பேசுகையிலேயே ஜனாதிபதி இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட முதல் 30 பேரு-க்கு இந்த வைபவத்தின்போது ஜனாதிபதி, நட்டஈட்டுக்கான காசோலைகளை வழங்கினார். இந்த நிகழ்வில், அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

1983ம் ஆண்டு நடந்த இனக் கலவரம் தொடர்பாக ஆராய 2001ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் திகதி ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்தி



ருந்தார். இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட 937 பேருக்கு நஷ்ட ஈடு வழங்க முடியும் என இந்த விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

சிறிய தொகையிலான நஷ்ட ஈட்டு நிதி, மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு எந்த வகையிலும் பதில் ஈடாக அமையும் எனத் தாம் கருதவில்லை என ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களின் முகங்களில் தோன்றிய துயர வெளிப்பாடுகளைத் தம்மைப்போன்ற பலர் ஏதோ சில காரணங்களுக்காக உணரத் தவறி விட்டதாகவும் இதனை தன்னால் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கறுப்பு ஜூலையில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு வித்திடப்பட்ட காரணங்கள், அதனால் ஏற்பட்ட தொடர் தாக்கங்கள் என்பவற்றைச் சமூகவியலாளர்களாலும் ஆய்வாளர்களாலும் நேர்மையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும் என தாம் கருதுவதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த துன்பகரமான சம்பவத்திற்கு முழு நாட்டவர்களிடமும் மன்னிப்பைக் கோர தலைப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி இது இலங்கை அரசின் பொறுப்பாகும் எனவும் கூறினார்.

## அரச பயங்கரவாதமும் ஓநாய்களின் ஓலங்களும்

சிறீலங்கா அரச பயங்கரவாதம் தமிழ்த் தேசியத்தின் மீது கட்டவிழ்த்துவிட்ட இரத்தப் பசிக் கொடுமை மிக்க ஆடி மாத வரிசையில் மீண்டும் ஓர் ஆடி மாதம் வரலாற்றுப் பக்கங்களைக் கடக்கின்றது. 1983ம் ஆண்டின் ஆடி மாதத்தினை எந்தத் தமிழ் நெஞ்சமும் மறந்துவிட முடியாது. 'ஆடி விதை, தேடி விதை' என்ற முதுமொழியை அறிந்திருந்த தமிழினத்திற்கு 83ம் ஆண்டு ஆடி மாதம் சிங்களப் பேரினவாதம் தேடித் தேடி இட்ட 'தீ' இன்று, அதே பேரினவாதப் பேயினை விழுங்கிக்கொள்ளும் பெரும் தமிழ்த்தேசிய எழுச்சித் தீயாக உருவெடுத்திருக்கின்றது.

83ம் ஆண்டு ஆடி மாதம் மட்டுமல்ல அதற்கு முந்திய பிந்திய ஆடி மாதங்களும் தமிழினம் சந்தித்த அவலங்களைச் சொல்லி ஆறுதல் தேடிக்கொள்ள முடியாது. 1977ம் ஆண்டு ஆடி மாதம் தமிழினத்தின் மீது நடாத்தப்பட்ட படுகொலைகள், அதனையடுத்து 79ம் ஆண்டு ஆடி மாதம் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பெயரில் தமிழ் மக்கள் மூச்சுக்கூட விட முடியாதபடி அடங்கிக்கொள்ள, காட்டுமிராண்டித்தனமான ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டதும், அதன் கோர விளைவுகள் ஒவ்வொரு தமிழ்க் குடிமகனின் வாசல் வரை வந்தது மறக்கக் கூடிய ஒன்றல்ல.

பின்னர் 83ம் ஆண்டு ஆடி மாதம் கலவரம் என்ற பெயரில் ஒட்டு மொத்தச் சிறீலங்கா அரச இயந்திரமும் தமிழ் மக்களுக்கு எதிராகத் திரும்பியது. கச்சிதமான திட்டமிடலுடன் சிறீலங்கா தனக்கிடையேயான கட்சி, மத வேறுபாடுகளைக் களைந்து தமிழ் மக்களை வாக்காளர் பட்டியல் உதவியுடன் தேடிப் பிடித்து ஊழித்தாண்டவமாடியது. இது வரலாற்றில் பதியப்பட்ட ஓர் இரத்தப் பதிவு. ஆனால் இன்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைப்பதைப் போன்று சிறீலங்கா அரச தலைவர் சந்திரிகா 83ம் ஆண்டுக் கலவரங்களுக்கெல்லாம் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சிதான் காரணம் எனவும், அந்தக் கலவரங்கள் வருந்தத் தக்கன எனவும் இந்த 'நவாலித் தேவாலயப் படுகொலை நாயகி' கூறியிருக்கின்றார்.

சந்திரிகாவிற்கு இதைச் சொல்ல என்ன அருகதையிருக்கின்றது? எத்தனை எத்தனை இராணுவ நடவடிக்கைகளைப் புதுப்புதுப் பெயர் சூட்டி ஏவி விட்டவர் இந்த அம்மையார்? இரவோடு இரவாக ஒட்டு மொத்த யாழ். குடா மக்களின் இருப்பினைத் தொலைத்த 'சூரியக் கதிரின்' சூத்திரதாரியல்லவா இவர்? அன்று நடந்த 83 கலவரத்திற்கு வருந்துகின்றாராம். இது நல்ல வேடிக்கை. இதை வேண்டுமானால் கதிர்காமர், டக்ளஸ் போன்ற ஒட்டுண்ணிகளிடம் சொல்லிக் கொள்ளலாம்.

83 இனச் சங்காரத்தை இத்தோடு தமிழினம் தொலைந்தது என நினைத்து சிறீலங்கா அரசு நடாத்தியது. ஆனால் அன்றுடன் தமிழினம் தொலைந்துவிடவில்லை. மாறாக தொலைதூர நோக்குடன் அது விழித்து, விடுதலைப் புலிகள் என்ற வரலாற்றுச் சக்தியைப் பலப்படுத்தியது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தனது வரலாற்றுப் பாதையில் சந்தித்த சோதனைகளும் வேதனைகளும் கொஞ்சஞ்சமல்ல. 87ம் ஆண்டு ஆடி மாதம் உருவான இந்திய-சிறீலங்கா ஒப்பந்தத்தினை அடுத்து, அமைதிப் படை என்ற பெயரில் வந்த இந்திய இராணுவமும் எம்மீது நெருப்பினை அள்ளிக் கொட்டியது முதல், இன்று கருணா குழு என்ற கும்பல் புரியும் காடைத்தனங்கள் வரை இந்த வேதனைப் பட்டியல் நீள்கின்றது. எனினும் தமிழ்த் தேசம் கலங்காது, ஆத்ம நேசம் கொண்ட மக்களின் பலத்தோடு அனைத்துத் தடைகளையும் வெற்றிகொள்ளும்.

## சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதில் சிக்கல் ! கருணா விடயமும் அதில் ஒன்று !

சிறீலங்கா அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் இரு முக்கிய சிக்கல்கள் காணப்படுவதாக அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை ஒருங்கிணைக்கும் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்


சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதே இதில் முதன்மையானது என்று சுட்டிக் காட்டியுள்ள அவர், இதனைத் தவிர கருணா விவகாரமும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பிக்கும் விடயத்தில் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கும் திகதி மற்றும் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடமிருந்து எழுத்து மூல இணக்கப்பாட்டைக் கோரியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் கடந்த ஜூன் மாதத்தில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளதாக ஜயந்த தனபால மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு புனர்நிர்மாணம் மற்றும் உடனடி மனிதாபிமானத் தேவைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகப் பேச்சுவார்த்தையை நடத்த தயாராகவுள்ளதாகச் சமாதான முயற்சிகளை ஒருங்கிணைக்கும் செயலகத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதற்காக முன்வைக்கப்படும் யோசனைகள் இறுதித் தீர்வை நோக்கிச் செல்வதற்கான எதிர்பார்ப்புடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் ஜயந்த தனபால கூறியுள்ளார்.




## பதவியைத் தொடர்ந்து தக்கவைக்க சந்திரிகா புதிய வியூகம் !

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது தற்போதைய பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும், அரசியலில் தொடர்ந்து இருப்பதற்கான முயற்சிகளில் அதிக கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2005ம் ஆண்டுடன் தனது பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையில், கிழக்கு மாகாணத்தில் பதற்ற நிலையைத் தோற்றுவித்து விடுதலைப் புலிகளுடன் மீண்டும் போரினை ஏற்படுத்தி அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவன் மூலம் தனது பதவியைச் சிறிது காலம் நீடிக்கலாம் என ஜனாதிபதி எதிர்ப்பார்த்திருந்தார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளின் இராஜதந்திர நடவடிக்கைகளால் அது சாத்தியப்படாமல் போனதை அடுத்து ஜனாதிபதி மற்றுமொரு முனையில் களத்தில் இறங்கியுள்ளார்.

தென்னிலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த அச்சத்தை ஏற்படுத்துவதன் மூலம் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று, சகல அதிகாரமும் கொண்ட நாடாளுமன்ற அரசை நிறுவி, தான் பிரதமராக இருப்பதற்கான வேலைகளில் ஜனாதிபதி தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான முன்னெடுப்புக்களைச் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் மேற்கொண்டு வரும் அதே வேளை, இதுபற்றிச் சர்வதேச நாடுகளுடனான இராஜதந்திர கருத்துப் பகிர்வை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மீண்டும் தொடரும் வஞ்சக அரசியலும் புலிகளின் பொறுமையும் எதுவரை?

இலங்கைத் தீவில் மீண்டுமொருமுறை யுத்தம் மூளப்போகிறதா என்கின்ற கேள்வியை இலங்கை இனப் பிரச்சினையின் பால் அக்கறையினை அல்லது ஈர்ப்பினைக் கொண்டுள்ள உலக நாடுகளும் அமைப்புக்களும் தங்களுக்குள் கேட்டுக்கொள்கின்றன.

சுமார் இரண்டரை வருடங்கள் யுத்தமற்ற சூழலில் சற்று மூச்சு விட்டுக்கொண்டிருந்த தமிழ் மக்கள் சமாதான வெளிச்சக்கோடுகள் ஒவ்வொன்றாக அகன்று செல்ல போர் மேகங்கள் சூழ்ந்து வருவதை உணர்ந்து அச்சங்கொண்டுள்ளனர்.

சந்திரிகா இலங்கையின் ஆட்சிப்பொறுப்பினை ஏற்ற நாள் தொடக்கம் எல்லாமே குழம்பத் தொடங்கி விட்டன.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சியின் போது மேற் கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தமும் சமாதானப் பேச்சு வார்த்தைகளும் சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளினாலேயே எப்போதும் குழப்பப்பட்டன. ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வசமிருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களைச் சனாதிபதி பறித்தெடுத்ததன் பின்பு சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டு நின்று போனது.

பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்று ஆட்சியமைத்ததும் மீண்டும் புதிய உத்வேகத்தோடு, நின்றுபோன, சமாதானப் பேச்சுக்கள் தொடங்கப் போவது போன்றதொரு தோற்றம் காட்டப்பட்டது. ஆனால் அந்த பொய்த் தோற்றம் மறையத் தொடங்கி மேலும் மேலும் பிரச்சினைகளும் குழப்பங்களும் சிக்கல்களும் அதிகரித்து விட்டன.

ரணில் அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியதும் அதனைச் சிறிது சிறிதாக நகர்த்திச் சென்ற விதமும் எந்த நோக்கத்தை இலக்காகக் கொண்டது என்பது பற்றிய ஆய்வுகளை ஒருபுறம் வைத்து விட்டு நோக்குமிடத்தில் அந்தச் சமாதானப் பேச்சுக்கான சூழல் ஒன்றை ஓரளவு கிளியராக ரணில் அரசினர் மேற்கொண்டனர். இத்தனை வருட கால போர் மற்றும் அரசியல் பட்டறிவுகளிலிருந்து விடுதலைப் புலிகளின் மனநிலையைச் சுமாராகவேனும் உணர்ந்து கொண்டு அவர்கள் செயற் திட்டங்களை வகுத்ததாகவே கருதலாம்.

**- விவேக் -**

ஆனால் சந்திரிகாவின் அணுகுமுறை சிக்கல் நிறைந்ததாகவும் பொய்மையானதாகவும் வஞ்சகத்தன்மை மிக்கதாகவும் வெளிப்படையாகவே தெரியத்தொடங்கி விட்டது. ரணில் காலத்துச் சமாதானச் செயற்பாடுகளை நுட்பமாக அவதானித்துப் பார்த்தால் புரியும் அவர் புலிகள் தொடர்பான சில முரண்பாடுகளை வெளியிடவேண்டும் என எண்ணியிருந்தாலும் அவரது வாய் மூலமாக இதனை வெளிப்படுத்தவில்லை (சில சமயங்களில் அமெரிக்காவூடாக அவற்றை வெளிப்படுத்தி வந்தார்.) புலிகள் சீற்றங் கொள்ளும்படியாகத் தானோ தனது கட்சியினரோ எந்தவொரு வார்த்தைப் பிரயோகமும் மேற்கொள்ளாமல் ரணில் அவதானமாக இருந்தார். (அதே அவதானத்தோடும் மௌனத்தோடும் காய்களை நகர்த்திப் புலிகள் மீதான சர்வதேச வலையமைப்பொன்றை ஏற்படுத்த முனைந்தமை வேறு கதை) சந்திரிகா விடுதலைப் புலிகளோடு சமாதானம் பேசுவேன் எனக் கூறிக் கொண்டு ஒருபுறம் தனது கட்டுப்பாட்டில் உள்ள அரச ஊடகங்களைப் புலி எதிர்ப்புப் பிரச்சாலத்திற்கு முடுக்கி விட்டார். அவரது வெளிநாட்டமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமரைக் கொண்டு, முன்னர் போன்றே உலகெங்கும் புலி எதிர்ப்புப் பரப்புரைகளை மேற் கொண்டு வருகிறார். பொறுப்பு மிக்க அரசுத் தலைவராக இருந்து கொண்டு காலையில் ஒரு கருத்தையும் மாலையில் அதற்கு முரணாண இன்னொரு கருத்தையும் தெரிவித்துக்கொண்டு முரண்பாடுகளின் மொத்த வடிவமாக இன்று சந்திரிகா காணப்படுகின்றார்.

ஆனால் சந்திரிகாவின் அணுகுமுறை சிக்கல் நிறைந்ததாகவும் பொய்மையானதாகவும் வஞ்சகத்தன்மை மிக்கதாகவும் வெளிப்படையாகவே தெரியத்தொடங்கி விட்டது. ரணில் காலத்துச் சமாதானச் செயற்பாடுகளை நுட்பமாக அவதானித்துப் பார்த்தால் புரியும் அவர் புலிகள் தொடர்பான சில முரண்பாடுகளை வெளியிடவேண்டும் என எண்ணியிருந்தாலும் அவரது வாய் மூலமாக இதனை வெளிப்படுத்தவில்லை

அத்தோடு சந்திரிகா முன்னர் புலிகளோடு மேற் கொண்ட பேச்சு வார்த்தைகள் என்ற பெயரிலான வஞ்சக அரசியலை இப்போதும் அதைவிட அதிக முனைப்புடன் முன்னெடுத்துச் செல்வதாகவே உணர முடிகிறது. விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட கருணாவைக் கையாண்டு வருகிற விதம், விடுதலைப் புலிகளைக் கொச்சைப்படுத்துவதையே ஒரே நோக்கமாகக் கொண்டு இயங்கும் ரி.பி.சி. என்கிற வானொலிக்கு இலங்கை வானொலி நிலையம் இடமளித்துச் செயற்பட்டமை ஆகியன ஐ.ம.சு.மு. அரசின் வஞ்சக அரசியலை வெளிப்படையாகக் காட்டும் உதாராணங்கள் ஆகும்.

சந்திரிகா அரசின் பொய்மை மிக்க சமாதான நாடகம் குறித்து வெளிப்படையாக அறிந்தும் தெரிந்தும் புலிகள் தொடர்ந்து பொறுமை காத்து வருகிறார்கள் என்றால் அந்தப் பொறுமைக்கு ஆழ்ந்த அர்த்தமிருக்கிறது.

இந்த சமாதன பேச்சு வார்த்தைகள் தம்மால் குழம்பவில்லை அதற்கு புலிகள் தான் காரணம் என்று சகல நாட்டினதும் தூதரகங்களுக்குச் சனாதிபதி அடிக்கடி விளக்கங்களை அளித்து வருகிறார்.

தமது பக்கத்தில் எல்லாம் சரி என்றும் இப்போது விடுதலைப்புலிகளின் பதிலையே எதிர் பார்த்துக் காத்துத் தான் இருப்பதாகச் சில தினங்களுக்கு முன்பு ஜேர்மன் வெளிநாட்டமைச்சரிடம் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மீது போர் ஒன்றைத் தொடங்குவதற்கான பலம் தற்போது சிறீலங்கா அரசாங்கத்திற்கு இல்லையெனினும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள தமது பாதுகாப்புப் படையணிகளைப் பலப்படுத்திக் கொள்ள சகல வழிகளிலும் அரசு செயற்பாடுகளை விரிவு படுத்தி வருகிறது.

தாம் சமாதானத்திற்குத் தயாராக இருக்கின்ற போதிலும் புலிகள்தான் யுத்தத்திற்குத் தயாராகிறார்கள் என்றும் உலகம் முழுவதும் பரப்புரை செய்து இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொள்வதும் விடுதலைப் புலிகள் மீதான தப்பபிப்பிராயத்தை உலகம் முழுவதும் விதைப்பதும் இன்று சந்திரிக்கா அரசின் நோக்கமாகவுள்ளது.

இந்த நிலையில் சோர்வு அனுசரணையாளர்களும் பொர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் இன்னும் உலகவங்கி அதிகாரிகள் மனி உரிமை ஆலோசகர் என்று பலரும் அடிக்கடி வன்னிக்குப்பறந்தவண்ணம் உள்ளனர். இவர்கள் சமீபகாலமாகச் சிறீலங்கா அரசிடமிருந்து ஏதேனும் முக்கியமான செய்திகளைக் கொண்டு வருகின்றார்களா என்று பார்த்தால் உண்மையில் எதுவுமில்லை. புலிகளை நாட்பிடித்துப் பார்க்கும் வருகைகளாகவே இவையுள்ளன. அதாவது புலிகள் யுத்தத்துக்குத் திரும்பிவிடுவார்களா என்கிற அச்சத்துடன் அவர்களின் மனநிலையையறிவதற்கும் அவர்களின் சீற்றத்தைத் தணிப்பதற்குமாகவே இவர்களின் வன்னிவருகை சமீபநாட்களாக அமைந்து வருகிறது.

உண்மையில் கிளிநொச்சியில் நடந்த நிகழுச்சியொன்றில் கலந்துகொண்டு உரையபற்றிய விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்த சில கருதத்துக்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

புலிகள்தான் சமாதானத்தைக் குலைத்துப் போரை ஆரம்பித்தார்கள் என்கிற பழியைச் சுமத்துவதற்க்காகச் சிறீலங்கா அரசு ஆவலாயுள்ளது. இந்த அபத்திலிருந்து தப்பிக்கொள்வதற்காகவும் சிறீலங்காவின் பேரினவாதம் தமீழ் மக்களுக்கு எதையும் வழங்கப்போவதில்லை என்கிற யதார்த்தத்தை உலகின் மனச்சாட்சிக்குத் தெளிவுபடுத்தவும் புலிகள் அர்ப்பணிப்புடன் காத்திருப்பார்கள்.

எனினும் இன்று நடக்கின்ற நிழல் யுத்தம் மேலும் தொடருமானால் அதனை இலங்கையின் இனப்பிரச்சினையின் பால் கவனம் செலுத்துகின்ற உலக நாடுகள் வெறுமனே பார்த்துக்கெண்டு இருக்குமானால் புலிகள் தழிழ் மக்களைப் பாதுகாக்க ஒரு தற்காப்பு நடவடிக்கையேனும் மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவது தவிர்க்கவியலாத ஒன்றாக அமைந்துவிடும்.

மினி சுற்றுலா

Paris - Lourdes
Lourdes - Andora
Andora - Paris



Aller 09.07.2004 06.08.2004 20.08.2004
Retour 12.07.2004 09.08.2004 23.08.2004

பயணச்சீட்டு, தங்குமிட கட்டணம், சனி காலை, மதியம், இரவு, ஞாயிறு காலை உணவு அனைத்துடனும்
பெரியவர்கள் 150 ஈரோ சிறியவர்கள் 110 ஈரோ

அன்புடையீர் வணக்கம்!
சிறிய விடுமுறையில் லூர்து அன்னையின் தரிசனம் பெற்று அந்தோரா மலை பிரதேச காட்சிகளை பார்த்துமகிழ ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட திகதிகளில் பேருந்து பாரிசிலிருந்து வெள்ளி இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு சனி காலை லூர்து வந்தடைந்து தரிசனத்தை முடித்துக்கொண்டு, ஞாயிறு காலை அந்தோரா புறப்பட்டு மதியம் சென்றடையும். அந்தோராவிலிருந்து மாலை புறப்பட்டு திங்கள் காலை பாரிசை வந்தடையும்.

sumangali textail la chapelle
மேலதிக விபரங்களுக்கு :
theepam textail la chapelle
06 60 92 12 69 - 06 63 31 49 32



சிங்கப்பூரில் உங்கள் இல்லம்

*01-22 Belilios lane, off serangoon road, New kerbau Inn.*


கட்டணங்கள் s$40ல் இருந்து. குளிரூட்டப்பட்ட சகல அறைகளிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, சிறிய குளிர்காப்புப்பெட்டி, இணைந்துள்ள குளியல் அறை வசதிகள் உள்ளன.
கடைகளுக்கும் போக்குவரத்துக்கும் சுலபமாகச் செல்லும் வழி
திருமணச் சேவைகள், சுற்றுலா ஒழுங்கு செய்தல். விமான நிலையத்திலிருந்து ஏற்றிச்செல்லல். உங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்கு செய்யப்படும்.
முன்கூட்டியே தொலைபேசியூடாகப் பதிவுசெய்வதற்கு: 65 : 63 96 55 00 (V.புஸ்பா)
அல்லது Email: newkinn@singnet.com.sg

*New Kerbau Inn*
'தமிழில் பேசுவோம் தாய் மொழியை வளர்ப்போம்'
Management-
VIVALINK HOLDINGS

# கருணாவின் சகாக்களின் படுகொலையால்

## சிறீலங்கா பாதுகாப்பு உயர்பீடத்தில் கருத்து முரண்பாடு

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா இராணுவத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோருடன் கலந்தாலோசனை நடத்தி வருகின்றார். கருணா விவகாரத்தினால் கொழும்பில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை மற்றும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினரின் ஊடுருவல்கள் ஆகியவற்றைத் தடுப்பதற்கும் அதனைக் கண்டறிவதற்கும் விசேட ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி கட்டளையிட்டிருக்கின்றார். கொழும்பின் புறநகர்ப்பகுதியான அந்துருகிரியவில் உள்ள வீடொன்றில் கருணா குழுவைச் சேர்ந்த ஏழு பேரும் புலனாய்வு அதிகாரியொருவரும் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக விபரமான அறிக்கையொன்றை ஜனாதிபதி முப்படைத் தளபதியிடம் கேட்டிருப்பதாக அறிய வருகின்றது. ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இராணுவத் தளபதி சாந்த கொட்டகொட இராணுவ உயரதிகாரிகளை அழைத்து இன்று (நேற்று) விசேட கூட்டமொன்றை நடத்தியிருக்கின்றார்.



கருணாவோடு இணைந்து செயற்படுகின்ற இளைஞர்களின் விபரங்களை உடனடியாகத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் அந்த இளைஞர்களைத் தனிப்பட்ட முறையில் விசாரிப்பது பற்றியும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக கொழும்பு மற்றும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆங்காங்கே இருக்கின்ற கருணாவின் இளைஞர்கள் குழு பற்றிய விபரங்களை அறிவதிலேயே இராணுவத்தரப்பு கவனம் செலுத்தவுள்ளது. இந்த அவசர ஏற்பாடானது கருணாவைக் பாதுகாப்பதற்கோ அல்லது கருணாவின் குழுவைப் பலப்படுத்துவதற்கோ அல்ல. மாறாக இந்தக் குழுக்களினால் சிறீலங்காவின் இராணுவக் கட்டமைப்பிற்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை தடுத்துநிறுத்துவதற்காகவே என்று இராணுவ உயரதிகாரியொருவர் அந்தக்கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகவியலாளர் ஒருவரிடம் தெரிவித்திருக்கின்றார்.



தற்போது கருணாவுடன் இணைந்து எத்தனைபேர் செயற்படுகின்றார்கள் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் இராணுவ உயர் பீடத்திற்கு முழுமையாகத் தெரியாது. கருணா பிரச்சினை ஆரம்பித்ததில் இருந்து அந்துருகிரிய கொலைச்சம்பவம் நடைபெற்ற கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை இராணுவப்புலனாய்வுப் பிரிவுதான் கருணாவோடு இணைந்து செயற்பட்டு வந்தது. ஆனாலும் இவர்களுடைய நடவடிக்கைகள், நோக்கங்கள் அனைத்தும் இராணுவ உயர் பீடத்திற்கும் அரச உயர்மட்டத்திற்கும் அவ்வப்போது இராணுவத்தளபதி சாந்த கொட்டகொடவினால் தெரிவிக்கப்பட்டு வந்தது.

அதேவேளை கருணா குழு கொழும்பில் எங்கு தங்கியிருக்கின்றது, அல்லது வாடகைக்கு அமர்த்தும் வீடுகள் பற்றிய விபரங்கள் எதுவும் பொலிஸ் திணைக்களத்திற்கோ அல்லது இரகசியப் பொலிசாருக்கோ தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனாலும் கருணா குழுவின் முக்கிய நகர்வுகளின் போது குறித்த பகுதியில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இராணுவப்புலனாய்வு அதிகாரிகள் தகவல் கொடுத்து வந்தனர். அந்துருகிரியாவில் கருணாகுழு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அந்துருகிரிய, கொட்டாவ, ஹோமகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பொலிஸ் தலைமைச் செயலகத்துடன் முரண்பட்டிருக்கின்றனர். கருணா குழு வாடகைக்கு அமர்த்தியிருந்த வீட்டைச் சூழவுள்ள மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்குச் சம்பவம் நடந்த அன்றைய தினம் காலை 11 மணிக்கே குறித்த வீட்டை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. ஊடகவியலாளர்கள் காலை ஏழு மணி முதல் பொலிஸ் மா அதிபருடன் தொடர்பு கொண்டபோது அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என மறுத்திருந்தார். ஆனாலும் ஏ.எஸ்.பிமார் மூலமாகக் குறித்த பிரதேசத்தில் தேடுதல் நடத்துமாறு அவர் உத்தரவிட்டிருக்கின்றார்.

பொலிஸ் மா அதிபரின் இந்த உத்தரவினால் சீற்றமடைந்த குறித்த பகுதிகளைச் சேர்ந்த பொலிஸ் உயரதிகாரிகளும் (ஏ.எஸ்.பி.மார்) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் காலை 8 மணிமுதல் 11 மணி வரை பொலிஸ் திணைக்கள தலைமையதிகாரிகளுடன் வாக்குவாதப்பட்டனர். கடைசியில் இராணுவப்புலனாய்வு உயரதிகாரியின் தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே குறித்த வீடு பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டது. கருணா குழு சுட்டுக்கொல்லப்பட்ட வீட்டைக் கண்டுபிடித்த பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகள் கொலை எவ்வாறு நடந்தது, கொலை செய்தவர்கள் எவ்வாறு தப்பிச் சென்றார்கள் குறித்த வீட்டிற்கு ஏன் பொலிஸ் பாதுகாப்புப் போடப்படவில்லை போன்ற விசாரணைகளுக்கு அப்பால் கருணா குழு அந்த இடத்தில் தங்கவைக்கப்பட்டமை தொடர்பாகத் தமக்கு அறிவிக்காமை குறித்து பொலிஸ் மா அதிபருடன் எரிச்சலடைந்து பேசிக்கொண்டிருந்தமையை அங்கு நின்ற ஊடகவியலாளர்கள் அவதானித்திருக்கின்றனர். அதேவேளை பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா இராணுவத்தளபதியுடன் இந்த விடயம் தொடர்பாக அன்றைய தினமே முரண்பட்டிருக்கின்றார். ஒருவகையில் பொலிசாருக்கும் இராணுவத்திற்குமிடையே இந்த விவகாரம் குறித்து சர்ச்சை எழுந்தது என்று கூறலாம்.

பொலனறுவை ஹிங்குராங்கொட பௌத்த விகாரையில் கருணா குழு தங்கவைக்கப்பட்டமை தொடர்பாக அப்பகுதி பொலிசாருக்கு தெரியாமையினாலேயே சந்தேகத்தின் பேரில் ஹிங்குராங்கொட பொலிசார் அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தார்கள். அந்த விடயம் தொடர்பாகவும் இராணுவ உயர்பீடத்திற்கும் பொலிஸ் தலைமைப்பீடத்திற்கும் இடையே முரண்பாடு எழுந்திருந்தது. இராணுவத்தின் அழுத்தம் காரணமாக அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த விவகாரம் தொடர்பாகவும் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா தற்போது சுட்டிக்காட்டி அந்துருகிரிய சம்பவமும் அவ்வாறுதான் நடந்தது எனக்கூறி இராணுவத் தளபதி மீதே பழியைப் போட்டிருக்கின்றார். அதேவேளை நாட்டின் பாதுகாப்பு விடயங்களில் பொலிசார் இராணுவத்தோடு ஒத்துழைக்கவில்லை என இராணுவத்தளபதி சாந்தகொட்டகொட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்திடம் கூறியிருக்கின்றார்.

இவ்வாறு சர்ச்சை எழுந்தமை குறித்து இராணுவத் தளபதி நடத்திய கூட்டத்தில் பேசப்பட்டிருக்கின்றது. அது தொடர்பாக இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகளிடம் இருந்தும் விளக்கம் கோரப்பட்டிருக்கின்றது. அதாவது கருணா குழு தங்கவைக்கப்பட்ட குறித்த வீடு பற்றிய விபரம் பொலிஸ் தலைமையகத்திற்கு அறிவிக்கப்படாமை தொடர்பாகவே விளக்கம் கோரப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. அதேவேளை இராணுவத் தமைைப்பீடத்திற்குக் குறித்த அந்த வீட்டில் கருணா குழு தங்கவைக்கப்பட்ட விபரம் அறிவிக்கப்பட்டதாக இராணுவ புலனாய்வுத்துறை தெரிவித்திருக்கின்றது. அவ்வாறு அறிவித்திருந்தும் இராணுவத் தலைமையகம் ஏன் பொறுப்புடன் செயற்படவில்லை என்ற சந்தேகங்கள் அல்லது வேண்டுமென்றே குறித்த வீட்டிற்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லையா என்பது பற்றி உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விசாரணையில் இராணுவத் தலைமைப்பீட உயரதிகாரிகளும் புலனாய்வுத்துறை அதிகாரிகளும் உட்படுத்தப்படவுள்ளதாகவும் மற்றுமொரு தகவல் மூலம் அறிய முடிகின்றது. அத்துடன் சிரேஷ்ட இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி நீல் தர்மிக்க ஏன் அந்த வீட்டில் தங்கியிருந்தார் என்ற விசாரணைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (*நீல் தர்மிக்க என்ற இராணுவ புலனாய்வு அதிகாரியே, கருணா புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட காலம் முதல் அவர் இறக்கும் வரை கருணாவோடு இணைந்து செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.*)

அவ்வாறு கருணாவோடு நெருங்கிய தொடர்பும் கருணா புலிகள் இயக்கம் குறித்து வழங்கிய இரகசியத் தகவல் அனைத்தும் துல்லியமாகப் பெற்றுக்கொண்ட சிரேஷ்ட புலனாய்வுத்துறை அதிகாரி நீல் தர்மிக்கவிற்கு ஏன் பாதுகாப்பு வழங்கவில்லை என்ற விசாரணைகளும் கருணாவோடு தொடர்புபட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் மீது பாய்ந்திருக்கின்றது. ஆனால் இந்த உள்வீட்டு விவகாரங்கள் அனைத்தும் மிகவும் இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (*அதேவேளை இறந்தவர் நீல் ரூபசிங்கா அல்ல என்றும் வேறொரு புலனாய்வுத்துறை அதிகாரியே அவ்வாறு இறந்ததாகவும் சிறீலங்கா இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.*)

இராணுவம், இராணுவப்புலனாய்வுத்துறை, பொலிஸ், இரகசியப்பொலிஸ் ஆகிய மூன்று முக்கியமான துறைகளைச் சேர்ந்தவர்களும் கருணா விவகாரத்தில் முன்னுக்குப் பின் முரணான நிலையில் செயற்பட்டமை குறித்து ஜனாதிபதி சீற்றமடைந்திருக்கின்றார் என ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகவே ஜனாதிபதி கலந்தாலோசனையை நடத்தியிருப்பதாகவும் அந்தத் தகவல் மூலம் அறியக்கிடைக்கின்றது. இவ்வாறு முரண்பாடான நிலையில் செயற்பட்டால் சிறீலங்கா இராணுவக்கட்டமைப்பிலும் அதற்கான ஒழுக்கக்கோவைகளிலும் பாதிப்பை உண்டுபண்ணும் என பாதுகாப்புத்துறை கவலையடைந்திருக்கின்றது. அத்துடன் கருணாக்குழுவின் நடவடிக்கைகள் தென்பகுதியிலும் சிறீலங்கா இராணுவ சமநிலையிலும் குழப்பங்களை உண்டுபண்ணக்கூடும் என்றும் தற்போது பாதுகாப்புத்துறை சந்தேகம் கொண்டுள்ளது. கருணா விவகாரத்தை தமக்குச் சாதகமாக பயன்படுத்த முற்பட்ட சிறீலங்கா அரசாங்கத்திற்கும் இராணுவ தலைமைப்பீடத்திற்கும் அது நனைத்துச் சுமக்கும் வேலையாகவே மாறிவிட்டது. அத்துருகிரிய சம்பவம் அதனையே எடுத்துக்காட்டுகின்றது.

– கொழும்பிலிருந்து **ஊரோடி**





விசேட விலைக் கழிவு

RHYTHM

Website
rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette


790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

# இடைக்கால நிர்வாகத்துடன் இறுதித் தீர்வையும் ஆராயுங்கள்


## - இந்தியப் பிரதமர் சிறீலங்காப் பிரதமருக்கு தெரிவிப்பு -

இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெறும் போது விடுதலைப் புலிகள் தரப்பால் முன்வைக்கப்பட்டிருக்கும் வட, கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை ஆராயப்படும் அதேவேளை, இறுதித் தீர்வு விடயமும் ஆராயப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் நிலைப்பாடென்று சிறீலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் புதுடில்லி தெரியப்படுத்தியிருப்பதாக கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.



புதுடில்லிக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்ட மகிந்த ராஜபக்ச, இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வார் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோருடன் விரிவான சந்திப்புகளை நடத்தியிருந்தார். இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு உடன்படிக்கை போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இச்சந்திப்புகளின் போது ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் முக்கியமான பங்களிப்பை புதுடில்லி வழங்க வேண்டுமென பிரதமர் ராஜபகசர் வலியுறுத்தியிருந்தார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் கடந்த திங்களன்று நடத்திய பேச்சுவார்த்தையின்போது சகல சமூகங்களினதும் அபிலாசைகளை நிறைவேற்றும் இறுதித் தீர்வொன்றை நோக்கியே புலிகளுடனான உத்தேசப் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டுமெனவும், விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பாக பேசுவதாயின் அதனுடன் சமாந்தரமாக இறுதித் தீர்வு விடயமும் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் இதுவே இந்தியாவின் நிலைப்பாடெனவும் மன்மோகன் சிங், பிரதமர் ராஜபக்சவிடம் கூறியிருப்பதாகவும் இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசும் போது இறுதித் தீர்வு குறித்தும் ஆராயப்பட வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தெரிவித்திருந்த அபிப்பிராயத்தையே இந்தியாவும் கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் மன்மோகன் சிங், இறுதித் தீர்வு குறித்து தென்னிலங்கைக் கட்சிகளின் கருத்தையும் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை தெரிவித்ததாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.



# பள்ளிக்கூடங்களில் சமையல் செய்ய தடை

## மராட்டிய அரசு முடிவு

பள்ளிக்கூடங்களில் சமையல் செய்ய மராட்டிய அரசு தடை விதித்துள்ளது. கும்பகோணம் பள்ளிக் கூடத்தில் நடந்த தீ விபத்தில் 90 குழந்தைகள் பலியான சம்பவம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதுபற்றி மராட்டிய மாநில கல்வி மந்திரி அம்ரிஷ் படேல் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழ்நாட்டில் கும்பகோணம் பள்ளியில் நடந்த தீ விபத்தின் எதிரொலியாக மராட்டிய மாநிலத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் மதிய உணவு திட்டத்துக்கு பள்ளிக்கூட வளாகத்தில் சமையல் செய்ய தடை விதித்துள்ளோம்.

மாநிலம் முழுவதும் 75 ஆயிரம் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. 3 சதவீதம் பள்ளிகளில் தான் மதிய உணவு தயாரிக்க போதிய வசதி இருக்கிறது. மற்ற பள்ளிக் கூடங்களில் மதிய உணவு தயாரிக்க எந்த வசதியும் இல்லை. எனவே பள்ளிக்கூடங்களுக்கு வெளியே சமையல் செய்து, மதிய உணவை பள்ளிக்கூடங்களுக்கு கொண்டு வந்து மாணவர்களுக்கு பரிமாறுவது பற்றி ஆலோசனை செய்து வருகிறோம். மும்பையில் 1,184 நகரசபை பள்ளிகளில் `கிச்சடி' போன்ற உணவை தயாரித்து பள்ளிகளுக்கு சப்ளை செய்கிறார்கள். இதுபோல் மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் வெளியே உணவை சமைத்து பள்ளிக்கூடங்களுக்கு சப்ளை செய்ய முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.



துருக்கியில் கடந்த 22ம் திகதி இரவு இடம்பெற்ற தொடருந்து விபத்தொன்றில் 36 பயணிகள் பலியாகி, 60 மேற்பட்டவர்கள் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். வேகமாக வளைவென்றில் திரும்பும்போதே தொடருந்து தடம்புரண்டது என்று இச்சம்பவத்தில் காயமடைந்த பயணி ஒருவர் தெரிவித்துள்ளார். துருக்கியின் இஸ்தான்புல் - அங்காரா பிரதேசங்களுக்கு இடையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

# இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவுக்கு உண்மையான அக்கறை கிடையாது

## - முன்னாள் இந்திய அமைச்சர் கூறுகிறார் -

இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவுக்கு உண்மையான அக்கறை கிடையாது என்று முன்னாள் அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரன தெரிவித்திருக்கிறார். இலங்கையின் இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளில் இந்தியா உண்மையான அக்கறை கொள்ளவில்லை என்று முன்னாள் முதல்வர் மறை-ந்த எம்.ஜி.இராமச்சந்திரனின் நெருங்கிய சகாவும் முன்னாள் அமைச்சருமான பண்டிருட்டி இராமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார்.

சமாதான முயற்சிகளில் அக்கறை கொண்டிருப்பது போல் உலகத்தை இந்தியா ஏமாற்றி வருவதாகவும் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் பண்டிருட்டி இராமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார். விடுதலைப் புலிகளை முறியடிப்பதே இந்தியாவினதும் சிறீல-ங்கா அரசாங்கத்தினதும் வஞ்சகமான எண்ணம் என்றும் அவர் கூறி இருக்கிறார்.

முற்போக்கு ஜனநாயக முன்னணியின் குறைந்த பட்ச செயற்திட்டத்தில் இலங்கையின் சமாதான முயற்சிகளை வரவேற்பதாகத் தெரிவித்திருக்கும் நிலையில், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசாங்கம் அனுசரணை வழங்குமா என்று செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த இராமச்சந்திரன், சமாதான முயற்சிகளில் மிகவும் குறைந்த பட்ச அக்கறையை இந்தியா கொண்டிருக்கும் போது அனுசரணை வழங்கும் பேச்சுக்கே இடமில்லை என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்பது குறித்த கேள்விக்குப் பதிலளித்த இராமச்சந்திரன், சொந்த நாட்டில் கிளர்ச்சி செய்து வரும் நாகலாந்து தீவிரவாத அமைப்புக்களுடன் இந்தியா பேச்சு நடத்தும் போது விடுதலைப் புலிகள் மீதான தடையை ஏன் நீக்க முடியாது என்று கேள்வி எழுப்பினார். விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் தாமதமாவதற்கு இரு தரப்பினருக்கும் இடையே நம்பிக்கை நிலவாதிருப்பதே காரணம் என்று தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் உண்மையாகவே சமாதானத்தீர்வை விரும்புகிறார்களா என்று இறுதி வரை பொறுமையைச் சோதிக்க சந்திரிகா குமாரதுங்க முயல்வதாகவும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அமைக்க அரசாங்கம் தயாரா என்பதை உறுதிப்படுத்த விடுதலைப் புலிகள் விரும்புவதாகவும் இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.


சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்
N.S.Jewellery
(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)


உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.
சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.
N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich
Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

# தடுப்புச்சுவரை இடிக்க வேண்டும் ஐ.நா. தீர்மானம்

## - இஸ்ரேல், அமெரிக்கா எதிர்ப்பு -

மேற்குக்கரையில் உள்ள பாலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேல் கட்டி இருக்கும் தடுப்புச்சுவரை சர்வதேச நீதிமன்ற உத்தரவப்படி இடிக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 149 நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. வழமைபோல அமெரிக்கா உள்பட 6 நாடுகள் மட்டுமே எதிர்த்து வாக்களித்தன. 191 உறுப்பினர்கள் கொண்ட பொதுச்சபையில் நடந்த வாக்கெடுப்பில் 10 நாடுகள் கலந்து கொள்ளவில்லை.



25 நாடுகளைக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் கூறிய யோசனைகளையும், மாற்றங்களையும் அரபு நாடுகள் ஏற்றுக் கொண்டதால் அவை தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. இந்தத் தீர்மானம் ஒருதலைப் பட்சமானது. அமைதி முயற்சியைப் பாதிக்கக் கூடியது என்று கூறி அமெரிக்கா எதிர்த்தது.

"600 கி.மீ. நீளத்தடுப்புச் சுவர் தற்கொலைப் படையினர் இஸ்ரேலுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காகக் கட்டப்பட்டது" என்று கூறி ஐ.நா. சபை தீர்மானத்தை இஸ்ரேல் ஏற்க மறுத்துவிட்டது. "தற்காப்புக்காகத்தான் தடுப்புச் சுவர் கட்டப்படுகிறது. அதை விட்டுக்கொடுக்க முடியாது" என்று கூறிய இஸ்ரேல், தொடர்ந்து தடுப்புச்சுவர் கட்டப்படும் என்றும் அறிவித்துள்ளது. ஆனால் பாலஸ்தீனியர்கள் தங்கள் நிலம் பறிக்கப்பட்டு இருப்பதாகவும், தனி நாடு என்ற இலட்சியத்தை அடைவதற்கான தடைக் கல்லாகவும் இந்தத் தடுப்புச்சுவரைப் பார்க்கிறார்கள்.

# ஈராக்கில் 3 இந்தியர்கள் உட்பட ஆறு பணியாளர்கள் கடத்தல்


ஈராக்கில் 3 இந்தியர்கள் உட்பட ஆறு பணியாளர்கள் பணயக் கைதிகளாக கடத்தப்பட்டுள்ளனர். அவர்களுடைய தலையை துண்டிக்கப் போவதாக தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். கடத்தப்பட்டவர்களில் 3 இந்தியர்கள், 2 கொரிய நாட்டுக்காரர்கள், ஒரு எகிப்தியர் அடங்கியுள்ளனர். இவர்கள் குவைத் நாட்டில் உள்ள ஒரு நிறுவனத்தில் வேலை பார்க்கிறார்கள். பணி சம்பந்தமாக இவர்களை அந்நிறுவனம் ஈராக் நாட்டுக்கு அனுப்பி வைத்தது. அங்கு இவர்களை "கறுப்புக் கொடிகள்" என்ற இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டனர்.

"கடத்தப்பட்ட 3 இந்தியர்கள் உள்ளிட்ட 6 பேர் பணி புரியும் குவைத் நிறுவனம் ஈராக்கில் உள்ள தனது அலுவலகங்களை உடனடியாக மூடிவிட்டு ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் தங்கள் பிடியில் இருக்கும் 6 பேரையும் தலையை துண்டித்து கொன்று விடப்போவதாகவும், 3 நாளைக்கு ஒருவர் வீதம் அவர்களை கொலை செய்யப்போவதாகவும் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



கடத்தப்பட்ட பணயக் கைதிகள்

கடத்தப்பட்டவர்களை தீவிரவாதிகள் வீடியோப் படமாக எடுத்து அதன் மூலம் தங்கள் கோரிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வீடியோப் படத்தை துபாயில் உள்ள அல்-அரேபியா தொலைக் காட்சி ஒளிபரப்பியது. அந்த வீடியோப் படத்தில் கடத்தப்பட்ட எகி-ப்து நாட்டு பணயக் கைதி பேசும் காட்சியும் இடம்பெற்றுள்ளது. தனது பெயரை முகமது அலி சனாத் என்று கூறிக் கொண்ட அவர், தாங்கள் பணிபுரியும் குவைத் நிறுவனம் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார்.



விடுவிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் கைதி


இதேவேளை, தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பிலிப்பைன்ஸ் கைதி ஒருவர், பலிப்பைன்ஸ் ஈராக்கில் இருந்து வெளியேறுவதாக அறிவித்ததையடுத்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

### ஜப்பான் சிறுவர்களுக்கு கத்தி துளைக்காத ஆடைகள்!

சிறுவர்களுக்கான கத்தி துளைக்காத ஆடைகளை ஜப்பானிய நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. 2003ம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்கு ஜப்பானில் ஒரு தொடக்கப்பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்த ஒருவன் கத்தியால் மாணவர்களைத் தாக்கினான். கடந்த ஜூன் மாதம் 11 வயது மாணவி ஒருத்தி தன் வகுப்புத் தோழியைக் கத்தியால் குத்தினாள். இதுபோன்ற சம்பவங்களால் கத்தி துளைக்காத ஆடைகளை உருவாக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இராணுவத்தில் பயன்படுத்தப்படும் குண்டு துளைக்காத ஆடைகள் எந்தத் துணியால் தயாரிக்கப்படுகின்றனவோ அதே துணியில்தான் சிறுவர்களுக்கான கத்தி துளைக்காத ஆடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

# தீ விபத்தில் பலியான குழந்தைகளுக்கு ஜனாதிபதி அப்துல்கலாம் கவிதை

கும்பகோணம் பள்ளிக்கூடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 91 குழந்தைகள் பலியான சம்பவம் குறித்து ஜனாதிபதி அப்துல் கலாம் இரங்கல் தெரிவித்து கவிதை எழுதியுள்ளார். அந்தக் கவிதை வருமாறு



அன்று ஏன் கதிரவன் கடும்கரும் மேகங்களை ஊடுருவவில்லை
அன்று ஏன் கும்பகோணத் தென்றல் கனலாக மாறியது
அன்று ஏன் தாயுள்ளங்கள் பதறித் துடித்தன
இளஞ்சிறார்கள் அக்னித் தேவனின் சினத்தில் தத்தளித்தனர்
அன்று ஏன் அச்சிறார்கள் இறைவன் அக்னிக் குஞ்சுகளாக பரிணமித்தான்?
இறைவா இதுவோ கொடுமையிலும் கொடுமை
வளர்ந்து கல்விகற்று பணிசெய்யும் பருவத்தில்
பழுத்த வயதில் மறைந்த தாய் தந்தையரை பூமிக்கு கொடுப்பர்
இன்றோ காண்பது கொடுமையிலும் கொடுமை
பாலர்களை ஒவ்வொன்றாய் தந்தையர் பூமியில் புதைக்கும் காட்சி.
தாய்கண்ட கனவு, தந்தை கண்ட கனவு, சிறார்கள் கண்ட கனவு
எல்லாமே அக்னியின் வேகத்தில் கரிக்குஞ்சாய் பரிணமித்தன;
இறைவா குழந்தைகள் உன் படைப்பு - அவர்கள்
உன்னிடமே அடைக்கலத்தில் அடைந்தார்கள்
உன் அருளால் அக்குழந்தைகள் எங்கிருப்பினும் நன்றிருக்க.
கையேந்தி பிரார்த்திக்கிறோம் கையேந்தி பிரார்த்திக்கிறோம்
இறைவா உன் அருளால் - தம் குழந்தைகளை இழந்து
தவிக்கின்ற பெற்றோருக்கு மன அமைதி பாக்கியத்தை
மறுபடியும் வாழ்விலருள் - அவர்கள் எப்பொழுதும்
உனைநம்பி அமைதி வாழ்வு வாழ பிரார்த்திக்கிறேன்.



# கருணா ஆதரவாளர் தமிழ்நாட்டில் கைது

இலங்கைத் தமிழர்கள் முகாமில் ஊடுருவியிருந்த கருணாவின் ஆதரவாளர் ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. வேலூரை அடுத்த வாலாஜா பேட்டையில் பாலாறு அணைக்கட்டு என்ற இடத்தில் இலங்கைத் தமிழர்கள் அகதி முகாம் உள்ளது. இந்த முகாமில் 150 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இம்முகாமில் புதியவர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, பொலிசார் சோதகைளை மேற்கொண்டனர்.

இதன்போது, இலங்கையைச் சேர்ந்த சிலர் இங்கு வந்து செல்வதாகவும், அவர்கள் வரும்போது ஏதாவது பொதிகளைக் கொண்டு வருவதாகவும் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தமை பற்றி உறுதிப்படுத்திக்கொண்டனர். இதனால், வேலூர் மாவட்டச் சிறப்புப் புலனாய்வு பிரிவுப் பொலிசார் முகாமைக் கண்காணித்து வந்தனர். கடந்த சில தினங்களுக்கு முன் 30 வயது மதிக்கத்தக்க வாலிபர் அங்கு இரகசியமாகத் தங்கி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து பொலிசார் அவரிடம் விசாரணை நடத்தினர். விசாரணையில், அவர் பெயர் சிறீதரன் (30) என்றும், இலங்கை மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த அவரிடம் கடவுச்சீட்டு உட்பட எந்த ஆவணங்களும் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

கருணா ஆதரவாளரான இந்த நபர், சண்டையிலிருந்து தப்பிவந்து விட்டதாகவும், இவரைப் போல நூற்றுக்கும் மேற்பட்டோர் தப்பி, இந்தியாவுக்குள் வந்து விட்டதாகவும் தெரியவந்துள்ளது. ஆனால், பிடிபட்ட நபர் அடிக்கடி சென்னைக்குச் சென்று வந்ததாகவும், வரும்போது பொதிகளைக் கொண்டு வந்ததாகவும், இந்த நபரைப் போன்றே மேலும் பத்துப் பேர் இங்கு வந்திருப்பதாகவும் பொலிசார் நடத்திய விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. இதையடுத்து, பொலிசார் சிறீதரனைக் கைது செய்து, சென்னையிலிருந்து கொண்டு வந்த பொருட்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். தொடர்ந்து வேலூர் மாவட்டத்திலிருக்கும் நான்கு இலங்கைத் தமிழர்கள் முகாமிலும் பொலிசார் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

# நீலவாணி எண்டர் பிறைஸ்

## இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு

## பேர்ண் மாநகரில்

# மாபெரும் மலிவு விற்பனை

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| உடன் இலங்கை மீன் வகைகள் 1Kg | 7.50Fr | 6.90Fr |
| உடன் இலங்கை நண்டு கணவாய் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| இலங்கை கீரை வகைகள் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| மரவள்ளி | 3.80Fr | 3.00Fr |
| இராச வள்ளி | 8.00Fr | 5.50Fr |
| வெண்டி, புடோல், பூசணி, முருங்கை | 5.50Fr | 3.80Fr |
| உள்ளி | 3.00Fr | 1.75Fr |
| சின்ன வெங்காயம் | 8.00Fr | 5.50Fr |
| தாய்லாந்து பயற்றங்காய், பாகற்காய் | 9.00Fr | 7.35Fr |
| நெஸ்டோமோல்ட் | 6.90Fr | 5.50Fr |
| விவா | 8.90Fr | 6.90Fr |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | 5.90Fr |
| மைலோ | 6.90Fr | 5.90Fr |
| நெல்லி ரசம் (தோலகட்டி) | 6.50Fr | 5.40Fr |
| பழரச வகைகள் | 6.50Fr | 5.40Fr |
| லெமன் பஃப் | 2.50Fr | 1.25Fr |
| டி டைம் | 3.50Fr | 2.50Fr |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | 4.80Fr |
| ஃபமிலி ஷசேட்மன்ட் | 4.80Fr | 3.50Fr |
| கிறிம் கிறேக்கர் | 2.50Fr | 1.70Fr |
| சீனி சம்பல் | 5.50Fr | 4.20Fr |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | 4.20Fr |
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | 4.20Fr |
| ஜாம் வகைகள் | 3.90Fr | 3.10Fr |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | 9.60Fr |
| தேங்காய் பால் பவுடர் 350g | 5.95Fr | 4.50Fr |
| தேங்காய் பால் பவுடர் 150g | 3.15Fr | 2.10Fr |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| புழுங்கல் அரிசி 5Kg | 12.50Fr | 9.30Fr |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| சம்பா 5 Kg | 13.50 Fr | 9.30Fr |
| சம்பா 1Kg | 2.50Fr | 1.90Fr |
| பசுமதி அரிசி 5Kg | 12.00Fr | 7.50Fr |
| U.S.A அரிசி 25 Kg | 35.00 Fr | 28.50Fr |
| மைசூர் பருப்பு 2Kg | 5.50Fr | 3.50Fr |
| நல்லெண்ணெய் 375 Ml | 6.90Fr | 4.90Fr |
| 750 Ml | 11.90Fr | 9.40Fr |
| வறுத்த அரிசி மா 1 Kg | 3.90Fr | 2.90Fr |
| யாழ்.மிளகாய்தூள் 900g | 9.60Fr | 7.90Fr |
| கிங்ஸ், லீலா, சூரியா 500g | 5.50Fr | 4.30Fr |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.90Fr | 9.90Fr |
| உடன் ஆட்டிறைச்சி பங்கு 1Kg | 9.50Fr | 8.00Fr |
| உடன் ஆட்டிறைச்சி தொடை 1Kg | 14.00Fr | 11.00Fr |
| உடன்கோழி | 6.50Fr | 5.50Fr |
| மைசூர் பருப்பு 500g | 1.90Fr | 1.20Fr |
| உழுத்தம் பருப்பு 2kg | 5.90Fr | 4.50Fr |
| உழுத்தம் பருப்பு 500g | 1.90Fr | 1.20Fr |
| கடலைப் பருப்பு 2kg | 5.90Fr | 4.50Fr |
| கடலைப் பருப்பு 500g | 1.90Fr | 1.30Fr |
| கடலை 2kg | 6.90Fr | 4.50Fr |
| கடலை 500g | 1.90Fr | 1.30Fr |
| பயற்றம் பருப்பு 2kg | 6.90Fr | 4.50Fr |
| பயற்றம் பருப்பு 500g | 1.90Fr | 1.30Fr |
| உழுத்தம் பருப்பு கோதுடன் 2kg | 5.90Fr | 4.50Fr |
| உழுத்தம் பருப்பு கோதுடன் 500g | 1.90Fr | 1.20Fr |
| அவித்து அரித்த சுத்தமான கோதுமை மா 5 kg | 14.90Fr | 12.90Fr |
| மீன் ரின் (இலங்கை) | 2.70Fr | 2.00Fr |
| பழப்புளி 400g | 2.30Fr | 1.50Fr |
| நெக்டோ 1.5 ட | 3.50Fr | 2.50Fr |
| நெக்டோ 375 ml | 2.50Fr | 1.50Fr |
| ஆடு, மாடு, கோழி கறிக்கூடு | 5.90Fr | 4.90Fr |
| ரொட்டி | 4.00Fr | 3.00Fr |

**மீன்வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் இலவசம்**

இங்கு குறிப்பிடப்படாத மேலும் பல பொருட்கள்
அதி குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம்
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட
கழிவு உண்டு

**வாருங்கள்! நுகருங்கள்!**
**நல் ஆதரவைத் தாருங்கள்!!!**

**Bubenbergplatz 8 - 3011 bern**
**Tel: 031 -312 17 50**
**Natel: 079-300 37 49**
**Fax: 031 - 312 17 49**
பேர்ண் பெரிய தபால் நிலையத்துக்கு அருகே

காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்
எமது ஸ்தாபனம் உங்களுக்காக 365 நாட்களும் திறந்திருக்கும்

sw-70

# கருணாவின் கைக்கூலிகள் 7 பேர் சுட்டுக்கொலை

## இராணுவ புலனாய்வுப் பிரிவை சேர்ந்தவரும் பலி?

## கொட்டாவ வீட்டின் மீது அதிகாலை தாக்குதல்

*(01ம் பக்கத் தொடர்ச்சி)*

### அதிகாலை தாக்குதல்

கொட்டாவ - அத்துருகிரிய வீதியிலுள்ள வித்தியாலய மாவத்தையில் பாம் லேன் உள்ளது. இந்த ஒழுங்கையிலிருக்கும் அடர்ந்த றப்பர் தோட்டமொன்றினுள் 'கிறிஸ்டல் ரெரஸ்' வீட்டுத் திட்டமுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்திலுள்ள ஆடம்பர மாடி வீட்டிலேயே நேற்று அதிகாலை 3.40 மணிக்கும் 4 மணிக்குமிடையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வீட்டின் மேல் மாடியிலுள்ள இரண்டு அறைகளிலும் மாடிப் போட்டிக்கோ பல்கனியிலும், இறந்தவர்களின் சடலங்கள் கிடந்துள்ளன.

சடலங்களுக்கு அருகே ரி.56 ரக சிறிய ரகத் துப்பாக்கியின் வெற்றுத் தோட்டாக்களும் கிடந்துள்ளன.

அத்துடன் சடலங்களுக்கு அருகே கையடக்கத் தொலைபேசிகள், பயணப் பொதிகள், சிறிய ரக வானொலிகள், சீட்டுக் கட்டுகள், பெருமளவு 'கிற்' இணையத்தள தொடர்பு அட்டைகளும் இருந்துள்ளன.

கொல்லப்பட்டவர்களில் நால்வர் முழுக்காற் சட்டையுடன் மேலாடையின்றியும் ஏனையோர் சாரம் அணிந்தவாறும் கிடந்தனர்.

மேல் மாடியின் ஓர் அறையில் நால்வரின் சடலங்கள் அருகருகே பாய்களிலும் இன்னொரு அறையில் இருவரின் சடலங்கள் பாயொன்றிலும் இரத்த வெள்ளத்தில் கிடந்தன.

ஏனைய இருவரது சடலங்கள் அரைகுறையாகச் சாரம் அணிந்த நிலையில் பல்கனி போட்டிக்கோவில் கிடந்தன.

இவர்கள் இருவரும் துப்பாக்கிச் சூடுபட்டுத் தப்பியோடிய போது துரத்திச் சுடப்பட்ட போதே இவ்விடத்தில் வந்து வீழ்ந்து இறந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

நேற்று அதிகாலை நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து, இணையத் தளமொன்று வெளியிட்ட செய்தியை அடுத்து, செய்தியாளர்கள் அதிகாலையிலேயே கொட்டாவ காவல்துறையினருடன் தொடர்பு கொண்டபோதும், இதுபற்றி எதுவுமே தங்களுக்குத் தெரியாதென அவர்கள் கூறிவிட்டனர்.

தொடர்ந்தும் செய்தியாளர்களின் தொந்தரவையடுத்து கொட்டாவ பகுதியில் தேடுதல் நடத்திய காவல்துறையினர், இராணுவத்தினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் நீண்ட நேரத்தின் பின் முற்பகல் 11 மணியளவில் இந்த வீட்டைக் கண்டு பிடித்துள்ளனர்.

காவல்துறையினர் இராணுவத்தினர் மற்றும் பெருமளவு ஊடகவியலாளர்கள் இந்த வீட்டை முற்றுகையிட்ட போதே, அப்பகுதி மக்கள் நிலைமையை உணர்ந்து கொண்டனர்.

இப்பகுதியில் பழத்தோட்டங்கள் இருப்பதால் அங்கு வரும் குரங்குகளை விரட்ட வெடிகள் கொளுத்திப் போட்டிருக்கலாமெனத் தாங்கள் கருதியதாக ஒரு சிலர் கூறினர்.


ஆனாலும், அப்பகுதியைச் சேர்ந்த பெரும்பாலானோருக்கு எதுவுமே தெரியவில்லை..

### ஆடம்பர பங்களா

வீட்டின் உட்புறம் மிகவும் ஆடம்பரமாயிருந்ததுடன், தேவையான அனைத்துத் தளபாடங்களும் பொருட்களும் இருந்துள்ளன.

வீட்டின் உரிமையாளர் அண்மையில் குடும்பத்துடன் இந்தியா சென்றுள்ளார்.

அங்கு செல்வதற்கு முன் வீட்டைப் பத்திரிகை விளம்பரம் மூலம் ஒருவருக்கு, மாதம் 11 000 ரூபாவுக்கு வாடகைக்குக் கொடுத்துள்ளார்.




இரண்டு வாரங்களுக்கு முன் கடந்த 2 ஆம் திகதி அவர் இந்த வீட்டைப் பொறுப்பேற்றுள்ளார். எனினும், வீட்டை வாடகைக்குப் பெற்றது யார் என்ற விபரம் உடனடியாகத் தெரியவரவில்லை. அயினும் சிறீலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினரே இதை வாடகைக்குப் பெற்றதாகச் சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஏழாம் திகதி இந்தக் குழு இந்த வீட்டிற்கு வந்துள்ளது. இரு நாட்களுக்கு முன் வீட்டில் திருத்த வேலையும் நடைபெற்றுள்ளது. அதேநேரம், இந்த வீட்டிற்கு வந்து செல்லும் இளைஞர்கள் குறித்து கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் காவல்துறையினருக்கு அநாமதேயத் தகவல் ஒன்றும் கிடைத்திருந்தது. இவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாமோ என்று அவர்கள் சந்தேகப்பட்டபோது பாதுகாப்பு உயர் பீடம் இந்த விடையத்தில் தலையிட வேண்டாம் என்று அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியதாகத் தனது பெயரை வெளியிட விரும்பாத காவல்துறை அதிகாரி ஒருவர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார். இந்த நிலையிலேயே நேற்று அதிகாலை இந்தக் கொலைகள் நடைபெற்றுள்ளன.

வெடிச் சத்தம் கேட்ட பின்னர் இருளினூடாக இருவர் நடந்து சென்றதை அயலவர்கள் சிலர் அவதானித்துள்ள போதிலும் அவர்கள் இதனைப் பொருட்படுத்தவில்லை. எனினும் பொலிஸ் விசாரணையின்போது, அவர்கள் இதுபற்றிக் கூறியுள்ளனர்.

இதே நேரம், அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பிலிருந்து சிலர், மட்டக்களப்பிலுள்ள விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களுடன் தொலைத் தொடர்புப் பரிமாற்றம் செய்ததை இராணுவத்தினர் தங்கள் வானொலிக் கருவி மூலம் ஒட்டுக் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்றதொரு தகவல் பரிமாற்றம் மட்டக்களப்பு - அம்பாறையிலுள்ள விடுதலைப் புலிகளுக்கிடையில் நடைபெற்



றதையும் கிழக்கு மாகாண இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் ஒட்டுக் கேட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

முற்பகல் 11 மணியளவில் மேற்படி வீட்டைப் பொலிஸாரும் படையினரும் கண்டுபிடித்தபோதும், மாலை 4 மணிக்குப் பின்பே வீட்டுக்குள் செல்ல, பல்வேறு நிபந்தனைகளுடனும் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

தங்களை உடனடியாக உள்ளே செல்ல அனுமதிக்குமாறு ஊடகவியலாளர்கள் பல தடவை வற்புறுத்திய போதிலும் அவர்களை அனுமதிக்கப் படையினர் மறுத்தமை அங்கு கூடிய ஊடகவியலாளர்கள் மத்தியில் பல்வேறு ஊகங்களையும் எழுப்பியது.

நண்பகல் 12 மணியளவில் அவ்விடத்திற்குச் சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் பிற்பகல் 3 மணிக்குப் பின்பே வீட்டினுள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதே நேரம், வீட்டினுள் வெடிகுண்டுகள் ஏதும் பொருத்தப்பட்டிருக்கலாமெனக் கூறி அங்கு, குண்டு செயலிழக்க வைக்கும் படையினர் வரவழைக்கப்பட்டு நீண்ட நேரம் தேடுதலும் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில், கருணாவின் வலது கரமான குகநேசன், கருணாவின் நீண்டகால மெய்ப்பாதுகாவலரும் நெருங்கிய சகாவுமான காஸ்ரோ, ஆர்ப்பரன், கேசவன், ரூபன், விக்கி, இமல்காந்த் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நீல் தம்மிக்க (மாத்தளை) ஆகியோரே உயிரிழந்ததாக இணையத்தளம் தெரிவித்தது.

இதேவேளை, இந்த தம்மிக்க இராணுவத்தைச் சேர்ந்தவரென அங்கு நின்ற சில பொலிஸார் கூறிய போதிலும் பின்னர் அதனை அவர்கள் மறுத்துவிட்டனர்.

அத்துடன், இந்த வீட்டில் பெருமளவு மிக நவீன ஆயுதங்களிருந்ததாகவும் அவற்றை அப்புறப்படுத்துவதற்காகவே, மிக நீண்டநேரம் எவரையும் *(ஊடகவியலாளர்கள் உட்பட)* வீட்டினுள்ளே பொலிஸார் அனுமதிக்கவில்லை எனவும், ஊடகவியலாளர்கள் பொலிஸாருடன் வாதம் செய்த போதும் அவர்களை அனுமதிக்க மறுத்துவிட்டனராம்.

### நவீன கார்

இதேவேளை, இந்த வீட்டில் நவீன ரக புதிய கார் ஒன்றும் நின்றுள்ளது. இக்கார் இங்கிருந்தவர்களின் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

டபிள்யூ.பி.ஜீ. 7 0297 நிசான் சனி சுப்பர் சலூன் சாம்பல் நிற ரொயோட்டா காரே அதுவாகும்.

சம்பவம் நடைபெற்ற பகுதிக்குப் பிற்பகல் 3 மணியளவில் வந்த ஹோமாகம மாவட்ட நீதிபதி மரண விசாரணைகளை நடத்திப் பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டார்.

இறந்தவர்களின் தலையிலும் மார்பிலுமே துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

கடந்த மாத பிற்பகுதியில் பொலநறுவை மாவட்டம் ஹிங்குராக்கொட போதிறுக்காராம விகாரையில் இரு வாகனங்களில் ஆயுதங்களுடன் வந்து தங்கியிருந்தபோது, பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குகநேசன் தலைமையிலான குழுவிலிருந்த ஒரு சிலரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

குகநேசன் என்பவரே தற்போது கருணாவின் அறிவுறுத்



தல்களைப் பெற்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து கிழக்கில் பெரும் குழப்பங்களையும் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களையும் மேற்கொண்டு வந்ததாகவும் முன்னர் இவர் நிதிப்பிரிவு பொறுப்பாளராயிருந்ததாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஆர்ப்பரன் என்பவர், மட்டக்களப்பு நகரப் பொறுப்பாளர் சேனாதி உட்பட பலரது கொலைகளுக்கும் காரணமாயிருந்தவரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொட்டாவவில் இன்று இடம்பெற்ற சம்பவம் பாரிய போர் நிறுத்த மீறல் என ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக இன்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள ஜே.வி.பி., இச்சம்பவதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளே தொடர்புபட்டிருப்தாகவும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகக் கொழும்பின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி தேசிய பாதுகாப்புக்கே பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், தனது அறிக்கையில் ஜே.வி.பி. அச்சம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவம் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை எவ்விதத்திலும் பாதிக்காதென சிறீலங்காவின் சட்ட மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் காரணமாக மீண்டும் போர் ஒன்று ஏற்படுமென பொதுமக்கள் அஞ்சத் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பாக 'Tamil Net' இணையத்தளமே முதன் முதலில் தகவல் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள திலக் ரணவிராஜா, குறிப்பிட்ட சம்பவம் தொடர்பான தகவல் அந்த இணையத்தளத்துக்குச் சென்றடைந்தமை தொடர்பாக விசாரணைகள் இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இச்சம்பவத்தில் பலியான எட்டுப் பேரினது சடலங்களும் பிரேத பரிசோதனைக்கு அனுப்பட்டுள்ளதாகவும், பிரேத பரிசோதனை முடிவுகள் வெளியான பின்னரே



இச்சம்பவம் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் சிறீலங்கா காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இன்று சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்களுள் சிறீலங்கா புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குவதாக வெளியான செய்திகளைச் சிறீலங்காவின் தேசியப் பாதுகாப்புச் சபை மறுத்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ள தேசியப் பாதுகாப்புச் சபை, இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கும், சிறீலங்கா புலனாய்வுத் துறையினருக்கும் இடையில் எதுவிதத் தொடர்புகளும் இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இக்கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் தாம் ஆரம்பித்துள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் குரல் தரவல்ல அதிகாரி டிஸா பின் போகா தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் இச்சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று தகவல்களைச் சேகரித்து வருவதாகவும், இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார் என்பதைத் தம்மால் கூறமுடியாதுள்ளதாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

# கருணாவைத் தொடர்ந்து பயன்படுத்தத் திட்டமா?

கிழக்குப் பகுதி நிலவரத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் எத்தனித்ததன் விளைவாக போர்நிறுத்த ஒப்பந்தம் தொடரப்படுவதில் பெருத்த நெருக்கடி உருவாகியிருக்கிறது.

இப்போது கிழக்குப் பகுதியில் தினமும் ஏதாவதொரு வன்முறைச் சம்பவம் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்ற அதே வேளை, இதன் எதிரொலியாக தென்பகுதியலும் ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தகைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டுதான், முன்னாள் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சரும், சமாதானப் பேச்சுக்கான அரச தரப்புக் குழுவில் தலைமை வகித்தவருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எச்சிரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார்.



அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாடு முடிவடையும் கட்டத்தில் இருக்கிறது. கிழக்கில் நிலவும் சம்பவங்களால் - இத்தகைய சூழல் நாட்டின் பலபகுதிகளுக்கும் பரவக்கூடிய ஆபத்து உருவாகியிருக்கிறதென அவர் மேலும் எச்சரித்திருக்கிறார்.

பீரிசின் இந்த எச்சரிக்கை ஒருபுறம் இருக்க, இப்போது வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகங்களனைத்திலும் கூட இப்படிப்பட்ட போர் பற்றிய எச்சரிக்கைச் செய்திகள்தான் அதிகம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டன. அதனை மீளவும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் பலமுறை எடுக்கப்பட்ட போதும், இதுவரை வெற்றிபெற முடியவில்லை.

ஆனால் நாளாக நாளாக இந்த இடைவெளி அதிகரித்துக் கொண்டிருக்கிறதே தவிர குறைவதற்கான அறிகுறிகளைக் காணவில்லை.

இதனை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இப்போது முக்கியத்துவம் குறைந்து போர் நிறுத்த உடன்பாட்டை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம்தான் இப்போது அதிகரித்திருக்கிறது.

இந்தளவுக்கு போர்நிறுத்த உடன்படிக்கை முடிவடைந்துவிடுமோ என்ற பயம் பல்வேறு மட்டங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. இராணுவத் தளபதியும் கடற்படைத் தளபதியும் இணைந்து அண்மையில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் அரசபடைகள் எப்போதும் போருக்குத் தயாரான நிலையிலேயே இருப்பதாகவும், அதன் அடிப்படையிலேயே படைகள் நவீனமயப்படுத்தப்பட்டு வருவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னர், கிழக்கில் ஏற்பட்ட சூழ்நிலைகளையடுத்து கருத்து வெளியிட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அரசாங்கம் புலிகள்மீது போரைத் திணித்து வருவதாகவும், இப்படிப்பட்டதொரு சூழலில் போரை எதிர்கொள்வதற்குப் புலிகள் தயார் என்றும் அறிவித்தார்.

இப்படி இரு தரப்பில் இருந்தும் போருக்குத் தயார் என்ற சூடான அறிவிப்புக்களும் இப்போது வெளிவரத்தொடங்கியிருக்கின்றன. திடீரென ஏற்பட்ட இந்த நிலைமைக்கு முற்றிலும் அரசாங்கத்தரப்பே காரணம். கிழக்கில் விடுதலைப் புலிகளின் தளபதியாக இருந்த கருணா, பிரிந்து செல்லப்போவதாக அறிவிக்க, இதைப் பயன்படுத்தியது அரசாங்கம். புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவை அரவணைத்துக்கொண்டு இராணுவப் புலனாய்வுத்துறை புலிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாகவே இப்போதைய நெருக்கடியான சூழல் எழுந்திருக்கிறது.

கருணா விவகாரத்தால் ஏற்பட்டிருக்கும் இந்நெருக்கடியைத் தணிப்பதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பெரும் போராட்டத்தில் இறங்கியிருக்கிறது. அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் பேச்சு நடத்திவிட்டு கிளிநொச்சிக்கு வந்து பேச்சுக்களை நடத்தினார் கண்காணிப்புக்குழுவின் தலைவர்.

இதன்போது புலிகள் கிழக்கில் கருணா குழு மற்றும் ஈ.பி.டி.பி போன்ற ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் புலிகள் சந்தித்துக் கேட்டனர்.

இந்தச் சூழலில்தான் இன்னொரு செய்தியும் வெளியாகியிருக்கிறது. அதுதான் அண்மைக்கால நெருக்கடிகளுக்குக் காரணமான கருணா சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றார் என்ற செய்தியாகும்.

**சுபத்ரா**

அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவுடன் கடந்த 21ம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு கருணா சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றதாக வெளியான செய்திகள் முழுமையாக ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

ஆனால், நெருக்கடிகள் அதிகரித்துவருவதால், கருணாபற்றிய விவகாரத்தை அமுக்குவதற்காக இப்படிப்பட்டதொரு செய்தியைப் பரப்பியும் இருக்கலாம்.

அல்லது அரசாங்கத்துக்கு இப்போது இன்னொரு நெருக்கடியும் இருக்கிறது. கருணாவுக்கு அரசோ, படையினரோ பாதுகாப்பு வழங்கவில்லை என்று நிராகரித்தாலும்கூட, கருணா அரச பாதுகாப்பில் இருப்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்வர்.

அதுமட்டுமன்றி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாகவே கருணாவுடனான தொடர்புகளை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியிருக்கும் நிலையில் நீண்ட காலத்துக்கு கருணாவை மறைத்து வைக்க முடியாது என்று அரசு உணரத் தலைப்பட்டிருக்கிறது.

இதனால்தான் அரசாங்கமே கருணாவை சிங்கப்பூருக்கு அனுப்பி வைத்திருக்கலாம். அல்லது கருணா சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டதாக ஒரு கதையை கசிய விட்டிருக்கலாம்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தால்தான் எதையும் செய்யமுடியும் என்று அரசாங்கம் உணர்ந்திருப்பதால்தான், இப்போது புலிகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்த முனைகிறது.

கடந்த வியாழனன்று நடாளுமன்றக் கட்டிடத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். புலிகள் சமாதானப்பேச்சை ஆரம்பிக்க கருணாவைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு முன்நிபந்தனை வைத்திருக்கலாம் என்று.



தம்மிடம் கருணா இருப்பதால்தானே அவர்கள் அப்படிக் கூறியிருக்கவேண்டும் என்பது ஒருபுறம் இருக்க இத்தகையதொரு முன் நிபந்தனை விதித்தால் சிக்கலாகிவிடும் என்பதால்கூட அரசாங்கம் கருணாவை சிங்கப்பூருக்கு அனுப்பியிருக்கலாம்.

கருணாவை ஒரு கருவியாகப் பயன்படுத்த அரசு நினைக்குமே தவிர, அவரை பகிரங்க அரசியல் களத்தில் இறக்க விரும்பாது. அப்படி இறக்கினால் அரசு வழங்கும் பாதுகாப்பு உறுதியாகிவிடுமே.

இதனால் தொடர்ந்தும் கருணாவை புலிகளுக்கு எதிராக பயன்படுத்துவதற்காக - பாதுகாப்பாக வைத்திருக்க சிங்கப்பூருக்கு அனுப்பியிருக்கலாம். ஆனால் இந்த விவகாரம், நெருக்கடி இன்றுடன் மட்டும் தீர்ந்துவிடப்போவதில்லை. இது இன்னொரு யுத்தத்துக்கான அடித்தளத்தை இட்டிருக்கின்றது.

IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஓரே ஸ்தாபனம்

| | | |
|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 ஈரோ |
| சென்ன பட்டூரா | 30X500 | 1.50 ஈரோ |

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports
Tel: 0049 -24625557

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

# கோடை விடுமுறைச் சிறப்பு

# அரியகுட்டியருக்கு வந்த பிக்னிக் ஆசை


இரவுச் செய்தியறிக்கையை 'சிதம்பரசக்கரத்தை பேய் பார்த்ததுபோல' பார்த்துக் கொண்டிருந்த அரியகுட்டியர் மறுநாளுக்கான வானிலை அறிக்கைக்கான அறிவிப்பு வந்ததும் கொஞ்சம் குசியோடு உசாரானார். அந்த மொழுக் - மொழுக் கட்டைச் சட்டை வெள்ளைக்காரி அங்க அபிநயங்களோடு சொல்வது விளங்காவிடினும் அந்தப் பெண் சுட்டிக்காட்டும் முகில் சூரியன் ஆகிய குறியீடுகளுடனான படத்தைப் பார்த்தாவது காலநிலையை விளங்கிக் கொள்ள முடியாதளவிற்கு 'ஆனந்த சங்கரி'யல்ல அரியகுட்டியர். ஆகா மறுநாளுக்கான காலநிலை மிக அற்புதம் என அந்த அம்மணியார் இடங்களைச் சுட்டிக்காட்டி விளக்கம் சொல்லச் சொல்ல 'செவ்வாய்க் கோளில் தண்ணீர்த் தடத்தைக் கண்ட நாசா விஞ்ஞானிகளின் பரவச நிலைக்கு ஒப்பானது அரியகுட்டியரின் மனநிலை. இரண்டு கிழமையாக மழையும் மப்பாரமும் குளிருமாக அழுதுவடித்த பொழுதுபோய் நாளை வெய்யிலும் வெக்கையும் வரப்போகுது.

அடுத்தநாளுக்கான வானிலை பற்றித் திடமான முடிவுக்கு வந்துவிட்டார் அரியகுட்டியர். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமையுமெல்லோ அனுபவி ராஜா அனுபவி என அரியகுட்டியர் மனம் பல்லவியோடு தாளம்போடத் தொடங்க, அதற்கு வேட்டு வைக்கும் இராணுவத் தோரணையோடு சமையல் அறையிலிருந்து சுமார் 40 டெசிபல் ஒலிஅதிர்வுடன் கிளம்பியது துணைவியார் மாருதப்புரவீகசுந்தரியின் கரகரக்குரல். 'உந்தச் செற்றிக்குள்ளை இருந்து என்ன செய்யிறியள், மத்தியானம் ஊறப்போட்ட பாத்திரங்கள் அப்பிடியே கிடக்குது ஒருக்கா வந்து கழுவிவைக்கக் கூடாதோ?' வலிந்து சண்டைக்கிளுக்கும் சிறீலங்காவின் யுத்தியை மாருதப்புரவீகவல்லி கடைப்பிடிக்க முனைவது கண்டு உசாரானார் அரியகுட்டியர். நாளைய வானிலை வேறு அவர்முன் வர்ணஜாலம் காட்டியது. நிலைமையை வெகு அவதானமாகக் கையாண்டு நாளைய காரியத்தை வெற்றிகரமாகச் சாதிக்க வேண்டும் என்ற முடிவும் திடமானது. வழமைபோல துணைவியாருக்குப் பதிலடி கொடுக்காமல் சந்திரிகா முன்னிற்கும் கதிர்காமரின் பணிவோடு சமையலறையை நோக்கிச் சென்றார்.

மாருதப்புரவீகசுந்தரியும் பாத்திரங்கள் கழுவ வேண்டும் என்ற சாக்கில் அரியகுட்டியர் மீது ஏறி விழுந்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை. வாடகைக்கு எடுத்து வந்த 18 படக் கொப்பிகளையும் நான்கு நாட்களுக்கிடையில் பார்த்து முடித்து 19 ஆவதாகப் பார்க்க ஒன்றுமில்லையே என்ற ஏக்கத்தின் பிரதிபலிப்புத்தான் அரியகுட்டியர் மீதான இந்தச் சீற்றம். அதுவும் 'பாயாசம் தந்த பரவசம்' தொலைக்காட்சி நாடகத் தொடரின் 103ஆவது அங்கத்தில் கதாநாயகி கதாநாயகனுக்குத் தோசை பரிமாறியபோது அந்த அங்கம் முடிவடைந்தது. அடுத்த அங்கத்தில்தான் தோசை பரிமாறிய கதாநாயகி சமையலறைக்குத் திரும்பினாளா? அல்லது வரவேற்பறைப் பக்கம் வந்தாளா..? கதாநாயகனும் அந்தச் தோசைகளைச் சாப்பிட்டு முடித்தானா போன்ற முக்கிய திருப்பங்களுக்கு விடைகிடைக்கும். அதனால்தான் அந்த 104 ஆவது அங்கத்தை உடனடியாகப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் சுந்தரிக்கு. ஆனால் அரியகுட்டியர்தான் இன்னும் இந்தப் படக்கொப்பிகளை மாற்றிக் கொடுக்கவில்லை.

ஆட்டிறைச்சிக் கொழுப்பு படையாக மிதக்க சிறீலங்காவின் நாடாளுமன்றக் குழப்பம்போல தாமரைப்பூ பூக்காத குறையாகக் குழம்பி குட்டித் தடாகமெனக் காட்சியளித்தது 'சிங்' எனச் செல்லமாக அழைக்கப்படும் கழுவுதொட்டி. இவற்றைக் கழுவி ஒப்பேற்றுவது இலேசான வேலையல்ல. என்ன செய்வது நாளைய திட்டத்தை மனதிற்கொண்டு அந்த செங்களுநீர் தொட்டிக்குள் கையைவிட்டு துளாவத் தொடங்கினார் அரியகுட்டியர். தனது பிள்ளைச் செல்வங்களின் புண்ணியத்தால் கழுவும் வேலை இரட்டிப்பானது கண்டு நொந்து நூலானது அரியகுட்டியரின் மனம். சாப்பிட்ட கோப்பைகளைக் கூடக் கழுவி வைக்க மனமில்லாமல் கருவேப்பிலை, மிளகாய் சக்கைகளோடு கோப்பைகளைத் தொட்டிக்குள் வீசிவிட்டுச்சென்ற பிள்ளைச் செல்வங்களை நோவதா? இல்லை தன் மீது இந்த வேலையைப் பொறித்த துணைவியாரின் சாமர்த்தியத்தை மெச்சுவதா? என்பதில்கூட அவரால் ஒரு முடிவெடுக்க முடியவில்லை. கருவேப்பிலையும் கோப்பைகளும், டக்ளசும் - சிறீலங்கா அரசும்போல பிரிய மறுத்தாலும் ஒருவாறு அவற்றைக் கழுவி ஒப்பேற்றினார் அரியகுட்டியர்.

இப்போது அவருக்குள் உள்ள ஒரே சிந்தனை நாளை என்ன செய்யலாம் என்பதுதான். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அன்றுபோட்ட அரசியல் அமைப்புத் திட்டம்போல அவரது மனம் திட்டங்களைப் போட்டது. கொஞ்சம் `சுதியையும்' ஏத்துவதற்குத் தோதாகத் திட்டம் இருக்கவேண்டும் என்பது அவரது முக்கிய கருப்பொருள். அட..... மரக்கறி நெருப்பில் இறைச்சி சுட்டுத் தின்றால் என்ன? ஆகா இதுதான் சரியான யோசனை. இந்த அப்பாட்மென்டையும் மாருதப்புரவீகசுந்தரியின் தொணதொணப்பையும் சிலமணி நேரமாவது துறந்து காட்டோரம் இறைச்சி சுட்டுத்தின்னும் சுகானந்தத்தை எண்ணியதும் அவர் மனம் சிலிர்த்தது. இறைச்சி வேகும் வாசனைகூட நாசியில் அடித்ததாக ஒரு பிரமை. அதுசரி யாரை யாரை இதற்குள் கூட்டுச் சேர்க்கலாம். துணைவியாரையோ பிள்ளைகளையோ இதற்குள் கூட்டுச்சேர்க்க அவர் எள்ளளவேனும் விரும்பவில்லை. நாளைக்காவது கொஞ்சம் நிம்மதி வேண்டும் என்பது அவரது அவா. தனது ஊர் தவறணை நண்பனான பேய்க்குட்டி (பேரம்பலம் குட்டி என்ற முழுப்பெயரே பே. குட்டியாகி இப்போது பேய்க்குட்டியாகி திரிபடைந்துவிட்டது) தான் இதற்கு ஆலோசனை தந்து திட்டத்தில் இணைந்துகொள்ள சரியானவர்கள் என அவர் முடிவெடுத்தார்.



பேய்க்குட்டியுடனான தொலைபேசி அழைப்பைத் துணைவிக்குத் தெரியாமல் சந்தர்ப்பம் நோக்கியவருக்கு ஆபத்பாந்தவனாக காட்சியளித்தது குசினி மூலையில் இருநாள் கிடந்து 'திக்கெட்டும் மணம்' பரப்பிய குப்பைப்பை. குப்பைப் பையை வெளியே போடும் சாட்டில் செல்லிடத் தொலைபேசியுடன் கிளம்பினார் அரியகுட்டியர். பேய்க்குட்டியும் இன்னொரு நண்பனான சொதிவாய்ச் சொக்கனும் மறுப்பேதும் சொல்லாமல் தனது திட்டத்தை ஏற்றுக்கொண்டது அரியகுட்டியருக்கு அளவிலா ஆனந்தம். இவ்வாரப் பலனில் தனது ராசிக்கு வந்த 'எடுத்த காரியம் கைகூடும்' என்ற பலனை நினைத்ததும் புளகாங்கிதம் அடைந்தார். பேய்க்குட்டியின் தனது பங்கிற்கு தனது நண்பர்களான புளுகு மணியத்தையும் விறகுதலை விசுவத்தையும் இத்திட்டத்தில் இணைக்கும்படி சொன்னதையும் தட்டிக்களிக்காமல் ஏற்றுக்கொண்டார். கிட்டத்தட்ட எல்லாம் சரி வந்துவிட்டது. அவரவர் தமது பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். காரில் அழைத்துச்செல்லும் பொறுப்பைப் பேய்க்குட்டியும், இறைச்சி சுடுவதற்கான தட்டு கரிப் பக்கற் ஆகியவற்றை சொதிவாய் சொக்கனும் ஏற்றுக்கொள்ள இறைச்சி, சொசிஸ் மற்றும் சுதியேற்றும் குடிவகைகளை அரியகுட்டியரும் ஏற்றுக்கொண்டார்கள். வீட்டில் இருந்து ஒரு துரும்பினைக்கூட மாருதப்புரவீகவல்லிக்குத் தெரியாமல் எடுத்துச்செல்ல முடியாதாதலால் போகும் வழியிலே அரபுக்காரன் கடையில் அறாவிலைக்கு வேண்ட வேண்டிய சந்தர்ப்பம் வந்தாலும் 'சாகேக்கை என்னத்தைக் கொண்டு போகப்போறம் கொஞ்சம் சந்தோசத்தை அனுபவிப்பம்' என்ற தத்துவ ஞானம் அவரை ஆறுதல் படுத்தியது.

பேய்க்குட்டி வழியைத் தவறவிட்டு ஒரே இடத்தையே ஒன்றரை மணித்தியாலமாக மூன்று நாலுதரம் சுற்றிவந்தாலும் கடைசியில் எல்லாவற்றிற்கும் தோதான காட்டோரத்தைத் தேடிப்பிடித்து காரை நிப்பாட்டியதில் எல்லோருக்குமே பரம திருப்தி. பின்னேரம் வரைக்கும் இந்த இடத்திற்கு நாமே ராசாக்கள் என்பதையும் எண்ணி பெருமிதமும் கொண்டனர். முதலில் கொஞ்சம் சுதியேற்றிக்கொண்டு பின்னரே இறைச்சியைச் சுட ஆரம்பிப்பது என்ற பிரேரணையை அரியகுட்டியர் முன்வைக்க அதை மற்றவர்கள் சிறீலங்கா நாடாளுமன்றம் வெட்கப்படும்படியாக ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். பிறகென்ன சுதியேற்றும் படலம் விறுவிறு என ஆரம்பமானது. பியர், விஸ்கி எல்லாம் தனது சகபாடிகளான கோலா, பெரியர் சகிதம் இருந்தாலும் விறகுதலை விசுவம் கொண்டுவந்த இறக்குமதி செய்யப்பட்ட கள்ளுப்போத்தலுக்குத்தான் அங்கே பெரும் மவுசு. கள்ளை வார்த்துக்குடிக்க பிளா இல்லையே என்ற துக்கம் நெஞ்சைப் பிளந்தாலும் பிளா என்னடா பிளா.. பிளா... கள்ளுத்தானடா நிரந்தரம் என்ற தவறணை ஞானத்தோடு போத்தலை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தனர். வெய்யிலும் ஏற ஏற அதற்குப் போட்டியாகச் சுதியும் பசியும் ஏறியது. சுதி ஏறியதற்கு அத்தாட்சியாகச் சொதிவாய் சொக்கன் வாயிலிருந்து 'காயாத கானகத்தே நின்றுலாவும்....' என்ற பாடல்கூட வெளிப்பட்டது. மீண்டும் ஒரு தடவை சிறீலங்கா நாடாளுமன்றம் வெட்கப்படும்படியாக ஏகமனதாக அடுப்பு மூட்டுவதற்கான முடிவு எடுக்கப்பட்டது. பேய்க்குட்டியும் விசுவமும் நெருப்பை மூட்டத் தொடங்கினர். விசுவம் ஊரில் பேக்கரி வேலை செய்ததால் போரணையில் பெற்ற அனுபவம் இங்கு கைகுடுக்கும் என்பது எல்லோரதும் நம்பிக்கையும்கூட. அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை. சுள்ளி விறகுகள் சீறி எரிந்து கட்டைகளைத் தாவிப்பிடிக்க கார்த்திகை விளக்கீட்டிற்கு எரிக்கும் சொக்கப்பனை ஆகியது அந்த இடம். இப்போது மரக்கரி போடப்பட்டு தணல் விழுவதற்கான எதிர்பார்ப்பும் இறைச்சியைச் சுடுவதற்கான ஆயத்தமும் தயாரானது.

கள்ளுடன் விஸ்க்கியைக் கலந்து அடித்ததாலோ என்னவோ சொதிவாய்ச் சொக்கனால் ஓடியாடி வேலை எதுவும் செய்ய முடியாதுவிடினும் இடைக்கிடை நாக்கு கொன்னை தட்டக் கொன்னை தட்ட ஆலோசனைகளைத் தந்துகொண்டிருந்தார். இப்போது கம்பியில் இறைச்சிகள் போடப்பட்டுவிட்டது. இறைச்சியில் இருந்து உருகிய நெய் தணல்மீது விழுந்து 'சொயிங்... சொயிங்' என ரீங்காரமெழுப்ப வேகும் வாசனை மூக்கைத் துளைத்துக் குடலை முறுக்கியது. இன்னும் கொஞ்ச நேரத்தில் இறைச்சியெல்லாம் வெந்துவிடும் என விசுவத்தின் முன்னறிவிப்பும் வந்தது. பொன்னிறத்தில் நெய் முறுகக் காட்சியளித்த இறைச்சித் துண்டுகளை வயிற்றில் தள்ளுவதற்கு எல்லோரும் தயாராகினர்.

யார் கண்பட்டதோ அப்போதுதான் அந்தத் திருப்பம் வந்தது. 'சைரன்கள்' ஒலிக்க பொலிசாரும் தீயணைப்புப் படையினரும் பொலிசாரும் சந்திரிகா-ஜே.வி.பி. கூட்டுமுன்னணியாக வந்து சடண் பிறேக் போட்டு நின்றனர். வாகனத்திலிருந்து குதித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் காச் பூச்செனக் கத்திக்கொண்டு ஓடிவர தீயணைப்புப் படையினர் தீயணைப்புச் சாதனங்களோடு பாய்ந்து வந்தனர். எல்லாமே கண்மூடித் திறப்பதற்கிடையில் முடிவடைந்தது. தீயணைப்புப் படையினர் அடித்த வெண்நுரைத் திரவத்தினுள் இறைச்சிகளும் சந்தோசங்களும் சங்கமமாகின. காட்டையெரிக்க முயற்சி எடுத்தவர்கள், அதீத போதையில் இருந்தவர்கள் என்ற இரு குற்றச்சாட்டுக்களோடு எல்லோருமே பொலிசாரினால் வாகனத்தில் ஏற்றப்பட்டனர்.

அரிய குட்டியருக்கோ இப்போது இருக்கும் பெரும் கவலையெல்லாம் சட்டத்தைச் சமாளித்து வெளியே வந்தாலும் மாருதப்புரவீகவல்லியிடமிருந்து விக்கினம் ஏதும் இல்லாது எப்படித் தப்பிக்கொள்வது என்பதுதான்.

**- பிறேம்**

# தென்றல் வீசாத தெரு

மாலை ஏழு மணியிருக்கும், வானத்திலிருந்து அடைமழைபோல், தொடர்ந்து கொட்டிக்கொண்டிருந்தது. கூரைத் தாழ்வாரத்தில் ஒதுங்கியபடி, மயிலர் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். ஏதோ நினைப்பு வந்தவராக எழும்பியவர், ஒரு சாக்கைத் தலையிலே போட்டுக்கொண்டு, வைக்கோற் பட்டடையை அண்மித்தவர் ஒரு கத்தை வைக்கோலை எடுத்துக்கொண்டு, மாட்டுக்கொட்டிலை நோக்கிச் சென்றார். வைக்கோலைக் கண்டதுதான், மாடுகளும் மெதுவாக எழும்பத் தொடங்கின. கத்தையைத் தொட்டிலிலே உதறிப் போட்டுவிட்டு, மாட்டுக்கொட்டிலை அண்ணாந்து பார்த்தார். பல இடங்களிலிருந்தும் மழைநீர் ஒழுகிக் கொண்டிருந்தது. எப்படியும் இரண்டு கிழமைக்குள் கொஞ்சம் கொஞ்சமாக வேனும் கிடுகு கொண்டுவந்து சேர்த்துவிட வேண்டும் என நினைத்தவர், மாடுகளையும் சற்றே தடவிக்கொடுத்துவிட்டு, திரும்பவும் தாழ்வாரத்தில் வந்து குந்தியபடி வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். தீபாவளிக்கு இன்னும் மூன்று நாட்களே இருக்கிறது. பளையிலே விலை பேசித்தீர்த்துவிட்ட தென்னம்மட்டைகளை ஏற்றிவந்து விற்றால்தான், பிள்ளைகளுக்கு ஏதேனும் ஒவ்வொரு புது உடுப்பும், நல்ல சாப்பாடு எதுவும் கொடுக்கலாம் என்றிருந்த நிலையில்தான், மழையின் கோரம் அவரைக் கவலை கொள்ள வைத்தது. இலட்சுமி இன்று இருந்திருந்தால்... என்று நினைத்தவரின் மனம் வெகுவாகக் கனத்தது. மூன்று வருடங்களுக்கு முன்னர்தான் சுகவீனமுற்றிருந்த இலட்சுமி முடிவில் சாவைத் தழுவிக்கொண்டாள். இன்று அவள் இருந்திருப்பாளேயானால் 'எணை! மழையும் நல்லாய்க் கொட்டுது. போய் வருத்தத்தைத் தேடாமல், மட்டை பிறகும் ஏத்தலாம்தானே. நீங்கள் தாற காசிலை கொஞ்சம் மிச்சம் பிடிச்சு வைச்சிருக்கிறன். அதைக்கொண்டு பிள்ளையளுக்கு உடுப்பு எடுங்கோவனணை. நான் பிள்ளையளுக்கு நல்ல சாப்பாடு செய்து குடுக்கிறன்' ஆமாம் நினைத்தவருக்குக் கண் கலங்கியது. பிள்ளைகள் பார்த்து விடுவார்களே என்று நினைத்த மயிலர், கண்ணைத் துடைத்துக்கொண்டு, மீண்டும் வானத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். ஏதோ ஞாபகம் வந்தவர்போல் 'என்ன இண்டைக்குக் கந்தையா இந்தப் பக்கம் வரவில்லை. ஏதேனும் சுகமில்லையோ? ஒருக்கால் போய் பார்த்து வருவம்' என்று எண்ணியவர், தோளிலே துவாய் ஒன்றைப் போட்டு வெளிக்கிட ஆயத்தமாக, படலை திறக்கும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தவர், ஆம் கந்தையாதான் வருகிறான் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு மீண்டும் தாழ்வாரத்தில் குந்திக்கொண்டார்.

கந்தையா மயிலரின் ஒரே தம்பி. அதிகம் படிக்காதவன். பத்து வீடுகள் தள்ளி குடும்பத்தோடு வாழ்கிறான். நான்கு ஆண்பிள்ளைகள். தனக்குச் சீதனமாகக் கிடைத்த தோட்டம் வயல்களையும் குத்தகைக்குமாக எடுத்து, ஓரளவுக்கு தன் குடும்பத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறான். மாலையில் ஒரு தரமாவது தமையனைத் தேடிவரும் வழக்கம் நீண்ட காலமாகவே இருக்கிறது. இன்று மழை சற்று அதிகமானதால், சற்றுத் தாமதமான நிலையில், மழையிலே நனையாதவாறு, ஒரு காவோலையைத் தலைக்குமேல் பிடித்தபடி தாழ்வாரத்துக்கு வந்து சேர்ந்ததும் 'என்னண்ணை தாழ்வாரத்திலை இருக்கிறாய். தூத்துவான் வேறை அடிக்குது. உள்ளுக்கை போவன்' என்று சொல்லியபடி காவோலையை ஒதுக்குப் புறமாக வைத்துவிட்டு கந்தையாவும் திண்ணைக்கு வந்தார். எதிர் எதிராகக் குந்தியபடி,

வெற்றிலைத் தட்டை எடுத்து பாக்கை வெட்டியபடி, 'என்னண்ணை யோசித்துக்கொண்டு இருக்கிறாய். என்ன பிரச்சினை' என்று கேட்டதும் 'ஒண்டுமில்லை, தீர்த்துப்போட்டு வந்த மட்டையை இண்டைக்கு இரவு ஏத்தப் போகவேணும் என நினைச்சன். தீபாவளியும் வருது. இந்த மழை வந்து கெடுத்துக்கொண்டிருக்குது. என்ன செய்யிறது எண்டு தெரியவில்லை. அதுதான் யோசித்துக்கொண்டிருக்கிறன்.' 'அண்ணை இந்த மழையுக்கை நீ போய் மட்டையேற்றி வருத்தத்தைத் தேடாமல், என்னட்டை விதைவெங்காயம் வாங்கவென காசு வைச்சிருக்கிறன். அதை இப்ப எடு, பிறகு ஆறுதலாகத் தாவன். மழையுக்கை பொடியனையும் இழுத்துக்கொண்டு அலையாதை. நான் நாளைக்கு வரையுக்கை காசுகொண்டு வாறன். போயிட்டு வாறன். பாதையும் கும்மிருட்டு, பிள்ளையள் தேடுங்கள்' என்றபடி காவோலையையும் திரும்ப எடுத்து மழைக்குப் பிடித்தவாறே கந்தையா வீடு நோக்கிப் புறப்பட்டார். தம்பியாக இருந்தாலும், கடன் வாங்குவதை அடியோடு வெறுப்பவர் மயிலர், வருமானத்துக்கு அளவாக வாழ நினைப்பவர், ஏதோ நடக்கிறது நடக்கட்டும் என்று நினைத்தவர், இருந்த உணவை ஏதோ வாயில் போட்டுவிட்டு திண்ணையிலே சாய்ந்துவிட்டார்.

இரவு ஒரு மணி இருக்கும், எழும்பியவர் வெளியே வந்து வானத்தைப் பார்த்தார்.



வெளித்திருந்தது. மகனைப் 'பாலு, பாலு' என்று கூப்பிட்டார். 'என்னனை' என்று சத்தம் வரவே 'மேகம் வெளிச்சிருக்கு பளைப்பக்கம் போய்விட்டு வருவமே. நீயும் வந்தாயெண்டால், பின்னேரத்துக்கை வந்திடலாம். கையோடை மட்டையையும் வித்துப்போடலாம்' என்று கூறியவர், மாட்டுக் கொட்டில் பக்கம்போய்த் திரும்பி வரவும், பாலுவும் கண்ணைக் கசக்கியபடி முற்றத்துக்கு வந்து பானையில் இருக்கும் தண்ணீரில் முகத்தைக் கழுவவும், தங்கை கனகமும் எழும்பி குசினிக்குத் தேநீர் போடத் தயாரானாள். மயிலர் இலாம்புக்கு மண் எண்ணை ஊற்றி, நெருப்பெட்டி ஒன்றும் எடுத்து மடியினுள் வைத்தபடி, இரண்டு வைக்கற் கத்தைகளைச் சாக்குகளில் அடைந்து, வண்டிலில் ஏற்றிவிட்டு இலாம்பினை முன் துலாவினில் கட்டிவிட்டு திரும்பிவர, மகள் கனகமும் இருந்த மரக்கறிகளோடு, சோற்றையும் குழைத்து, முன் துலாவின் ஏணையாகத் தூங்கும் சாக்குக்குள் வைத்துவிட்டு வரவும், தேநீர் குடித்துக்கொண்டிருந்த இருவரும் வெளிக்கிட ஆயத்தமானார்கள். தேவையான அளவு வெற்றிலை பாக்குகளையும் எடுத்து மடியில் வைத்த மயிலர், மாடுகளைப் பூட்டி ஆயத்தமாக்க, பாலுவும் வந்து வண்டியில் ஏறிக் கொண்டான். வைக்கோற் சாக்குகளைத் தலையணையாக வைத்து பாலு தூங்கத் தொடங்கினான். வண்டில் மண்பாதை வழியாக தார் றோட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

காலை ஏழு மணியிருக்கும் பளைக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். மாடுகளை நுகத்திலிருந்து களற்றி, பக்கத்தில் நிற்கும் மரங்களில் கட்டிவிட்டு, கொண்டுவந்த வைக்கோலை உணவாகப் போட்டுவிட்டு, மிக விரைவாக மட்டைகளை வண்டியில் ஏற்றினார்கள். முடிந்ததும் கயிறுகளினால் இறுக்கி வரிந்து கட்டினார்கள். வீட்டுக்காரரிடம் சிறிது தண்ணீர் வாங்கி, கைகளைக் கழுவிவிட்டு, கொண்டு வந்திருந்த உணவை உண்ணத் தொடங்கினார்கள். சாப்பாடு முடிந்ததும், மயிலர் சிறிது வெற்றிலை போட எண்ணியவர், மடியை அவிழ்த்து 'பாலு இதிலை அஞ்சு ரூபா இருக்கு. வீட்டுக்காரரட்டைக் கொடுத்தால், பச்சை ஒடியல் இருநூறுக்கு மேலை தருவார்கள். அதோடை பினாட்டுத் தட்டும் ஒன்று வேண்டிக்கொண்டு வா' என்று கொடுத்து அனுப்பிவிட்டு, வெற்றிலை போடுவதில் இறங்கிவிட்டார். போன பாலுவும் சிறிது நேரத்தில் அவைகளோடு வந்து சேர்ந்தான். முன் துலாவில் தூங்கும் சாக்குக்குள் அவைகளைத் திணித்துவிட்டு, வண்டியில் மாடுகளைப் பூட்டுவதற்கு நுகத்திலே கொழுவியதும் 'பாலு பின்னுக்கு நடந்து வாடா. கால் உழைந்தால் சொல்லு. வண்டியை நிப்பாட்டுறன் பின் துலாவிலை ஏணையாகக் கட்டியிருக்கிற சாக்குக்கை ஏறிக்குந்திக்கொள்.' என்று கூறிவிட்டு, வண்டியும் வெளியேறி றோட்டுக்கு வந்தது. பகல் மூன்று மணிக்கு ஊருக்குள் நுழைந்த வண்டில், ஒரு மணித்தியாலம் கடந்திராத நிலையில், தன் வியாபாரத்தை முடித்துக்கொண்டது. முதல்நாள் பெய்த மழையின் காரணமாக, மட்டைகளைக் கிராக்கியாக விற்க முடிந்ததும், மயிலருக்கும் மகிழ்வைத் தந்தது. மாலை ஆறுமணிக்கு வீடுவந்து சேர்ந்தார்கள். மயிலர் மாடுகளை அவிட்டு கொட்டிலில் கட்டிவிட்டுச் சிறிது வைக்கோலும் போட்டபடி திண்ணைக்கு வந்து சேர்ந்தார். 'மேனை! சாப்பிட்டுவிட்டு, தவிடு விற்கும் வீடு தெரியும்தானே. போய் பத்துக்கொத்து தவிடு வேண்டியா. இரவு மாடுகளுக்கு வைக்கவேணும்' என்று கூறியபடி வெற்றிலைத் தட்டோடு குந்திவிட்டார். பக்கத்துப் பட்டினம் மூன்று மைல் இருக்கும் பிள்ளையளுக்கு ஒவ்வொரு உடுப்பெண்டாலும் எடுத்துக் குடுக்க வேணும் அதோடை சாப்பாட்டுச் சாமான்களும் வாங்க வேண்டும் என்ற சிந்தனையில் இருந்தவரை, படலை திறக்கும் சத்தம் திரும்ப வைத்தது. கந்தையாதான் வந்து கொண்டிருந்தான். 'என்னண்ணை நான் ராத்திரி சொல்லிப் போட்டுப் போன்னான். அதற்குப் பிறகும் பளைக்குப் போய்விட்டு வந்திட்டாய் போல இருக்கு. ஏதோ யோசிச்சுச் செய்' என்று சொல்லிவிட்டு, குந்தியிருந்தபடி, வெற்றிலைத் தட்டை தன் பக்கம் இழுத்து வெற்றிலை போட்டபடியே, சிறிது நேரம் கதைத்துவிட்டு 'நான் போய்விட்டு வாறன். இண்டைக்குக் கோயிலிலை ஏதோ மீற்றிங்காம். வரச் சொன்னவங்கள். பார்த்திட்டு வீட்டை போறன்' என்றவர் எழுந்து படலையை நோக்கிச் செல்லவும், 'உவனுக்கு ஊர் துளவாரங்கள் என்னும் நீங்கியதாய் தெரியவில்லை, ஏதோ தனக்குத் தெரிந்ததைச் செய்யட்டும்' என தன் மனத்துள்ளேயே நினைத்தபடி, மாடுகளுக்கு தவிடு வைத்துவிட்டு, வைக்கோலும் எடுத்து தொட்டிக்குள் போட்டுவிட்டு சற்றே களைப்பாற எண்ணி சாய்ந்து விட்டார். ஒன்பது மணியளவில் எழுப்பி, சிறிதே சாப்பிட்டுவிட்டு, விளக்குகளை அணைத்துவிட்டுத் தூங்கச் சென்றுவிட்டார்.



சிறுகதை

இரவு ஒரு மணி இருக்கும், அம்மா என்றொரு சத்தம் மாட்டுக் கொட்டிலிலிருந்து கேட்டதும், கை விளக்கைக் கொழுத்திக்கொண்டு கொட்டிலை நோக்கி ஓடினார். மாடுகள் ஒன்றுக்கொண்டு இடிபட்டிருக்க வேண்டும், ஒரு மாட்டின் கொம்பு இன்னொரு மாட்டின் வயிற்றைப் பதம் பார்த்துவிட்டது. இரத்தம் கொட்டிய நிலையில் ஒரு மாடு சரிந்தபடியே இருந்தது. ஒன்றும் புரியாத நிலையில், அந்த அர்த்த சாமத்தில் அயலிலுள்ள மாட்டு வைத்தியரிடம் ஓடினார். நிலைமைகளைக் கேட்டறிந்தவர், சலித்துக் கொள்ளாமல், மாட்டுக் கொட்டிலுக்கு வந்து, முடிந்தளவு வைத்தியங்கள் செய்துவிட்டு, சிறிது நேரம் மாட்டின் நிலைமைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். இரண்டு மணித்தியாலங்கள் கடந்த நிலையில், விழுந்து கிடந்த மாடு சற்றே தலையை அசைத்தது. 'இனி ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்' 'ஒரு கிழமை வண்டிலைப் பூட்டாதையுங்கோ' என்று சொல்லிவிட்டு, தன் தொகையையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டார். உழைத்ததில் முக்காற் பங்கினையும் இழந்து, ஒரு கிழமை வரும் வருமானத்தையும் இழந்து, மனமும் சோர்ந்த நிலையானது. இதுதான் கடவுள் விட்ட வழி என நினைத்தார், இம்முறை உடுப்புகள் வாங்காவிட்டாலும், ஏதோ வயிற்றிற்காவது சாப்பாடு போடுவோம். என எண்ணியவர், நரகாசுரனைக் கொன்றொழித்த நாளைத் தீபாவளியாகக் கொண்டாடுவோம் என்று ஓங்கிடும் அந்த ஏழ்மை மனம் மீண்டும் தாழ்வாரத்திலே குந்திவிட்டது.

த.சு. மணியம்

பாகம் - 2

24



# வலிகாமம் இருந்து வன்னி வரை

**- கவிஞர் நாவண்ணன்**

அவர் தனது நேரடி அனுபவங்களைக் கூறிக் கொண்டிருக்கும்போது திரு. தார்சி வித்தாச்சி அந்நாளில் வெளியிட்ட அவசரகாலம் 58 (emergency 58) எனும் ஆங்கில நூலில் குறிப்பிட்ட சம்பவம் என் நினைவுக்கு வந்தது.

1958ம் ஆண்டின் இனக்கலவரத்தின்போது பொலநறுவை அகதி முகாமைத்தாக்கும் நோக்கத்தோடு வந்த காடையர்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அந்தக் காடையர் கும்பலில் ஒருவன் தனது இடுப்பில் கட்டியிருந்த சாரத்தை உயர்த்திப் பிடித்து அசிங்கமாக ஆடிக்கொண்டு முன்னே வந்துகொண்டிருந்தான் அவன் மீதே முதல் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அவனையும் சேர்த்து மூவர் அந்த இடத்திலேயே பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பெளத்த துறவிகள் போன்று வேடமிட்டு நடமாடிய காடையர்களைப் பொலிசார் கைதுசெய்தனர்.

`இப்படியெல்லாம் கடமையுணர்வுடன் நடந்துகொண்ட பொலிஸ் துறையினர் 1956ஆம் ஆண்டின் காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்தின்போது, தம் கண்முன்னே நடந்த காடைத்தனங்களைக் கண்டும் ஏன் வாளாதிருந்தார்கள்?' Damn the prime Minister என்று கூறிய சிட்னி சொய்சா என்ன செய்துகொண்டிருந்தார் என்று அதுவரை நேரமும் என்னுள் அரித்துக்கொண்டிருந்த சந்தேகத்தைக் கேட்டுவிட்டேன். அதற்கும் அவர் பதில் கூறினார்.

`முதலாவது, சிட்னி சொய்சா அப்பொழுது கொழும்பு மாவட்டத்தில்தான் பணியாற்றினாரா என்பது எனக்கு நினைவில் இல்லை. இரண்டாவது, அவர் அப்படித்தான் அங்கு இருந்திருந்தாலும்கூட, இந்தச் சம்பவம் திட்டமிடப்பட்டு அரசியல்வாதிகளால் திடீரென நடாத்தப்பட்டதொன்று. மூன்றாவது, அங்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிசார், சத்தியாக்கிரகிகள் அப்போராட்டத்தின் மரபையும் மீறி உணர்ச்சிவசப்பட்டுப் பாராளுமன்றக் கட்டடத்துக்கோ அல்லது வேறு எவரையுமோ தாக்கும் நிலைமை ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக நிறுத்தப்பட்டனரே தவிர இப்படி ஒரு நிலைமை வரும் என்று யாரும் எதிர்பார்த்து நிறுத்தப்படவில்லை. இன்னுமொன்று, சத்தியாக்கிரகிகள் மீதான தாக்குதல் சம்பவம் 1958ன் இனக்கலவரம் போன்று இடம்பெற்ற தொடர் சம்பவமல்ல திடீரென நடந்து சிலமணி நேரத்துக்குள் முடிவுற்ற நிகழ்வு என்று கூறியவர்கள், மீண்டும் 1958ஆம் ஆண்டின் இனக்கலவரத்தைப் பற்றிக் கூறினார்.

`அந்த இனக்கலவரத்தின்போது நான் போர்ஷோ பொலிஸ் நிலையத்தில்தான் உதவிப் பொலிஸ் அதிகாரியாக இருந்தேன். என்னோடு கடமையாற்றிய எந்தச் சிங்களவரும் என்மீது எந்தவித துவேஷத்தையும் காட்டவில்லை. இன்னும் எனது விடுதியில் சில தமிழர்களை பாதுகாத்து வைத்திருக்க ஒத்துழைப்புத்தான் அவர்களிடமிருந்து கிடைத்தது' என்றார். தனது சேவைக்கால பொலிஸ் நிர்வாகத்தை விட்டுக்கொடுக்காதவராக.

* * *

எமது `ஆரோபணம் அச்சகம்' கிளிநொச்சி நகரில் இருந்து மூன்று மைல் தொலைவில் எட்டாம் வாய்க்காலில் இருந்தமையால், வேலைகளைப் பொறுப்பேற்பதற்கும், விநியோகிப்பதற்குமாகக் கிளிநொச்சியில் ஒரு கிளை ஆரம்பிக்கப்பட்டது. நான் இரண்டு இடங்களுக்கும் மாறி மாறிச் சென்றுகொண்டிருந்தேன்.

அன்று பிற்பகல் நான் கணேசபுரம் வீட்டினில்தான் இருந்தேன். என்னைத் தேடிக்கொண்டு இரண்டு போராளிகள் வந்தனர். அவர்களில் ஒருவர் என் மகனுக்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர். அவர்கள் இருவரும் என் மகனிடம் இருந்து கடிதம் ஒன்றைக்கொண்டுவந்திருந்தனர். நாங்கள் தற்பொழுது கணேசபுரத்திற்கு வந்துவிட்ட விடயம் தெரியாது ஆகையால் அவர்கள் எட்டாம் வாய்க்கால் சென்று அங்கு தகவல் பெற்று என் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்திருந்தனர். அன்று என்னவளும் வீட்டில் இல்லை மருத்துவப் பரிசோதனைக்காக என் சின்ன மகளோடு கொழும்புக்குச் சென்றுவிட்டார். நானும், மகள் ஜீனும்தான் வீட்டில் இருந்தோம். மகன் கடிதம் அனுப்பியிருக்கின்றான் என்றதும் பரபரப்புடன் அக்கடிதத்தை வாங்கிப் படித்தேன்.

*`அன்புள்ள அம்மா, பப்பா, அக்கா, பஸ்ரீனா அறிவது,*

*`நான் சுகமாக இருக்கிறேன். அதுபோல் உங்கள் சுகத்தையும் அறிய ஆவலாய் இருக்கிறேன்.'*

*`அம்மா நான் இப்போ பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன். எப்படியும் ஒருமுறை உங்களோடுவந்து கதைப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அன்று என்னை அன்பாக அருகில் அமர்த்தி நான் இயக்கத்துக்குவர அனுமதித்தீர்கள். அதை நினைக்கவே என -க்கு மன நிம்மதி. பப்பா எப்படி இருக்கிறார்? நடந்ததை மறக்கச் சொல்லுங்கள். நான் அம்மாவின், அப்பாவின் அன்பு மகன். இப்பொழுதுதான் அனைத்தையும் உணர்கின்றேன்.'*

*`மேலும் அம்மா நான் இங்கு நல்ல நிகழ்ச்சிகள் செய்கின்றேன். என்னுடன் மிருதங்க வித்துவான் கண்ணதாசன் அண்ணா இருக்கிறார்.'*

*`அம்மா இக்கடிதம் கொண்டுவந்த அண்ணா எங்கட பயிற்சி மாஸ்டர். பப்பாட பிறசுக்கு வந்தவர், பப்பாவைத் தெரியும்.'*

> `இப்படியெல்லாம் கடமையுணர்வுடன் நடந்துகொண்ட பொலிஸ் துறையினர் 1956ம் ஆண்டின் காலிமுகத்திடல் சத்தியாக் கிரகத்தின்போது, தம் கண்முன்னே நடந்த காடைத்தனங்களைக் கண்டும் ஏன் வாளாதிருந்தார்கள்?'

*`அம்மா குறைவிளங்கவேண்டாம். அக்காவிடம் கூறவும், எனக்கு இங்கு நிகழ்ச்சிகள் செய்வதற்காக புல்லாங்குழல் தேவையாக இருக்கிறது. அதனால் அதை மாஸ்டரிடம் கொடுத்து விடவும். நான் உங்களைச் சந்திக்கும் போது திருப்பித் தருகின்றேன். கண்டிப்பாகச் செய்யவும் எதிர்பார்க்கிறேன்....'*

*பஸ்ரீனாக் குட்டி எப்படியிருக்கிறாய் அம்மா? அண்ணன் சுகமாய் இருக்கிறேன். அண்ணன் கெதியாய் வந்து சந்திப்பேன். அதற்கிடையில நீங்கள் குழப்படி செய்யக் கூடாது என்ன!'*

*`அக்கா எப்படியிருக்கிறாய் நான் எந்தச் சண்டைக்குப் போறேனோ தெரியாது. நான் செத்தால் என்ன செய்வாய்? நீங்கள் எல்லாம் அழக்கூடாது....'*

*`அக்கா உனது புல்லாங்குழலைக் கொடுத்து அனுப்பிவிடு. நான் வந்து உங்களைச் சந்திக்கும் பொழுது திருப்பித்தருவேன். நீங்கள் தருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஏமாற்றிவிடாதீர்கள்.'*

*`வேறு என்ன அம்மா? இனி நேரடியாக வந்து சந்திக்கின்றேன். அதுவரையில் கல்லு மனதாய் இருங்கள்.'*

*இப்படிக்கு*
*உங்கள் அன்புமகன், தம்பி, அண்ணன்*
*சூ.கிங்ஸ்லி உதயணன்*
*(கவியழகன்)*
*பஸ்ரீனாவுக்கு அன்பு முத்தங்கள்*
*`புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'*

அவனது இந்தக் கடிதத்தைப் படித்ததும் மனதில் ஏதோ இனம் தெரியாத ஒரு நெருடல். அது பிள்ளைப் பாசம் என்பதாலா, ஒரு போராளியின் தந்தை என்பதாலா என்று புரியவில்லை. அவனது கடிதம் கிடைத்த நேரத்தில் அவன் தாய் இல்லையே என்று கவலையாக இருந்தது.

கடிதத்தை வாங்கிப் படித்த தமக்கை ஜீன் சிரித்தாள் `என்னிடம் புல்லாங்குழலை வாங்க வேண்டுமென்பதற்காக சாலம் வைத்து எழுதியிருக்கிறான் என்றாள்?. அவள் சாலம் என்று குறிப்பிட்டது தான் செத்தால் அழ வேண்டாம் என்று அவன் எழுதியிருப்பதைத்தான்.

ஜீன் புல்லாங்குழல் வாசிக்கப் பயிற்சி செய்துகொண்டிருக்கின்றாள். இதில் ஒரு விசேடம் என்னவென்றால் மகள் முறைப்படி புல்லாங்குழல் வாசிக்கப் பழகிக்கொண்டிருக்கின்றாள். ஆனால் எனது மகன் முறைப்படி படிக்கவில்லை ஆனால் செவிவழி ஞானத்தால் புல்லாங்குழலில் பாடல்களை வாசிக்கத் தொடங்கிவிட்டான். வாசிக்கத் தொடங்கியது மட்டுமல்ல அவனது பயிற்சி முகாமில் மற்றவர்களுக்கு வாசிக்கச் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கின்றானாம். அவர்களில் அவனுடைய பயிற்சி ஆசிரியரும் ஒருவராம்.

என்னுடைய மகன் என்பதற்காக அல்ல அவனிடம் இருக்கும் ஆற்றல்கள் பல என்று பெருமையுடன் சொல்லுவேன். வயலின், கிற்றார், ஓகன், ட்றம், புல்லாங்குழல், தபேலா என எந்தக் கருவியையும் சிறிது நேரம் பிறர் இசைக்கப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு தானாகவே வாசிக்கத் தொடங்கிவிடுவான். இவற்றோடு நன்கு பாடுவான், ஓவியம் வரைவான். அந்தக் கணத்திலே என் மனதில் ஒரு நப்பாசை. அவனது பயிற்சிகள் முடிவடைந்த பின்பு இயக்கம் இந்தத் துறைகளில் அவனுக்கு முறையான பயிற்சிகளைக் கொடுத்து நாட்டுக்குப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தும்படி செய்யவேண்டும் என்று. அப்படி ஓர் ஆசை அவனுக்கும் இருந்ததாகப் பின்னர் அறிந்தேன்.

மகனுடைய விருப்பத்தின்படியே ஜீன் தனது புல்லாங்குழலைக் கொடுத்து அனுப்பிவிட்டாள். அவன் மீது எனக்கிருந்த கோபம் எல்லாம் இப்பொழுது மறைந்து விட்டது. அவனை ஒருமுறை பார்க்கவேண்டும் என்ற ஆசையே எனக்குள் எழுந்தது.

* * *

நவாலி புனித பேதுறுவானவர் ஆலயத்தின் மீது இடம் பெற்ற குண்டுத்தாக்குதல் பற்றி யான் எழுதிய `எத்தனை, எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன' புத்தகத்தை எழுதி முடிக்க எனக்குப் பெரிதும் உதவியர் ஆசிரியர் ஜெயக்குமார். நவாலி ஆலயத்திற்குப் பக்கத்திலேயே அவரது வீடு. குண்டுச் சிதறல் ஒன்று அவரது விலாவைத் துளைத்ததில் விலாவில் ஆபத்தான காயத்துக்கு இலக்காகி உயிர் பிழைத்தவர். அந்தப் புத்தகத்தை எழுதி முடிப்பதில் பெரும் பங்கு வகித்தவர். அவரைத் தற்செயலாக கிளிநொச்சியில் சந்தித்தேன். நான் வீடு, அல்லது காணி தேடிக்கொண்டிருக்கும் விடயத்தை அவரிடம் கூறினேன். அவர்தான் எனக்கு அந்த யோசனையைக் கூறினார்.

`யாருடைய காணியிலும் வீடு கட்டிச் செலவழிக்கும் எண்ணத்தை விட்டு விட்டு நாங்கள் எங்களுக்கு என்று ஒரு காணியை வெட்டித் துப்பரவாக்கி அதில வீடு கட்டுவோம். 154 ஆம் கட்டையில சிவபாத கலையகம் பாடசாலைக்குக் கிட்ட காணி இருக்குது, நானும் அங்கதான் வீடுகட்டப் போகிறேன் வேணுமென்றால் நீங்களும் வாங்கோ' என்று அழைத்தார். எனக்கும் அந்த யோசனை சரி என்று பட்டது. எனவே நானும் அதற்குச் சம்மதித்தேன்.

*(தொடரும்)*

S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா?
B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

கலவரத் தீ – 1



கலவரத் தீ – 2



கலவரத் தீ – 3



# யூலை நி








போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று முழங்கிய அன்றைய அதிபர் ஜே.ஆரும், 2ம் ஈழ யுத்தத்தைத் தொடக்கி வைத்த பிறேமதாசாவும் 1983ல்.










எரிந்த கட்டடங்கள்




வெலிக்கடைச் சிறையில் படுகொலையான குட்டிமணி நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது




வெலிக்கடைச் சிறையில் படுகொலையான தங்கத்துரை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப் பட்ட போது


# னைவுகள்









கப்பலுக்காய் காத்திருக்கும் அகதிகள்



அகதிகளை ஏற்றிய கப்பல்



கப்பலும் அகதிகளும்




# கவிதை முற்றம்

## பறவைக் குஞ்சு



பறவைக் குஞ்சைப் பாரண்ணா
பறவைக் குஞ்சைப் பாரண்ணா
பறக்கும் இறகு முளைத்திடாத
பறவைக் குஞ்சைப் பாரண்ணா

கூடு காற்றில் ஆடி இந்தக்
குஞ்சு விழுந்து விட்டதோ
தேடித் தாயும் தூக்க முன்னம்
செத்துப் போகும் துடிக்குதே



கட்டெ றும்பும் ஊருதே
காகம் கொத்தப் பார்க்குதே
வட்டம் போட்டுப் பருந்துமிந்த
மரத்தை நோக்கி வருகுதே

மரத்தில் ஏறிக் கூட்டிலே
வைத்து விடுங்கள் குஞ்சையும்
இரக்கமாக இருக்குதையோ
இளைத்துக் கிடந்து துடிக்குதே.

— வித்துவான் க. வேந்தனார்.

# தகவல் முற்றம்

* 81 வயதில் பிரதமராகி உலகின் மிக வயதான பிரதமர் என்ற பெருமை பெற்றவர் மொரார்ஜி தேசாய். இவர் பிறந்தது 29.02.1896 பதவியேற்றது 24.03.1977.
* பேறிஞர் அண்ணாவின் இறுதி யாத்திரை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. சுமார் 15 இலட்சம் பேர் கலந்துகொண்ட உலகின் மாபெரும் இறுதியாத்திரை என்ற அடிப்படையில்.
* இந்தியாவின் முதல் மின்சார ரயில் மும்பை விக்டோரியா டெர்மினலுக்கும் குல்லாவுக்கும் இடையே 1925-ல் ஓடத் துவங்கியது. இதன் தூரம் 16 கி.மீ
* போர்த்துக்கீசரே இந்தியாவில் வந்து குடியேறிய முதல் ஐரோப்பியர் ஆவர்.
* வெளிநாட்டுப் படங்களுக்கு இசையமைத்த முதல் இந்திய இசைக் கலைஞர் ரவி சங்கர்.
* காந்திஜியை முதன் முதலாக 'மகாத்மா' எனப் பெருமைப் படுத்தி பேசியவர் ரவீந்திரநாத் தாகூர்.
* தமிழ்நாட்டில் `சர்தார்' எனப் போற்றப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் இரண்டு பேர். அவர்கள் வேதரத்தினம்பிள்ளை, ஆதிகேசவலுநாயக்கர் ஆவர்.
* 1492-ல் அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்.
* பனியில் ஸ்கேட்டிங் செல்லும் ஒருவர் கருப்பு கண்ணாடி அணிவது ஏன் தெரியுமா? ஒளி பிரதிபலிப்பை தவிர்க்கத்தான்.
* இழந்த சொர்க்கம், மீண்ட சொர்க்கம், எனும் புகழ்பெற்ற ஆங்கில கவிதை நூல்களை இயற்றிய மில்டன் பார்வை தெரியாதவர் ஆவார்.
* முதலைக்குக் கீழ்தாடையை அசைக்கத் தெரியாது.
* சிலம்பு காலத்தை எடுத்துரைக்கும் சிலப்பதிகார கலைக் கூடம் பூம்புகாரில் உள்ளது.
* சாதாரண சமையல் உப்பின் வேதியல் பெயர், சோடியம் குளோரைடு ஆகும்.
* சந்திரன் பூமியில் இருந்து சுமார் 4 இலட்சம் கி.மீ தொலைவில் உள்ளது. ஒருமுறை பூமியைச்சுற்ற 27 நாள் 7 மணி 43 நிமிடம் 12 வினாடிகளை எடுத்துக்கொள்கிறது. இதன் விட்டம் 3,475 கி.மீ.

# கதை முற்றம்

## தலைக்கனம்



இளவரசன் ஒருவன் அயல்நாட்டின்மீது படையெடுத்து அந்த நாட்டை ஆக்கிரமித்து முற்றுகையிட்டு, தனது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வருவதற்குத் தீர்மானித்தான். இதைக் கேள்விப்பட்ட நண்பன் உடனடியாக இளவரசனைப் பார்க்கச் சென்றான்.

`நான் வருகின்ற வழியில் வடக்குத் திசையை நோக்கிக் குதிரையில் சென்றுகொண்டிருக்கின்ற ஒருவனைச் சந்தித்தேன். தெற்குத் திசையிலுள்ள ஒரு நாட்டிற்குத்தான் சென்றுகொண்டிருக்கின்றேன் என்று அவன் எனக்குக் கூறினான்'

`அப்படியெல்லாம் நீ ஏன் வடக்குத் திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றாய்?' என்று நான் அவனைக் கேட்டேன்.

`நான் தவறு செய்யவில்லை. சரியானதைத்தான் செய்கின்றேன். சரியான மார்க்கத்தில்தான் நான் செல்கின்றேன். ஏனென்றால் என்னிடம் சிறந்த குதிரைகள் இருக்கின்றன' என்று அவன் உறுதியுடன் பதிலளித்தான்.

`நீ சிறந்த குதிரைகள் வைத்திருக்கக்கூடும். ஆனால் நீ தவறான மார்க்கத்தில் சென்றுகொண்டிருக்கின்றாயே' என நான் கூறினேன்.

'அது மாத்திரமில்லை. என்னிடம் ஏராளம் பணம் இருக்கின்றது' அவன் செருக்குடன் கூறினான்.

`நீ நிறையப் பணத்தை வைத்திருக்கக்கூடும். ஆனால் செல்வது பிழையான வழியல்லவா?'

`மிக நன்று, என்னிடம் மிகச் சிறந்த, கைதேர்ந்த தேரோட்டி இருக்கின்றான்' அவன் பிடிவாதமாகக் கூறுகின்றான்.

`உன்னிடம் சிறந்த குதிரைகள் இருக்கலாம். நிறையப் பணம் இருக்கலாம். உனது தேரோட்டி கைதேர்ந்தவனாக இருக்கலாம். ஆனால் நீ முன்னேறிச் செல்லச் செல்ல, நீ செல்ல வேண்டிய நாட்டிலிருந்து மேலும் மேலும் தூரத்திற்குத்தான் சென்றுகொண்டிருக்கின்றாய். நீ எதிர்த் திசையில் தான் செல்கின்றாய். நீ செல்ல வேண்டிய சரியான திசை தெற்கு. அதற்குப் பதிலாக நீ தவறாக எதிர்த் திசையில் அதாவது வடக்குத் திசையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றாயே'

நான் அவனுக்கு விளக்கிக் கூறினேன். நான் கூறியதை அவன் கேட்டால்தானே. அவன் பிடிவாதமாகத் தனது தவறான வழியிலேயே சென்று கொண்டேயிருக்கின்றான்.

# அறிஞர் முற்றம்

## சார்ள்ஸ் டார்வின் (கி.பி. 1809 – 1882)



`உலகில் உயிரினங்கள் எவ்வாறு தோன்றின?' `வலிமை உள்ளவை மட்டுமே எஞ்சியிருக்கும்' என்பதன் பொருள் என்ன? போன்ற கேள்விகளுக்க விடைகாண முயற்சி செய்து வெற்றியடைந்தவர் சார்ள்ஸ் றொபர்ட் டார்வின் என்ற விஞ்ஞான மேதை.

இவர் 1809ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதி இங்கிலாந்து நாட்டில் ஸ்ரூவ்ஸ் பர்ரி என்ற இடத்தில் பிறந்தார்.

புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ், எடின்போர்க் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றார். பல்கலைக்கழகத்தில் இவர் வைத்திய கல்வி பயின்ற போதும் அதில் வெற்றி பெறவில்லை. உயிரினங்களின் இயற்கை வரலாற்றை ஆராய வேண்டும் என்பதிலேயே அதிக ஆர்வம் கொண்டார்.

இவரது பெயருடன் பரிணாம வளர்ச்சிக்கோட்பாடும் இணைந்தே காணப்படுவதாகக் கருதப்படுகின்றது. பரிணாம வளர்ச்சிக்கோட்பாடு என்பது எவ்வாறு உயிரினங்கள் உலகில் தோன்றி படிப்படியாக வளர்ச்சியடைந்தன என்பதனை விளக்குவதாகும். இவர் தனது விளக்கங்களை `இயற்கைத் தேர்ச்சி' என்ற தத்துவத்தின் அடிப்படையில் முன்வைத்தார். அதன் மூலம் குரங்கில் இருந்தே மனிதன் படிப்படியாக உருவாக்கம் பெற்றான் என்று நிரூபிக்க முயன்றார்.

சார்ள்ஸ் டார்வின் மிகப்பெரிய விஞ்ஞானத் தேடல் ஒன்றை மேற்கொள்வதற்காக `பீகிள்' என்ற கப்பலில் 1831ம் ஆண்டு டிசம்பர் 27ம் திகதி புறப்பட்டார். சுமார் ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆராய்ச்சியில் ஈடுபட்டார். டார்வின் வாழ்வில் இடம் பெற்ற மிகமுக்கியமான நிகழ்வு இதுவாகும். இந்தப் பிரயாணத்தின்போது டார்வின் பல நாடுகளின் புதிய பல தாவரவகைகள், மிருகங்கள் முதலானவற்றை அறிந்து கொள்ளும் அனுபவத்தைப் பெற்றார். நீண்ட ஆராய்ச்சியின் பின் 1859ம் ஆண்டு புகழ்பெற்ற `உயிரினங்களின் ஆரம்பம்' என்ற இவரது நூல் வெளியிடப்பட்டது. உயிரினங்கள் சூழலுடன் நடத்தும் போராட்டமே வாழ்க்கை என்ற தத்துவத்தை இந்நூல் அடிப்படையாகக் கொண்டிருந்தது. சூழலுடன் இசைந்து வாழக்கூடிய மிருகங்களும், தாவரங்களுமே தொடர்ந்து உயிர் வாழ்கின்றன என்றும், அவ்விதம் வாழக்கூடிய எதிர்காலப் பரம்பரையைத் தோற்றுவிக்கின்றன என்றும் இவர் விளங்கப்படுத்தினார்.

1871ம் ஆண்டு இவர் வெளியிட்ட `மனிதனின் தோற்றுவாய்' என்ற நூல் `மனிதனின் முன்னோர்கள் மனிதக் குரங்குகளே' என்பதற்கான சாத்தியப்பாட்டை ஆராய்வதாக இருந்தது. இக் கருத்துக்கள் இக்காலத்தில் பெரும்வாத விவாதங்களை உண்டு பண்ணின. கடவுளே மனித இனத்தையும், ஏனைய ஊயிரினங்களையும் உண்டாக்கினார் என்று நம்பிக்கை கொண்டவர்களை இக்கருத்துக்கள் கோபம் கொள்ளச் செய்தன.

இவற்றைவிட இவரது பிரயாண அனுபவங்கள், பிரயாணத்தின் போது கண்ட மிருகங்கள், தாவரங்கள், மலர் வகைகள், விதைகள், கடல் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் பற்றியும் டார்வின் எழுதினார். இவற்றை `பீகிளின் பிரயாணம்' என்ற நூலில் தொகுத்து 1836ம் ஆண்டு வெளியிட்டார்.

சார்ள்ஸ் றொபர்ட் டார்வின் 1882ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி இவ்வுலகில் இருந்து மறைந்தார். என்றாலும் இவர் இவ்வுலக மனிதரிடையே விட்டுச் சென்ற சிந்தனைக்குரிய கருத்துக்கள் தொடர்ந்தும் அலசி ஆராயப்பட்டு வருகின்றன. அவர் எழுப்பிய பல கேள்விகளுக்கு அடுத்துவரும் புத்தாயிரத்திலாவது விடை கிடைக்குமா என்று பலரும் முடியைப் பிய்த்துக்கொள்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா?

# அறிஞர் வாழ்வியல்


## கற்ற பாடம்

கோபால கிருஷ்ண கோகலே பள்ளி ஆசிரியராக இருந்தார். ஒரு நாள் கப்பலைப் பற்றிய பாடத்தை நடத்த வேண்டியிருந்தது. அந்தப் பாடத்தில் கப்பலைப் பற்றி எழுதியிருந்த சில விபரங்கள் அவருக்குப் புரியவில்லை. `இந்தக் கப்பல் பாடத்தைப் பிறகு படிக்கலாம்' என்று ஒத்தி வைத்துவிட்டு அன்று வேறு பாடம் நடத்தினார். மறுநாளே அருகில் இருந்த துறைமுகத்துக்குப் போய், ஒரு கப்பலில் ஏறி, அதன் கேப்டன் மூலமாக கப்பலைப் பற்றிய அனைத்து விவரங்களையும் நேரில் கண்டு, கேட்டு தெரிந்து கொண்டார் கோகலே, அடுத்த வகுப்பில் முதல் நாள் நடத்தாமல் விட்ட கப்பல் பாடத்தை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கமாக நடத்தினார்.

இந்த நேரத்தில் டிக்சிற் விடுப்பில் தலைநகர் புதுடில்லியில் இருந்தார். அவரைக் கொழும்புக்கு வந்து 17 பேரின் விடுதலையைப் பெற்றுக் கொடுக்கும்படி நான் சொன்னேன். எனது அணியைச் சேர்ந்த டேபிந்தர் சிங் விமானம் மூலம் சென்றார். நான் திருகோணமலை விமான நிலையத்தில் இருந்தேன். டேபிந்தர் சிங், டிக்சிற், வேறு இந்திய அதிகாரிகள் கொழும்புக்கு வந்தார்கள். அவர்களால் ஜெயவர்தனாவை வெல்ல முடியவில்லை. அவர் பிடிவாதமாக இருந்தார். அடுத்த நாள் டேபிந்தர் சிங் திருகோணமலைக்கு என்னிடம் வந்தார். `அவர்களை சிறீலங்காவிடம் ஒப்படையுங்கள். அவர்கள் என்ன வேணுமென்றாலும் செய்யட்டும். சிறீலங்கா முப்படைத் தளபதிகளும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அவர்களுடன் தேநீர் அருந்துவோம்' என்று டேபிந்தர் சிங் என்னிடம் சொன்னார்.

அதன்படி தேநீர் அருந்தினோம். சரியாக மதியம் இரண்டு மணிக்கு சென்னை இராணுவத் தலைமைச் செயலகத்திலிருந்து எனக்கு ஒரு செய்தி வந்தது. 'ஐ.பி.கே.எப். கட்டளைத் தளபதி சிறீலங்காவின் அரசியல் அதிகாரங்களில் ஏன் தலையிடுகிறார்? தயவுசெய்து பலாலியில் நீங்கள் போட்ட முற்றுகையை நீக்குங்கள். சிறீலங்காத் தலைவர்கள் எது வேணுமென்றாலும் செய்யட்டும்' நான் எனது கேணல் தர அதிகாரி ஹோசியர் சிங்குடன் தொடர்பு எடுத்தேன். அவர் பலாலியில் இருந்து என்னுடன் பேசினார். `இங்கு நோயாளர் காவு வண்


புலேந்திரன்


குமரப்பா

## அங்கம் 17

(THE WILL TO FREEDOM BY ADELE BALASINGHAM PAGE 129) 'ஒரு கெட்டிக்கார இராசதந்திரி என்று பலரால் பார்க்கப்பட்ட டிக்சிற்றை எல்.ரி.ரி.ஈ தலைமை கர்வம் பிடித்தவராகவும் நம்பமுடியாதவராகவும் கணித்தது. டில்லியில் வைத்து எல்.ரி.ரி.ஈ தலைவர் படுமோசமாக

கெடுத்துவிட்டது. பன்னிரு வேங்கைகள் விவகாரத்தில் சிறீலங்கா எடுத்த நிலைப்பாடு ஒப்பந்த முறிவை ஏற்படுத்தியது என்கிறார் பண்ருட்டி இராமச்சந்திரன். அவர்களுடைய உயிரைக் காப்பாற்ற ஐ.பி.கே.எப் தவறியுள்ளது. இதன் காரணமாக ஒப்பந்தப்படி நடக்க விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர். விடுதலைப் புலிகளை சாந்தப்படுத்தாமல் அல்லது அவர்களோடு மீண்டும் பேசாமல் ஆயுதங்களைக் களையும்படி ஐ.பி.கே.எப் படையை ராஜீவ் காந்தி உத்தரவிட்டார். இத்தீர்மானம் எடுக்கப்படும்போது நான் (பண்ருட்டி இராமசந்திரன்) புதுடில்லியில் இருந்தேன்.

ஆயுதம் களையும்படியான உத்தரவை நான் கடுமையாக எதிர்த்த காரணத்தால் ராஜீவ் காந்தி நடத்திய கூட்டத்தில் இருந்து வெளியேறும்படி நான் கேட்கப்பட்டேன். நான் உடனடியாக ஜீ.பார்த்தசாரதி வீட்டிற்குச் சென்று நடந்தவை யாவற்றையும் அவருக்குச் சொன்னேன். அவர் சொன்னார். 'இந்தப் பெடியனுக்கு முதிர்ச்சி போதாது. எல்லாம் முடிந்து போய்விட்டது. ஒன்றையும் இனி மீட்க முடியாது' அவருடைய தீர்க்கதரிசனம் உண்மையாக நிறைவேறியது. தனது இணையதளச் செய்தியில் (INDIA TODAY COM.WEBSITE MAY 2000) பின்வரும் வரலாற்று நிகழ்ச்சி நிரலை பண்ருட்டி இராமசந்திரன் சொற்களாக வடித்துள்ளார்.

# பன்னிரு வேங்கைகள் விவகாரத்தில் சிறீலங்கா எடுத்த நிலைப்பாடே ஒப்பந்த முறிவை ஏற்படுத்தியது !

டிகள் இருக்கின்றன. சயனைற் நஞ்சை வெளியேற்ற மருத்து வமனை வசதிகள் தயாரகியுள்ளன.' இதன்பின் முற்றுகையை நீக்கும்படி உத்தரவு கொடுத்தேன். சிறீலங்காபப் படையினர் பாய்ந்து சென்றனர், அவர்கள் சயனைற் உட்கொண்டனர். இந்திய இராணுவம், அதுதான் ஐ.பி.கே.எப் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லையே. இது படுமோசமான விளைவுகளை ஏற்படுத்தியது.

அந்த டிக்சிற் இப்போது என்னைக் குறை சொல்கிறார். ஒருமுறை டிக்சிற் என்னிடம் சொன்னர் 'பிரபாகரனைச் சுடு, மாத்தையாவைச் சுடு' இது அவருடைய கட்டளை, நான் அவருக்குச் சொன்ன பதில் 'நான் உங்களுடைய கட்டளையை ஏற்க மாட்டேன். உங்களுடைய கட்டளையை நான் ஏற்பதில்லை. வெள்ளைக் கொடியின் கீழ் எங்கள் சந்திப்பு நடப்பது வழமை. வெள்ளைக் கொடியின்கீழ் ஒருவரும் சுடுவதில்லை.'

கேள்வி:- டிக்சிற் தவறிழைத்து விட்டார் என்று கருதுகிறீர்களா? இப்படுகொலைகளுக்கு இராசதந்திரிகளும்,



## ஆராரோ...! ரோ ரோவோ !


( பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர் )

சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடமும் முக்கிய காரணங்களாகவுள்ளன. என்னைக் காணும்போது புலேந்திரனை என்னிடம் தாருங்கள் என்று சிறீலங்கா இராணுவ அதிகாரி சிறில் றணதுங்கா கேட்பார். இந்தியப் பிரதமரின் பிற்பலம் டிக்சிற்றிற்கு இருந்தது. அவருக்கு எல்லாச் சுதந்திரமும் வழங்கப்பட்டிருந்தன. அவர் மேசையில் குத்தி ஜெயவர்த்தனாவுக்கு போராளிகளைத் தர முடியாது என்று சொல்லியிருக்கலாம். இக்கோரிக்கையை ஜெயவர்த்தனாவால் மறுக்க முடியாது.

முன்னால் இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்சிற் பற்றி விடுதலைப் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்தின் மனைவி அடேல் பாலசிங்கம் தமது நூலில் எழுதியதைப் பார்ப்போம்

நடத்தப்பட்டதை நம்ப முடியாமல் இருக்கிறது. உடன்படிக்கை உருவாக்கத்தில் பங்குதாரர்களாக இல்லாத எல்.ரி.ரி.ஈயை ஆதரவு வழங்கும்படி எப்படிக் கோரமுடியும். இறுதியில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக இந்தியா பெரும் விலை கொடுக்க நேர்ந்தது.'

இடைத்தரகராகவும், பார்வையாளராகவும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்த பண்ருட்டி இராமச்சந்திரன் மனமுடைந்த நிலையில் சொன்னதையும் இங்கு குறிப்பிடுவோம்- (S. PANRUTTI RAMACHANDRAN, INDIA TODAY COM. WEBSITE MAY 2000) சில முற்போக்கான அம்சங்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் இருந்தாலும் அது 'முளையிலே கருகிய பயிராகவே' இருந்தது. ஒப்பந்தம் உருவாக்கப்பட்டபின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் காட்டப்பட்டது. நான் விடுதலைப் புலிகளின் ஆதரவைத் திரட்டுவதற்காக முயற்சி செய்தேன். அதிலுள்ள சில நல்ல அம்சங்களை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினேன். அவர்கள் என்னை ஒரு



கேள்வி கேட்டார்கள். 'இந்தியாவும் இலங்கையும் செய்யும் ஒப்பந்தத்திற்கு நாம் ஏன் ஆதரவு வழங்கவேண்டும்.?' இருந்தாலும் ஒப்பந்தத்திலுள்ள மூன்று சிறப்பம்சங்களை விடுதலைப் புலிகளின் தலைவருக்கு நான் எடுத்துக் கூறினேன்.

*1. முதன் முறையாக வடக்குக் கிழக்கு தமிழர் தாயகமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.*

*2) தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இதுவரை செய்து கொண்ட ஒவ்வொரு ஒப்பந்தமும் சிங்களவர்களால் மீறப்பட்டுள்ளன. இம்முறை அவ்வாறு நடவாது என்பதற்கு இந்தியா உத்தரவாதம் வழங்குகின்றது.*

*3) ஒன்றிணைந்த தமிழர் தாயகத்தில் ஒரு இடைக்கால நிர்வாகத்தை நிறுவும் வசதியை ஒப்பந்தம் வழங்குகின்றது.*

ஆனால் பண்ருட்டி இராமச்சந்திரன் கூற்றுப்படி திட்டமிட்டபடி ஒப்பந்தம் முன்னேறாமல் தடுப்பதற்காக சிறீலங்கா அரசு இந்தியாவின் முதுகில் குத்திக் காரியத்தைக்

'இந்திய அரசின் 24 மணி நேரத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதம் களையும் திட்டம் கிட்டத்தட்ட இரு வருடம் இழுபட்டது. பின்பு ராஜீவ் காந்தியின் மரணம் உட்பட்ட சோக வரலாறாக முடிவுற்றது.'

பன்னிரு வேங்கைகளும் ஒக்ரோபர் 5ம் நாள் வீரச்சாவடைந்தனர், ஒக்ரோபர் 10ம் நாள் புலிகளுக்கு எதிரான ஒப்பறேஷன் பவான் (புயல்) என்ற இராணுவ

> **ராஜீவ் காந்தியின் உயிரை தமிழர்களின் உயிரிலும் பார்க்க பெறுமதி மிக்கதாகத் தமிழர்களால் கருத முடியவில்லை. 'அந்த உயிர்தானா ஒரு உயிர்**

நடவடிக்கை தொடங்கிவிட்டது. ராஜீவ் காந்தியின் மேற்கூறிய தீர்மானத்திற்கு அமைவாக இப்போர் நடவடிக்கை தொடங்கப்பட்டது. இந்தியப் படைகள் வெளியேறும்வரை தமிழர்களுக்கு எதிரான இந்திய அரசின் போர் தொடர்ந்தது. 8000 வரையிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர், பல கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ராஜீவ் காந்தியின் உயிரை தமிழர்களின் உயிரிலும் பார்க்க பெறுமதி மிக்கதாகத் தமிழர்களால் கருத முடியவில்லை. 'அந்த உயிர்தானா ஒரு உயிர்' என்று ஒரு வரலாற்று ஆய்வாளர் கேட்டதை நாமும் இங்கு கேட்கிறோம்.

திரு. டி.ஆர்.கார்த்திகேயன் போன்ற இந்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகிறோம். கொலைகளுக்கு பின்னணிக் காரணமும் உந்துதலும் உண்டு. இதை மோட்டிவ் (MOTIVE) என்பார்கள். அவருடைய 'உண்மையின் வெற்றி' என்ற நூலின் தோல்வி மோட்டிவ் பற்றிப் பேசப்படாததால் ஏற்படுகின்றது. ராஜீவ் காந்தியால் வஞ்சிக்கப்பட்டோர் பதிலடி கொடுப்பதில் என்ன தவறு? அவர் அனுப்பிய படையினரால் மானபங்கம் செய்யப்பட்ட பெண் பதிலடியைக் கொடுக்கும்போது அது பாவலர் நீதியாக (POETIC JUSTICE) உருவெடுக்கின்றது.

(இன்னும் வரும்)




மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்

Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்

சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 கரட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்

மோகன் ஜுவல்லர்ஸ்

வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes
என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

MOHAN JEWELLERS & TEXTILES
Elisabethen anlage 25
4051 Basel
Tél - 061 271 41 09
Fax - 061 271 41 17
WWW.mohantextiles.com

# உயிரின் இயக்கம்



'அறிதல்' என்ற செயற்பாடு மனிதனுடைய இறந்த காலத்துடன் இணைந்தது.

அனுபவமும், சம்பவம் ஒன்றை அனுபவமாக்கும் செயற்பாடும் மனிதனுடைய இறந்த காலத்துடன் இணைந்தவை. 'அறிதல்', 'அனுபவித்தல்' ஆகிய இந்த இரண்டு செயற்பாடுகளும் அனுமானத்துடனும் (inference) ஊகித்தலுடனும் (presumption) தொடர்பு கொண்டவை.

நிகழ் காலத்தில் நிகழும் செயற்பாடுகளைக் கொண்டு இறந்தக்காலச் செயற்பாடுகளை நாம் அனுமானிக்கின்றோம். எனவே இறந்த கால அதிகாரத்தையும், இறந்த காலத்தை ஏற்றுக்கொள்ளும் மனப் பான்மையையும் அடிப்படையாகக் கொண்டே எங்களது வியாக்கியானங்களும் அனுமானங்களும் அமைகின்றன. நிகழ்காலமென எம்மால் அழைக்கப்படும் கணத்தில் உள்ளதை நேரடியாகவும் உடனடியாகவும் எதிர்கொள்ளும் நிலையை இவை இழக்கச் செய்கின்றன.

புலன்களுக்கப்பால், அறிவெல்லையைக் கட-ந்து, கற்பனை இல்லாத மெய்ம்மையை அறியும் சமய நாட்டமும், தேடலும், சமயத்தால் தாபிக்கப்பட்ட மரபுக்கோட்பாடுகளும் கூட இறந்த கால நீட்சியின் அறிதலில்-அனுபவிப்பதில் இருக்கும் அவா எங்களது உடம்பின் நரம்பு - வேதியல் முறையில் ஓர் இடைநிறுத்தத்தையே தோற்றுவிக்கிறது. அறிந்து கொள்வதற்கு அல்லது அனுபவிப்பதற்கு எம்முள் அவா எழும்போது, அந்த இடை நிறுத்தத்தின் - அவாவின் - அந்த எதிர்பார்ப்பின், நரம்பு - வேதியல் முறையின் மீதான நலிவினால், தளர்வினால் நாம் தடுத்து நிறுத்தப்படுகின்றோம். இது ஒரு விதக் 'கைப்பற்றும் ஆர்வத்தால்' உந்தப்பட்ட அவாவாகும்.

இது 'நான்' என்ற உணர்வு நிலையை- புல உணர்வைத் தான் பலப்படுத்துகின்றது. அது அகந்தையின் விருப்பங்களையும் தாபிக்கப்பட்ட நிறுவனங்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட கோட்பாட்டு அனுபவங்களையும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இறுக்கமான அனுபவங்களையும் நியாயப்படுத்தும். நரம்பு- வேதியல் முறையானது ஒவ்வொரு நலிவிலிருந்தும், தளர்விலிருந்தும், சிரமத்திலிருந்தும் விடுதலை பெறும் போது தான் மாசற்ற பார்வை - புலனுணர்ச்சி சாத்தியமாகும். எங்களிலிருந்தும் வேறுபட்ட, பிறிதான, அதாவது, எங்களிலிருந்தும் பிரித்தெடுக்கப்படத்தக்க ஒன்றைப் பற்றிய அறிவையே நாம் பெற்றுக் கொண்டு இருக்கின்றோம்.




அனுபவத்திற்கும் இது பொருந்தும். ஒவ்வோர் அனுபவமும் எமது உள உடல் தளத்திலேயே உயிரை, காணும் சக்தியை (Seeing energy), நுண்ணறிவை (intelligence). எமது அகநிலைப் பண்பாய் (Self) எப்படி எங்களால் அறிய இயலும்? அப்படி அறிய முயலும் போது அது வெறுமனே எமது உடலை ஒரு நிலைக் கண்ணாடியில் விம்பமாய்க் காண்பதையே ஒத்திருக்குமன்றோ? எனவே உயிரின் இயக்கத்தை அறிந்து கொள்ளுதல் என்பது முடியாத காரியமாகும். சொற்களின்- அடையாளங்களின்- வரைவிலக்கணங்களின்- விபரங்களின்- அறிவின் ஆதிக்கங்களின் குறுக்கீடுகள் எவையும் இல்லாது எங்களது உடம்புக்குள் உயிரின் இயக்கத்தைக் காண்பது சாத்தியமா? நுண்ணறிவின் சக்தி (energy of intelligence) தன்னைத் தானே காணுமா? பிரபஞ்சத்தில் முழு உயிரும் துடித்ததிர்வதே விழிப்புணர்வின்- நுண்ணறிவின் சக்தியின் நடனமாகும்.

இந்நடனத்தை நாம் மிருகங்களிலும், பறவைகளிலும், மரங்களிலும், பூக்களின் மலர்விலும், சமுத்திரங்களிலும், ஆறுகளிலும், மலைகளிலும் காண்கின்றோம்.

விழிப்புணர்வுக்கும் ஒரு சக்தியுள்ளது. ஆனால் அதனைச் சுயவிழிப்புணர்வு என்று கூறிவிட முடியாது.

ஏனெனில் விழிப்புணர்வுக்கு மையம் கிடையாது. சுயம் (self) மையத்தையே ஆதாரமாகக் கொண்டு இயங்குவது. அசையும் பொருள்களைப் பற்றியும் அசையாப் பொருள்களைப் பற்றியும் நாம் அறிவு பெறலாம். அவற்றைப் பற்றி விஞ்ஞான பூர்வமாக நூல்களையும் எழுதிக் குவிக்கலாம்.

ஆனால் விழிப்புணர்வோ கணப்பொழுதின் உள்ளத்து முழுமையைத் தழுவியது.

அது ஒரு குறிப்பிட்ட அம்சத்தை அதன் முழுமையிலிருந்து பிரித்தெடுக்காமல் பார்க்க வல்லது.

மையம் உள்ள ஒன்றையே பிரிக்க இயலும். விழிப்புணர்வோ (awareness) முழுமையானது. எனவே அது மையம் அற்றது. 'அறிதல்', 'அனுபவித்தல்' ஆகியவற்றின் பிடிகளிலிருந்து நாம் விடுபடத்தயாராகி, வாழ்வின் இயக்கத்துடன் இருப்பதையும் - வாழ்வின் நிகழ்வுடன் இருப்பதையும் நாம் காணும் சக்தியிலிருந்து சிறிதளவேனும் பிறழாது ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்போமேயானால், விழிப்புணர்வின் சக்தியானது புதிய ஆக்க ஆற்றலை (Creative energy) எமக்கு அளிக்கும். எத்திசையை நோக்கியும் எவ்வித உளவியல் இயக்கமும் இல்லாது, நிகழ்வுகளோடு, நடந்துகொ-ண்டிருக்கும் காரியங்களோடு (Facts) மட்டும் இருந்து கொண்டிருப்பது எளிமையான வாழ்வாகும். எளிமையிலிருக்கும் போதே ஆன்மீகக் கூட்டுறவுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த ஆன்மீகக் கூட்டுறவு நிலையானது. இது எந்த மூளை சார் அல்லது உளவியல் சார் செயற்பாட்டினதும் விளைவாகாது. இது, அமைதியின் அழகிலும் நேர்த்தியிலும், ஒன்றுமற்ற வெறுமை நிலையின் புனிதத்திலும் மட்டுமே நிகழும்.

காலந் தீண்டா உறவின் இயக்கத்திலேயே உண்மையின் வெளிப்பாடு நிகழும். உண்மை என்பது ஒரு கருத்துப் பொருளல்ல. மெய்ம்மை என்பதும் ஒரு கருத்துப் பொருளல்ல. ஏனெனில் அது ஒரு நிலையான பொருளல்ல. அதனைச் சிலர் தங்களது மடமையினால் ஒரு கருத்தியற் கோட்பாடாக-சித்தாந்தமாக- கொள்கையாக ஆக்கித் தங்களுக்குத் தெரிந்த சடங்குகளாலும், பூசைகளாலும் தம்வசப்படுத்தப் பார்க்கிறார்கள். தமது கலாச்சாரம் சார்ந்த போலியான சமூக இருப்புக்கு வேண்டுமானால் அவற்றைச் செய்துகொண்டு இருக்கட்டும்.

மூடநம்பிகையுடைய நாத்திகனாக இருப்பது அவர்களது உரிமை. ஆனால் மெய்ம்மையின் பெயரால், உண்மையில் பெயரால் அவற்றைச் செய்வதே கேலிக்கூத்தாக இருக்கிறது. விடுதலைக்கு அஞ்சி அதனை விழையும் அவர்களது செயற்பாடுகளே அருவருப்பை உண்டாக்குகிறது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், இயல் உலகோடு சார்ந்த பரிணாம வளர்ச்சியில் பங்கு கொள்பவர்களாகவே நாம் இருக்கின்றோம். அப்படிப் பங்கு கொள்வது எமது தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.

* * *



# எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...

## பூநகரி மண்மீட்புப் போரில் வித்தாகி வீழ்ந்த

## 2ம் லெப்.தண்மதி

யாழ். மாவட்டத்தில் நீலக்கடல் ஆர்ப்பரிக்கும் நிறைந்த இயற்கை வளமுடைய பூமியாம் வடமராட்சி மண்ணின், கிழக்குப் பகுதியிலே தாளையடி என்ற கடல்சார் பகுதியில்தான் தமிழீழ மக்களின் தண்மதி பிறந்தாள். தண்மதியின் பெற்றோர் பெயர் உலகநாதன் - கனகாம்பிகை. அவர்கள் தண்மதிக்கு வைத்த பெயர் சிவாஜினி. சிவாஜினிக்கு அண்ணா, அக்கா, தம்பி என மூன்று சகோதரர்கள். தாளையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர்கள் அதன் அயற் கிராமமான மருதமரமும், கேணியும் ஒருங்கே சேர்ந்த மருதங்கேணியில் வசித்து வந்தார்கள்.

சிவாஜினி, தனது ஆரம்பக் கல்வியில் இருந்து ஆண்டு 11 வரை மருதங்கேணி அ.த.க. பாடசாலையில் கல்வி கற்றாள். சிவாஜினியின் மாணவப் பருவம் எங்கள் நாட்டில் மோசமாகின. மருதங்கேணியும் மனித நேயமற்றவர்களால் தன் அழகையிழந்தது. இயற்கையோடு ஒட்டி வாழ்வில் களித்து மகிழ்ந்திருந்த எத்தனை மக்களது வாழ்வில் இடையூறுகள் நிகழ்ந்தன. எந்தையர் வாழ்ந்த நாட்டை, எதிரிகள் சீர்குலைத்தனர். எறிகணைகளும், விமானக் குண்டுகளும், பீரங்கிப் படகுகளின் ரவைகளும் வீதிகளை, வீடுகளை, பாடசாலைகளை விழு-ங்கி வந்தன. மக்களின் இயல்பு வாழ்வு, எங்கள் தாய் திருநாடேறி, வெறியாட்டம் புரிந்த எதிரிகளால் சீரழிக்கப்பட்டது.



மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர், மருதங்கேணி மக்களும் எதிரிகள் செய்த கொடுமையால் இடம் பெயர்ந்தார்கள். வடமாராட்சியின் வளங்களை அழித்து, அங்கு தங்களின் கால்களை அகலக்கால் பதித்தால், தங்களின் நடவடிக்கைகள் வெற்றியளிக்குமென திமிர் கொண்டு வெற்றிலைக்கேணியில் துருப்புக்களைத் தரையிறக்கினர். அந்நியன் எம் தேசமெங்கும் அகலக்கால் பதித்த காரணத்தால் தமிழர்களுக்கு இடப்பெயர்வு தொடர் கதையாகி நின்றது. இடப்பெயர்வுகள் மக்களை ஆட்கொள்ள, அவர்கள் சாரை சாரையாக வீதிவழி நடந்தார்கள். வீதிகள், மரநிழல்கள், வதிவிடங்கள் ஆகின. கல்லும் முள்ளும் கால்களைக் குத்த மக்களின் வாழ்வுப் பயணம் இன்னல் சுமந்தது.

அந்த வரிசையில் சிவாஜினியின் குடும்பமும் இடம்பெயர்ந்து வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் சிறிது காலம் இருந்தது. பின்பு திரும்பத் தங்கள் சொந்த ஊர் சென்றார்கள். சென்ற சிவாஜினி தன் கல்வியைத் தொடர்ந்தாள். கல்வி கற்றுக் கொண்டிருந்தவள் மனதில் நெருஞ்சி முட்போல் குத்தி நின்றது வெற்றிலைக்கேணித் தரையிறக்கம். வெற்றிலைக்கேணியில் இருந்து எறிகணைகள் மக்கள் குடியிருப்புகள் நோக்கி விதைக்கப்பட்டன. எதிரிகளின் ஆக்கிரமிப்பும், அட்டகாசங்களும் மண்ணை ஆக்கிரமிக்க அன்னை மண் பற்றும், அராஜகத்தின் மேல் ஆத்திரமும் கொழுந்து விட சிவாஜினி *(மாவீரராகி விட்ட தன் மைத்துனி கப்டன்.அருளுடன்)* 07.08.1991 அன்று தலைவன் அணியில் இணைந்தாள்.


தேசம் எரிக்கும் எதிரியின் செயல் கண்டு சீறியெழுந்த எரிமலை சிவாஜினி, வடமராட்சி கற்கோவளம் பகுதியில் காஞ்சனா-02 பயிற்சிப் பாசறையில் கடற்புலிகள் அணி சேர்ந்து பயிற்சிகள் பெற்றாள்.

பயிற்சியில் திறமை மிகுந்தவளாகத் திகழ்ந்தாள். சிவாஜினி உற்சாகம் மிகுந்தவள். பயிற்சியை திடமுடன் பெற்றவள், மானிப்பாயில் அரசியற்துறைப் போராளியாகக் கடமையாற்றினாள். மக்களுக்கான பணியைச் செய்து விடுதலை பற்றிய தெளிவை மக்கள் மத்தியில் வளர்த்தவர்களில் ஒருத்தியான தண்மதி, சண்டைக்கான பயிற்சி பெற்றாள். சிந்தனைத் தெளிவோட சிங்களப்படை மேல் சீற்றங்கொண்டெழுந்த புலி தண்மதி சண்டைக்களங்கள் பலவேறி ஆடி வந்தாள். அக்களங்களிலே ஒன்றாம் 'தவளை' நடவடிக்கை பூநகரி மண்ணை புல்லர்களிடம் இருந்து மீட்ட நடவடிக்கையில் வேகமுடன் செயற்பட்டாள் தண்மதி. பாரம்பரிய பூமியாம் பூநகரி நாகதேவன்துறை என்று பகைநின்ற தலம் எல்லாம் புகுந்தாடிய புலி தண்மதி பயிற்சி மிகு பெரும் படைகளுக்குச் சமாதி கட்டிய பூநகரி மண்மீட்புப் போரில், வித்தாகி வீழ்ந்து விட்டாள். பெற்ற வெற்றிக்கு மட்டுமல்ல தமிழீழ விடுதலைக்கும்.

11.11.1993 அன்று பல நூறு மாவீரர்களுடன் சிவாஜினி என்ற தண்மதி 2ம் லெப்.தண்மதியாய், தாய்மண் மீது தலைசாய்ந்து, அயர்வில்லா உறக்கம் கொண்டாள்.

*(தொடர்ச்சி 28ம் பக்கம்)*

# 100 மீற்றர் தூரத்தை 30 வினாடிகளில் ஓடிய 100 வயதுத் தாத்தா சாதனை!



100 வயது நிறைந்தவர்களுக்கான 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் கடந்தவாரம் தென் ஆப்பிரிக்காவில் கேப் டவுன் நகரில் நடந்தது. இதில் 50 தாத்தாக்கள் கலந்து கொண்டனர். இதில் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பிலிப் ராபினோவிட்ஸ் 100 மீட்டர் தூரத்தை 30.86 வினாடிகளில் அடைந்தார். இதற்கு முன்பு நடந்த பந்தயத்தில் ஆஸ்திரியாவின் எர்வின் ஜஸ்குல்ஸ்கி 36.19 வினாடிகளில் இந்த தூரத்தைக் கடந்தார். அதை ராபினோவிட்ஸ் முறியடித்தார்.

ஒரு வாரத்துக்கு முன்பு இவர் இதே தூரத்தை கடக்க எடுத்துக் கொண்ட நேரத்தைவிட இப்போது குறைந்த நேரமே எடுத்துக்கொண்டார். அப்போது நிறுத்தல் (எலக்ட்ரானிக்) கடிகாரம் பழுதுபட்டதால் போட்டியின் முடிவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதனால் அந்த போட்டி மீண்டும் நடத்தப்பட்டது. கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இவர் பெயர் இடம்பெற்றுள்ளது.

# மைக்கேல் ஜக்சன் வாடகைத் தாய் மூலம் 4 குழந்தைகளுக்குத் தந்தையாகிறார்?

'பொப்' இசைப்பாடகர் மைக்கேல் ஜக்சன் வாடகைத் தாய் மூலமாக ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகளுக்குத் தந்தையாகப் போகிறார். உலகப்புகழ் பெற்ற 'பொப்' இசைப் பாடகர் மைக்கேல் ஜக்சனுக்கு இப்போது வயது 45. இவரது முதல் மனைவி டெப்பி ரோவி மூலம் பிரின்ஸ் மைக்கேல் மற்றும் 2ம்-பிரின்ஸ் மைக்கேல் என்று 2 மகன்களும், பாரிஸ் மைக்கேல் என்ற மகளும் இருக்கிறார்கள். இதில் 2ம் மைக்கேல் யார் என்றே தெரியாத பெண்ணுக்குப் பிறந்தவன். ஒரு வாடகைத்தாய் மூலம் என் 2வது மகன் பிறந்தான். அந்தப் பெண்ணுக்கு என்னைத் தெரியாது என்று ஒரு பேட்டியில் மைக்கேல் ஜக்சன் கூறி இருந்தார். 2ம் பிரின்ஸ் மைக்கேலைத் தான் 2 ஆண்டுகளுக்கு முன்பு நவம்பர் மாதம் பெர்லின் நகர விடுதி அறையின் முன் உள்ள பால்கனியில் இருந்து தொங்கவிட்டபடி அபாயகரமாக ஆட்டினார். இது பெரிய சர்ச்சையானது.



இப்போது அவருக்கு இன்னொரு வாடகைத்தாய் மூலம் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் பிறக்க இருக்கின்றன. இந்தத் தகவலை அமெரிக்கப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. இச்செய்தியை மைக்கேல் ஜக்சன் பொய் என மறுத்திருக்கின்றார். அவரது செய்தித் தொடர்பாளர் ரேய்மன் பெய்ன் கூறுகையில், 'அந்தப் பத்திரிகைச் செய்தியில் உண்மை இல்லை. இதற்கு மேல் இதுபற்றி சொல்வதற்கு ஏதும் இல்லை' என்று அவர் குறிப்பிட்டார்.

இதைத்தொடர்ந்து அந்த வார இதழின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் 'நாங்கள் வெளியிட்ட செய்தி உண்மைதான்', என்று கூறினார். மேலும் அவர் கூறியதாவது:- "அந்த வாடகைத் தாயுடன் புளோரிடாவில் மைக்கேல் ஜாக்சன் கொஞ்ச நேரம் செலவிட்டார். அந்தப் பெண் கர்ப்பமாக இருக்கிறார். அவர் வயிற்றில் 4 குழந்தைகள் வளர்கின்றன. மைக்கேல் ஜாக்சனுக்காக அந்தக் குழந்தைகளை அந்தப்பெண் பெற்று எடுக்கப்போகிறாள். இவ்வாறு செய்தித் தொடர்பாளர் கூறினார்.

# உண்மை நிரூபணமாகியது..!



குரங்கில் இருந்து கூர்ப்படைந்து வந்தவன்தான் மனிதன் என்று ஆராய்ச்சிகள் சொல்லுகின்றன. அதை உண்மையென நிரூபிப்பதுபோல் நடந்துகொள்கின்றது, இஸ்ரேல் ரெல் அவி நகரத்துக்கு அருகிலுள்ள சபறி பூங்காவில் வசித்து வரும் மனிதக் குரங்கு ஒன்று. நடஷா எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த 5 வயதுக் குரங்கு மனிதர்களைப்போல அழகாக இரண்டு கால்களில் பூங்காவில் நடந்து திரிகின்றது.

படத்தில் நீங்களும் தான் பாருங்களேன்...!

## பலதும் பத்தும்

# மண்டெலாவை வாழ்த்திய முன்னாள்–இந்நாள் மனைவிகள்!!



தென் ஆபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டெலா கடந்த 17ம் திகதி தனது 86வது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இதனையொட்டி நடந்த விழாவில் கலந்துகொண்டு ஏராளமானோர் நெல்சன் மண்டெலாவுக்கு தமது வாழ்த்துக்களைக் கூறினார்கள். இதன்போது அவரது முன்னாள் மனைவி வின்னியும் (இடதுபக்கம்) இந்நாள் மனைவி கிரெசாவும் (வலதுபக்கம்) கலந்துகொண்டு வாழ்த்து கூறினார்கள்.

# 1,700 ஆண்டு பழமையான கண்ணாடிப் பாத்திரம்! 2 கோடி பவுண்சுக்கு ஏலம்!!

மத்திய கிழக்கு நாடுகளில் தயாரிக்கப்பட்ட 1,700 ஆண்டுகளுக்கு முந்தைய கண்ணாடிப் பாத்திரம் ஒன்று இலண்டனில் ஏலம் விடப்பட்டது. -கான்ஸ்டபிள் மாக்ஸ்வெல் கேஜ்கப்- என்று அழைக்கப்படும் இந்தப் பாத்திரம் எண்ணை விளக்காகப் பயன்படுத்தப்படக் கூடியது. இது இரண்டு கோடியே ஆறு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து அறுநூற்றைம்பது (2,646,650) பவுண்சுக்குக் கடந்த 14ம் திகதி ஏலத்தில் விற்கப்பட்டது. ஒரு கண்ணாடிப் பாத்திரம் இந்த அளவுக்கு ஏலத்துக்குப் போனது இதுதான் முதல் முறை ஆகும். ஒரே கண்ணாடியில் இது தயாரிக்கப்பட்டது என்றும், சிரியா நாட்டில் இது தயாரிக்கப்பட்டு இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

# இது மண் அள்ளுவதற்கு மட்டுமல்ல..!




உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் ஆசிரியர் லிங்கம் அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
இடம்: Breitenreinplatz -27, Bern

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
இடம்: Eigerplatz, Bern

தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33

# நத்தார் தினத்தை முன்னிட்டு



## Financial Consulting Gmbh & Sarah Star Thun

## இணைந்து வழங்கும் சுவிஸ் ஜனரஞ்சகப் பாடல் போட்டி

Solo Movies GmbH
Audio.Video.Kommunikationtechnik
Swiss-London-Srilanka
Tel.032 652 52 45,078 733 30 76
www.solomovies.com
Mail:vasi@solomovies.ch



## B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.எச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்



### Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்

Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்.....

சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்

இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்( Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich

குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம்.
அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch Tel: 079.757 74 75 | 078.605 99 41
031.911 03 38

- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஜனரஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி - (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை: பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75

Ammu Travels

S.K.TRADING GMBH
Quellen str 1, 8005 Zurich

Sri Sai Enterprise
Sihlhallen str 19, 8004 Zurich

சிகரம்

Zweierstr. 35, 8004 Zürich
Tel. 01/949 71 11
Natel. 079 / 678 41 20

Badenerstr. 125, 8004 Zürich

Mohan Jewellery & Textiles

Sakthy Jewellery
Elisabethenanlage 11, 4051 Basel

Basel SPT Textile & Jewellery
Elisabethenanlage 9, 4051 Basel

Ravi Jewellery
Knuppenmattstr 2, 3414 Oberburg

Suji Jewellery

AMBAL STORE
அம்பாள் ஸ்ரோர்ஸ்



INDIAN ASTROLOGER



# சாய்பாபா

# Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**

**(West London) South hall**

**Contact:**

**Tel: 07932724065 / 07939613067**



# INDIAN ASTROLOGERS FROM GENERATIONS

ஓம்





இந்தியாவில் பல தலைமுறைகளாக கைரேகை, முகநாடி எண்கணிதம், மாந்ரீகம், மருத்துவம் போன்ற துறைகளில் புகழ்பெற்று விளங்கும்

**பண்டிட் குமார சுவாமி அவர்கள்**
**பண்டிட் கிருஷ்ணா அவர்கள்**

பாரிஸ் மற்றும் ஜெர்மனி நகரங்களுக்கு வருகை தந்துள்ளனர்.
அம்பாளின் ஆருள்வாக்காலும் இவர்கள் தம் அனுபவத்தாலும் பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் எல்லா நன்மைகளும் பெற்று வாழ்க்கையில் வளம் பெற்றுள்ளனர்.

நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை ஆகிய முக்கால பலன்கள் தொழில், கல்வி, குடும்பம், திருமணம், குழந்தை பாக்கியம் மற்றும் உங்கள் பிரச்சனைகளை தெரியப்படுத்தி பரிகாரமும் கூறுகின்றனர்.

இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி சுவாமியை அணுகி வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று வாழுங்கள்.

*சுவாமிகளை அணுக வேண்டிய முகவரி*

*Mr. Pundit Krishna*
HÔTEL LAFAYETTE - Ro1 * NC
198, Rue Lafayette, 75010 Paris.
Métro: Louis Blanc, Gare du Nord
Tél: 06 23 28 09 22

*Mr. Pundit Kumar Swamy*
*Indian Travel Corner அருகில்*
**Münchner Str - 18**
**60329 FRANK FUTRT-Main**
**Tel: 01 60 99 21 38 68**



# பூபாளம் கணினிச் சேவைகள்

***Ours is not a business, its our profession***

**இது வியாபாரமல்ல; எங்கள் தொழில்**

**கணினித் துறையில் கல்விசார் தகமையும், தொழில்நுட்ப அனுபவமும் வாய்ந்த தொழில்நுட்பவியலாளரால்**



1. Cyber cafe கட்குத் தேவையான வலையத் தொடர்புகள், உங்கள் இல்லங்களுக்குத் தேவையான வலையத் தொடர்புகள், இணைய வலையத் தொடர்புகள் போன்றவற்றை ஏற்படுத்தியும் தருவோம்.

2. உங்கள் தேவைகளைச் சொல்லுங்கள், உங்கள் தேவைகளுக்கேற்ப, கணினிகளைப் புதிதாகத் தயாரித்துத் தருகின்றோம்.

3. திருத்த வேலைகள் எதுவானாலும் (Desktops or postable compeuters) அவற்றைச் சிறந்தமுறையில் சீர் செய்து தருவோம்.

## 4. கணினிகள் சம்பந்தமான ஆலோசனைகள்

**5. கணினி**















5-1. உதிரிப்பாகங்களையும்

5-2. அச்சு உபகரணங்களுக்குரிய மை வகைகளையும்








5-3. Video audio CD களையும்



5-4. DVD (Digital Versatile device - பலதிறன்கொண்ட சாதனம்) போன்ற பதிவு செய்யக்கூடிய CD களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எங்களது தகைமையும், அனுபவமும் வாய்ந்த தொழில் நுட்பவியலாளரின் சேவையை நீங்கள் பெற்றுக்கொள்ளக் கீழ்க்காணும் விலாசத்துடன் நேரிலோ, தொலைபேசிமூலமோ தொடர்பு கொள்ளுங்கள்

***22, Rue Perdonnet, 75010 Paris - Tél: 01 40 05 95 15 / 06 62 23 36 86***

# சேது சமுத்திரம் திட்டம் தேவையா?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### இத்திட்டம் அறிவியல் சிந்தனையா! அரசியல் இலாபமா!!

சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் போன்றவற்றுடன் சேதுக்கால்வாய்த் திட்டத்தை ஒப்பிடுவது மிகப்பெரும் தவறு. ஏனெனில், இத்திட்டம் அறிவியல் அடிப்படையிலும், தொழில்நுட்ப முறையிலும் தொடர்ச்சியாகப் பயன்தராது! சில ஆண்டுகளுக்குப் பிறகு இக்கால்வாயில் மணல் குவிந்து கப்பல் போக்குவரத்திற்குப் பயனற்றதாகிவிடும். ஏற்கெனவே, பாம்பன் கடல்வழியாகச் சிறிய கப்பல்கள் செல்லும் அளவிற்குத் தோண்டப்பட்டது. சில ஆண்டுகளில் இங்கு மணல் குவிந்ததால் அது பயனற்றதாகிவிட்டது.

நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதியிலிருந்து கடல் நீரோட்டத்தால் அடித்து வரப்படும் மணலானது பாம்பன் கடல் பகுதியிலும், மன்னார் வளைகுடா கடல் ஓரத்திலும் குவிகிறது. அதைத் தடுக்க இயலாது. இதுபோல மணல் குவிந்ததால் வாலிநோக்கம் துறைமுகத்தின் கரைக்கு இன்றுவரை கப்பல்களைக் கொண்டுசெல்ல முடியவில்லை. அங்கு கப்பல் உடைக்கும் தொழிலுக்குப்

— அசுரன் —

பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, அங்குள்ள கப்பல் உடைக்கும் நிறுவனம் மணல்வாரி கப்பல் மூலம் இம் மணலை அகற்றத் தமிழக அரசைக் கோரியுள்ளது.

மேலும் மன்னார் வளைகுடாவில் மணல் குவிந்து பல புதிய தீவுகளும் உருவாகியுள்ளதை, இக்கால்வாய் அமை-க்க ஆய்வு நடத்திய அமைப்புகள் கவனிக்கத் தவறிவிட்டன. எனவே சேதுக்கால்வாயிலும் சில ஆண்டுகளுக்குப் பிறகு மணல் குவிந்து, இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு ஒதுக்கும் பலகோடி ரூபாய் வீணாகிவிடும். எனவே இத் திட்டத்திற்குச் செலவிடும் தொகையை கடல்வாழ் உயிரன மேம்பாட்டிற்கு ஒதுக்கினால், கடலுணவு உற்பத்தி அதிகரித்து ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியாக அரசு பலகோடிகளைப் பெற முடியும் என்று தமிழக அரசின் வனத்துறையில் பணியாற்றிய மன்னார் வளைகுடா கடல் ஆராய்ச்சியாளர் தி.சண்முகராஜா எச்சரித்துள்ளார். *(தினமணி செய்தி 26.01.1999)*

### சுண்டக்காய் கால்பணம்! சுமைக்கூலி முக்கால்பணம்!!

ஆரம்பம் முதல் இன்றுவரை மத்திய அரசு மேற்கொண்ட எல்லா ஆய்வுகளிலும் இத்திட்டம் பொருளாதார அடிப்படையில் வரவேற்கத்தக்கது என்று கூறப்பட்டிருந்தாலும், `புரியாத, அடையாளம் தெரியாத, முறையாக விளக்கப்படாத வகையில் நவம்பர் 1989-ல் இத் திட்டம் பொருளாதார அடிப்படையில் சாத்தியமானதல்ல' என மத்திய அரசு அறிவித்துள்ளது! அது குறித்து 15.01.1999ல் இத்திட்டத்தை ஆதரித்து தினமணியில் கட்டுரை எழுதிய திரு வா.செ. குழந்தைசாமி அவர்கள் கேள்வி கேட்கும் அதன் ரகசியம் என்ன? அதை வெள்ளை அறிக்கையாக மத்திய அரசு வெளியிடத் தயங்குவது ஏன்?

அதாவது இத்திட்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முறையில் சாத்தியமானதல்ல! அதையும் மீறி இத்திட்டத்தை நிறைவேற்றினால், சில ஆண்டுகளில் மீண்டும் வந்து குவியும் மணலைத் தோண்டி எடுக்க ஆண்டுதோறும் மத்திய அரசு பலகோடிகளை ஒதுக்கவேண்டிய நிலை ஏற்படும். அதாவது இத்திட்டத்தால் 130 கோடி ரூபாய் வரவு என்பதற்குப் பதிலாக ரூபாய் 200 கோடி செலவு என்பதற்கே வழிவகுக்கும். அத்தோடு வளமான கடல்வளத்தை இழந்து, தற்போது கடலுணவு ஏற்றுமதி மூலம் அரசு பெற்றுவரும் அந்நியச் செலாவணியை இழக்க நேரிடும் என்பதே வெளியிடப்படாத அதன் இரகசியமாகும்.

### தேசப்பாதுகாப்பு என்பது கடல் வளமா! கடல் ஆழமா?

சேதுக்கால்வாய் நிறைவேற்றப்பட்டால் அது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கப்பல்கள் வந்து போகும் வழியாக இருக்குமே தவிர, பெரிய அளவிலான பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டுவிடாது. இதனால் கப்பல் கம்பெனி முதலாளிகளுக்கே இலாபம்! கப்பல்களில் இருந்து வெளியாகும். எண்ணெய் பிசுக்குகள், அழுக்குகள், குப்பைகளால் கடல் பகுதி மாசுபட்டு அபூர்வ கடல்வாழ் உயிரினங்கள் அழிந்துவிடும்! கப்பல் புகைபோன்ற அசுத்தங்களால் தீவுப் பகுதிகளில் வளரும் தாவரங்கள் கருகிவிடும். இப்பகுதிக் கடலின் இயல்பான குளிர்ச்சி மாறி, வெப்பம் அதிகமாகிவிடும். கப்பல் போக்குவரத்தால் அபூர்வ உயிரினங்கள் சிக்குண்டு மடியும். உலக நாடுகளால் இன்றுவரை `கடல் ஆராய்ச்சியாளர்களின் சொர்க்கம்' என்று போற்றிப் பாதுகாக்கப்படும் மன்னார் வளைகுடா கடல் சீரழிந்துவிடும்!

மேலும் அபூர்வமான பவளப்பாறைகள் அழியுமாதலால் கடலரிப்பு ஏற்பட்டு கடல் மட்டம் உயரும். பருவமாற்றம் நிகழ்ந்து மழை அளவு குறையும். புயல் வீசும் அபாயம் இக்கடலில் அடிக்கடி ஏற்படும். குறிப்பாக மீனினங்களே அழிந்து வருங்காலத்தில் மீனவர்கள் தற்கொலை செய்ய நேரிடும்! எனவே இப்பகுதியில் இரசாயனத் தொழிற்சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள், கடல் பொறியியல் திட்டங்கள் எதையும் தொடங்குவது கூட ஆபத்தாகும் என்று கடல்வள ஆராய்ச்சியாளர் முனைவர் தி. சண்முகராஜா அவர்கள் ஓர் அறிக்கை மூலம் மத்திய அரசிற்கு ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளார். *(மாலை மலர் 15.11.98)*

**அபூர்வமான பவளப்பாறைகள் அழியுமாதலால் கடலரிப்பு ஏற்பட்டு கடல் மட்டம் உயரும். பருவமாற்றம் நிகழ்ந்து மழை அளவு குறையும். புயல் வீசும் அபாயம் இக்கடலில் அடிக்கடி ஏற்படும். குறிப்பாக மீனினங்களே அழிந்து வருங்காலத்தில் மீனவர்கள் தற்கொலை செய்ய நேரிடும்!**

ஏற்கனவே, தமிழகமெங்கும் ஆழ்கடலில் அந்நிய நாட்டுக் கப்பல்கள் மீன்வளத்தைக் கொள்ளையிடுகின்றன. வெளிநாட்டுக்குத் தேவைப்படும் கடலோர கார்னட் மணலையும் முதலாளிகள் சூறையாடிவருகின்றனர். அதோடு பன்னாட்டு இந்தியப் பெரு முதலாளிகளால் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலையில் இருந்து நச்சுக் கழிவு நீரும் கடலில் கலக்கப்படுகிறது. அதனால் பாரம்பரிய உழைக்கும் மீனவர்கள் நாளுக்கு நாள் தங்களது தற்சார்பையும், மீன்பிடித் தொழிலையும் இழந்து வருகின்றனர். அதைப் பற்றி கவலையோ, அதற்கான போராட்டமோ நடத்த முன் வராமல், பன்னாட்டு, உள்நாட்டு முதலாளிய நலனுக்காக, சேதுக்கால்வாய்த் திட்டத்தை ஆதரிப்பதுதான் தமிழக இயக்கங்கள், கட்சிகளின் நிலைப்பாடு. அதோடு தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை, பாரம்பரியமான கடல் தொழிலை இத்திட்டத்திற்காக தாரைவார்ப்பது என்பது உழைக்கும் மக்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகமே ஆகும்!

### சேதுக்கால்வாய்த் திட்டம் நிறைவேறினால்...

தேசப்பாதுகாப்பு என்பது பன்னாட்டு ஏகாதிபத்திய



மற்றும் இந்திய ஏகாதிபத்திய அரசின் பாதுகாப்பே ஆகும்.

கப்பல் பயணத்தூரம், எரிபொருள் மிச்சம் என்பது அரசு தொழிற்சாலைகளுக்கும் மற்றும் தனியார் தொழிற்சாலை முதலாளிகளுக்கும், கப்பல் கம்பெனி முதலாளிகளுக்குமே இலாபமாகும்.

அந்நியச் செலாவணி ரூ.130 கோடி வரவு என்பது ஆண்டுதோறும் 200 கோடி வீண்செலவு என்பதற்கே வழிவகுக்கும்.

துறைமுக வளர்ச்சி, ஏற்றுமதி-இறக்குமதி அதிகரிப்பு என்பது உள்நாட்டுத் தரகு வியாபாரிகள், தமிழ் முதலாளிகளின் இரும்புப் பெட்டிகளில் பணம் நிரம்ப மட்டுமே வழிவகுக்கும்.

உலகின் சிறந்த கடல்வளத்தைத் தமிழகம் இழக்க நேரிடும்.

சுற்றுச்சூழல் சீரழிந்து மழை வளம் குறையும், அடிக்கடி புயல் வீசும் அபாயம் ஏற்படும், கடலோரப் பகுதிகளில் நிலத்தடி நீர்வளம் குறையும்.

இயல்பாக மணல் குவியும் இடத்தை சோதனைக்காக தோண்டினாலும் கடல்வளம் சீரழிந்துவிடும்.

தற்சார்பு உற்பத்திக்கு வழிவகுக்கும் பாரம்பரிய கடல்தொழில் சீரழிந்து, தூத்துக்குடி முதல் இராமேசுவரம் வரை மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கும் இலட்சக் கணக்கான மீனவர்கள் உழைப்புப் பறிபோகும்.

மன்னார் வளைகுடா சுடுகாடாக மாறிவிடும். பாதுகாக்கப்படவேண்டிய அபூர்வ உயிரினங்கள் அழிந்துவிடும், இடம்பெயர்ந்து சென்றுவிடும்.

தற்போது கடலுணவு உற்பத்தியின் ஏற்றுமதி மூலம், அரசு பெற்றுவரும் அந்நியச் செலாவணியை இழக்க நேரிடும்!


(முற்றும்)

**நன்றி: திண்ணை**

லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்
தரமான, கூடவே சுவையான இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91
எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை
யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE
ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.
Pub-Fr

## 'முரசு' குறுக்கெழுத்துப்போட்டி

இல: 04



### இடமிருந்து வலம்

01. தன் மகனை இவ்வாறு பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், அவனைப் பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாளாம்.
03. உடற்கவர்ச்சியை மட்டும் வைத்து இது வந்தால் இடையில் இது முறிந்துவிடும் *(குழம்பியுள்ளது)*
04. இது நிகழ்ந்து விக்கல் மேலெழுவதற்கு முன்னே நல்லதைத் தாமதியாது செய்ய வேண்டுமென்று உத்தரவேதம் கூறுகிறது.
06. எங்களது இது செறிந்த படையைக் கண்டு அஞ்சுகிறது சிங்களதேசம்.
09. இதைத் தீர்க்க எதிரிகள் சந்தர்ப்பம் பார்த்திருப்பர் *(குழம்பியுள்ளது)*
11. எதிரிப்படையினரின் அசைவுகள் குறித்து எமது வீரர்கள் இடைவிடாது இதனைச் செய்துகொண்டிருப்பர்.
14. இதைக்கொண்டு மீன் பிடிப்பர் *(திரும்பியுள்ளது)*
15. எக்கருமத்தையும் நிதானமாய்த் திட்டமிட்டுச் செய்யவேண்டும். அதை விடுத்து எல்லாம் கெட்டபின் இதைச் செய்வதனால் எந்தப் பயனும் இல்லை *(குழம்பியுள்ளது)*

### மேலிருந்து கீழ்

01. ஆயுதம் தூக்காது இம்முறையையும் கையாண்டு உரிமைக்காகப் போராடித் தோற்ற வரலாறும் எமக்குண்டு.
02. இது மேலோங்கினால் ஆணவம் என்று சொல்லப்படுகிறது.
03. இதைப் பெறவே மனிதன் நாளாந்தம் போராடிக்கொண்டிருக்கிறான் *(குழம்பியுள்ளது)*
05. குழந்தைகளின் வளமான எதிர்காலத்துக்காகப் பெற்றோர் இதனைச் சேமிப்பார்கள் *(குழம்பியுள்ளது)*
07. இதை மிளகு நீர் என்று தமிழ் நாட்டில் சொல்வர் *(குழம்பியுள்ளது) (மூன்று எழுத்துக்கள்)*
08. இதுவும் ஆக்கமும் உள்ளதே வாழ்க்கை *(குழம்பியுள்ளது -மூன்று எழுத்துக்கள்)*
10. உலகத்தை இப்படியும் அழைப்பர் *(குழம்பியுள்ளது)*
12. முற்றத்தில் போடப்பட்டிருக்கும் இதனைத் திறந்துதான் உள்ளே போகவேண்டும் *(குழம்பியுள்ளது)*
13. கணவனுக்கு இன்னொரு பெயர்.

### போட்டி விபரங்கள்

- *08.08.04 திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறுபவையே போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.*
- *சரியான விடையெழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில் வழங்கப்படுவதுடன், சரியான விடை எழுதியவர்களின் பெயர் விபரமும் வெளியிடப்படும்.*

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி
``குறுக்கெழுத்துப் போட்டி``
**POOBALAM - 22, Rue Perdonnet, 75010 Paris, France.**

பெயர்:..........................................................

முகவரி:........................................................

**இலக்கம் 3 இற்குச் சரியான விடையெழுதிய வாசகர்கள்**
K. கீதா-பிரான்ஸ், அநபாயன் பவானந்தம்-பிரான்ஸ், அமலதாஸ்-பிரான்ஸ்

இல: 03

**விடை**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | லா | ப் | 2 ப | ழ | 3 ம் | ■ | 4 தி |
| 5 க | னி | ■ | 6 ம் | ய | ப | ■ | ரி |
| வ | ■ | 7 னி | ப | ■ | ம் | 8 அ | ■ |
| த் | ■ | 9 சு | ர | ங் | க | ம் | ■ |
| 10 கீ | ரை | ■ | ம் | ■ | ■ | ப | 11 பு |
| 12 தை | ல | 13 ம் | ■ | 14 வெ | ல் | ல | ம் |
| ■ | ■ | ள | ■ | ட் | ■ | ம் | ல |
| ■ | 15 லா | தா | ட் | டு | ■ | ■ | சி |

முரசு குறுக்கெழுத்துப் போட்டி இல.3 இல் சரியான விடையெழுதி பரிசு பெறும் வாசகர்

விஜயேந்திரன் இளங்கோ
94261 Fresnes,
France.

தயாரிப்பு:
கந்தையா நவரேந்திரன்

# பாவலருக்கு மேலும் பெருமை சேர்த்த பவளமல்லி

— சிவலிங்கம் சிவபாலன்

'கல்விகொடுத்தார் கடவுளாகின்றார்' என்ற தத்துவத்துக்குப் பொருளுரைத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் பாவலர் உயர் திரு. அ. தெ. துரையப்பா பிள்ளை அவர்கள்.

பாவலர் அவர்கள் மறைந்தும் வாழ்ந்துகொண்டிருப்பதை உணர்த்தும் வகையில், அவரால் ஸ்தாபிக்கப்பட்ட மகாஜனாக் கல்லூரியின் பழையமாணவர் சங்கப் பிரெஞ்சுக் கிளையின் இடையறாத பணியின் பயனாய் மலர்ந்திருக்கிறது இந்த பவளமல்லி.

இம்மலரினூடே மீண்டுமொருமுறை பாவலர் அவர்களுக்கு மரியாதை செய்து தாமும் பெருமைப்பட்டுக் கொள்ளுகிறது மேற்படி பழைய மாணவர் சங்கம்.

மகாஜனாக் கல்லூரியின் ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களைப் பற்றித் தெரிந்தவையைக் காட்டிலும் தெரியாதவையே ஏராளம். அந்தக் குறையை இம்மலர் ஓரளவு நிவர்த்தி செய்கிறது. மீதியும் காலக்கிரமத்தில் வெளிக்கொணரப்படவேண்டும்.

பாவலர் அவர்களின் சிந்தனையிலுதித்த, தான் சாந்த சமுதாயத்தின் மீதான பரந்துபட்ட அக்கறையை, தான் சார்ந்த மதங்களையும் மேலான மொழியையும் நேசித்த அவருடைய பாங்குகளையும், அதற்காக அவர் எழுத்திலும் செயலிலும் தந்திருந்த வியக்கத்தகு தன்மைகள் யாவையும் அறிந்து தெரிந்திருந்தவர்கள் தந்திருந்த வரிகளினூடே தெரியவரும்போது, வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய பாவலர் அவர்கள் காலங்காலமாய் நினைவு கூரப்படவேண்டியவரே.

கல்வி என்பது ஒரு மாணவனை அல்லது ஒரு சமுதாயத்தை அல்லது இந்த உலகை வாழ்வின் உயர்ச்சிப் பாதையிலேற்றி அதை அடுத்த கட்டத்துக்குத் தயார்ப்படுத்துவது, அந்தவகையில் நம்முன்னோர்கள் எமக்காயாற்றிய பணிகளை, குறிப்பாகக் கல்வியின் மீதான தம் கரிசனைகளை, வானளாவ உயர்ந்துநிற்கும் கல்விக்கூடங்களாக நிரூபித்திருக்கிறார்கள். அவர்கள் விட்டுச்சென்ற பணியினை, மேலும் முன்னெடுத்துச் செல்லவென மேற்படிக் கல்லூரிகளின் பழைய மாணவர்களால் ஆங்காங்கு நிறுவப்பட்டுள்ள பழைய மாணவர் சங்கங்களின் செயல்பாடுகள், எதிர்காலச் செயற்திட்டங்கள் திருப்தி ஏற்படும் வகையில் முழுமை பெறவேண்டியதும் இன்றைய தேவையாகின்றது.

இவை, கடமைகளுக்கும் அப்பால், நல்லவோர் அறிவு ஆற்றல் மிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய உயரிய நோக்கமும் இவர்கள் மீது திணிக்கப்பட்டிருப்பதுகூட காலத்தின் வரலாற்றுத் தேவைதான்.

கல்லூரிகளின் ஆண்டு மலர்கள் என்கின்றபோது, ஒப்புக்காகச் சில ஆசியுரைக் கடிதங்களும், நிழற்படங்களும், ஒவ்வொரு பக்கத்திலும் வர்த்தக விளம்பர மொய்ப்புமாக மலர்கின்ற மலராக இல்லாமல், முற்று முழுதான ஒரு வரலாற்றுக் கலை இலக்கிய மலராக இந்த `பவளமல்லி' மலர்ந்திருப்பது வியப்பைத் தருகிறது.

பாடுபட்டு உயிர்ப்பித்தவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அதன் உள்ளடக்கங்களை மனமுவந்தளித்தவர்கள் யாவரும் பெருமைப் படத்தக்கவர்கள்.

இதேபோல், இன்னும் அநேக பவளமல்லிகள் மலரவேண்டும். அவை ஒவ்வொரு கிராமத்தையும், கிராமத்திற்கு முகவரி தந்தவர்களையும் முன்மொழிந்து மணங்கொடுக்கவேண்டும், பவளமல்லிகையை முகர்ந்து பார்க்கத் துடிப்பவரின் வசதிக்காக:

A.A.E.C.M-P
3, Square Jodlet, 93420 - Villepinte, France.

# இத்தாலியில் கரும்புலிகள் நினைவு நிகழ்வு



11.07.04 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இத்தாலியின் மேல்மாகாணத்தில் ஒன்றான பியெல்மொந்தே மாநிலத்தில் பியெல்லா பிரதேசத்தில் வெகு சிறப்பாகவும் உணர்வபூர்வமாகவும் நினைவு கூரப்பட்டது. அன்றைய நிகழ்வில் பொதுச்சுடரினை கரும்புலி கப்ரன் மில்லர் அவர்களின் திருவுருவப்படத்துக்கு, முன்னால் கிழக்கு மாகாணத்தில் இராணுவ சுற்றிவளைப்பின் போது சயனைட்டை உட்கொண்டு வீரச்சாவை தழுவிக்கொண்ட டெனிஸ் (சுபாகரன்) அவர்களின் சகோதரி ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியினை கப்டன் ரூபனின் சகோதரி அவர்கள் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து



அமைதி வணக்கமும் மண்டபத்தில் வைக்கப்பட்ட 243 கரும்புலிகளின் திருவுருவப்படத்திற்கு மலர்களாலும் சுடர்களாலும் மக்கள் வீரவணக்கம் செலுத்தினர். படங்கள் கிடைக்காத ஏனைய கரும்புலிகளுக்கு மலர் வைத்து நினைவு கூரப்பட்டது. மக்கள் வரிசைவரிசையாக தமது வீரவணக்கத்தை தெரிவிக்கும் பொழுது மண்டபத்தில் கரும்புலிகளின் தியாகம், ஈகம் பற்றிய பாடல்களும், உரைநடையும் செய்யப்பட்ட போது அங்கு வந்திருந்த மக்கள் எல்லோர் மத்தியிலும், ஓர் சொல்ல முடியாத உணர்வையும், உணர்ச்சியையும் தந்திருந்தது.

இதனை தொடர்ந்து பியெல்லா திலீபன் தமிழ் பாடசாலை மாணவமணிகளும், மாலதி கலைப்பள்ளி மாணவிகளும், கலை பண்பாட்டுக்கலைஞர்களும் அபிநயநடனங்கள், வில்லிசை, நாடகம், கரும்புலிகள் புரட்சிக்கானம் என்பனவற்றை வழங்கியிருந்தனர்.

இதில் சிறப்புரையை பணியகப் பொறுப்பாளர் து.மேத்தா அவர்கள், கரும்புலிகளை தேசியத்தலைவர் அவர்கள் உருவாக்க வேண்டியதன் காரணம், ஒவ்வொரு கரும்புலிகளின் உணர்வுகளும், நம்பிக்கையும், மன உறுதிபற்றியும், காலம் காலமாக அடிமைவாழ்வில் அடைபட்டுப் போயிருந்த எமது இனத்திற்குள் இப்படியொரு அற்புதமான சந்ததியை பெற்றிருப்பதும், இந்த உணர்வையும், உண்மையையும், தேவையையும் அவசியத்தையும் உணர்த்திய எங்கள் தேசியத் தலைவர்கள் அவர்கள் கிடைத்தது தமிழ் இனத்திற்கு இதுவரைகாலமும் கிடைக்காத ஒரு வாய்ப்பு என்றும் அதை உரியகாலத்தில் பயன்படுத்த வேண்டும் என்றும், இன்று இந்த கரும்புலிகள் என்ற சொற்பதத்துக்கும், செயற்பாட்டுக்கும் உலகின் வல்லரசுகள் என்று தம்மை சொல்லிக்கொள்ளுபவர்கள் பயத்தின் காரணமாக இதனை கொலைவெறியினாலும், விரக்தியின் நிலையில் செய்யும் தற்கொலையாளிகள் என்ற பதத்தை கொடுத்துள்ளனர், ஆனால் எமது இனத்தை பொறுத்தவரையில் இவர்கள் எமது காவல் தெய்வங்கள், எமது இனத்தால் நினைத்துப்பார்க்க முடியாத தியாகத்தை செய்த தற்கொடையாளர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.



மாலை 7.30 மணியளவில் தமிழீழ தேசியக்கொடியிறக்கலுடன் 'நம்புங்கள் தமிழீழ நாளை பிறக்கும்..' என்ற நம்பிக்கை வரிகைகளுடன் இவ் இனியவர்களின் நினைவு கூரல் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களின் 'இலங்கைத் தமிழ்த் தேசியவாதமும் அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வும்' என்கின்ற வரலாற்று நூல் பலரின் மிகுந்த கவனத்திற்குரியதாகியுள்ளது.

ஏற்கனவே ஆங்கிலத்தில் வெளிவந்திருந்த இந் நூல் தற்போது தமிழ் வடிவம் பெற்று இவ்வருட ஆரம்பத்தில் தாயகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுத் தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் அறிமுக விழா நடைபெற்று வருகிறது.

08.08.2004இல் பாரிசில் இந்நூலுக்கான அறிமுக விழா நடைபெறவிருக்கும் இவ்வேளையில் அந்நூல் குறித்தான ஆழமான மதிப்புரை ஒன்றை ஈழநாதம் இதழில் இருந்து மீள் பிரசுரம் செய்கிறோம். இந்த வரலாற்று நூலில் நீங்கள் இலகுவாக நுழைந்து கொள்ள இக்கட்டுரை உதவும் என நினைக்கின்றோம். *(ஆ–ர்)*

# இலங்கைத் தமிழர் தேசியம்

# அதன்தோற்றம் பற்றிய ஆய்வு

ஆக்கியோன்: முருகர் குணசிங்கம் வெளியீடு: எம். வீ பிரசுரம், சிட்னி மொழி ஆங்கிலம் (அவுஸ்திரேலியா)

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

யாழ்ப்பாண குடியேற்றம் சம்பந்தமான தீர்க்கமான ஆய்வொன்றை 1980 டிசெம்பர் முதல் வாரத்தில் கலாநிதி பொ. இரகுபதி தொடங்கினார். 2,500 வருடங்கள் பழமைவாய்ந்த இரு எலும்புக் கூடுகள், மத ஆசாரங்களுடன் அடக்கம் செய்யப்பட்ட நிலையில், ஆனைக்கோட்டை கோம்பயல்மணல் சுடலையை அண்டிய பகுதிகளில் அகழ்ந்து எடுக்கப்பட்டன. எலும்புக் கூடொன்றின் கைவிரல் எலும்பில் ஒரு இலச்சினை மோதிரமும் அதில் இருவரி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டும் காணப்பட்டன.

1987 இல் இந்திய இராணுவம் யாழ் பல்கலைக்கழகத்தைத் தாக்கியபோது பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை நூதனசாலையில் வைக்கப்பட்டிருந்த இரு எலும்புக் கூடுகளும் அழிந்து போயின. மோதிரம் எங்கே என்று தெரியவில்லை. ஆசிரியர் குணசிங்கம் தனது நூலின் மூன்றாம் அத்தியாயத்தில் வெளியிடும் தகவலின்படி, பேராசிரியர் இந்திரபாலா 1981இல் இந்து பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் மோதிரத்தின் எழுத்து `இந்து நதி பள்ளத்தாக்கின் பிராமி எழுத்தா' என்று வினாவியதாக அறிகிறோம்.

நூலின் நான்காம் அத்தியாயத்துடன் இலங்கைத் தமிழினத்தின் தற்கால வரலாறு ஆரம்பிக்கின்றது. எம்மை ஆட்சி செய்த மூன்றாவது ஐரோப்பிய இனமாகிய பிரிட்டிசார் எமது வாழ்விலும் அரசியல் அந்தஸ்திலும் பாரிய மாற்றங்களைக் கொண்டுவந்தனர். அவற்றின் எதிரொலி இன்றுவரை உணரப்படுகின்றது. பிரிட்டிசார் ஆட்சி தொடங்கிய 19 ஆம் நூற்றா-ண்டின் முற்பகுதியில் இருந்து அதே நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலான தமிழர் சமுதாய வரலாற்றை இந்த அத்தியாயம் சித்தரிக்கின்றது. குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயம் அடைந்த மாற்றங்களை இந்த அத்தியாயம் விவரிக்கின்றது.

1619 இல் யாழ்ப்பாண அரசையும் அதற்குச் சொந்தமான ஆள்புலத்தையும் போத்துக்கேயர் கைப்பற்றினர். அதே யாழ் அரசை போத்துக்கேயர்களிடம் இருந்து ஒல்லாந்தர்கள் 1658 இல் பறித்தனர். 1797 இல் பிரிட்டிசார் திருகோணமலை (ஓகஸ்ட்) மட்டக்களப்பு (செப்டெம்பர்) யாழ்ப்பாணம் (செப்டெம்பர்) என்பனவற்றை ஒல்லாந்தர்களிடமிருந்து கைப்பற்றினர்.

முதல் இரண்டு ஐரோப்பியர்களும் தமிழ் பிரதேசங்களை மிகுதி நாட்டுடன் இணைக்காது, தனித்து ஆட்சி செய்தனர். பிரிட்டிசார் இந்த நடைமுறையை மாற்றியமைத்தனர். போத்துக்கேயர்களாலும், ஒல்லாந்தர்களாலும் பிடிக்க முடியாதிருந்த கண்டி இராச்சியம் 1815 இல் பிரிட்டிசார் வசம் வீழ்ந்தது. இதன்பின் முழுத் தீவையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் திட்டத்தை பிரிட்டிசார் நடைமுறைப்படுத்தினர்.

இலங்கைத் தீவின் தற்கால வரலாற்றில் திருப்பு முனை நிகழ்ச்சியாக அமையும் கோல்புறூக்-கமெரன் ஆணையம் (COLEBROOKE-CAMERON COMMISSION) செய்த பரிந்துரைகள் காரணமாக முழு நாடும் நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசின் பிரதிநிதியாக ஆட்சிசெய்த ஆளுநருக்கு உதவும் சட்டசபை (LEGISLATIVE COUNCIL) 1833 இல் உருவாக்கப்பட்டது. இதில் ஆறு நியமன அங்கத்தவர்கள் இடம்பெற்றனர். 3 ஐரோப்பியர்கள், 1 சிங்களவர், 1 தமிழர், 1 பறங்கி இனத்தவர். இன அடிப்படையிலான இந்த நியமனம் தமிழர்களுக்கு மக்கள் தொகை, தரைப்பரப்பு (வாழ்விடம்) என்பனவுக்கு அதிகமான முக்கியத்துவம் அளித்தது.

கோல்புறூக் பரிந்துரைகளுக்குப் பின் வடக்கு கிழக்கு தமிழர்கள் பயிர்ச்செய்கை, வர்த்தகம் என்பனவற்றை கூடுதலாகச் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியில் தனியார்துறை முயற்சிகள் வளர்வதற்கு அரச அனுமதி கிடைக்கவில்லை. அரசு செய்யும் வர்த்தகம், விவசாயம் என்பனவற்றை கோல்புறூக் விரும்பவில்லை. இதனால் தனியார் துறை வளர்ச்சிக்கு பிரிட்டிஷ் ஆட்சியில் நல்ல வரவேற்பு இருந்தது.

வன்னி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்க காலத்தில் நெற் செய்கை வீழ்ச்சி கண்டதாக ஆசிரியர் குணசிங்கம் தனது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கின்றார். 75 வீதமான அரிசித் தேவையை மக்கள் கொள்வனவு செய்தார்கள் என்கிறார் ஆசிரியர். இறக்குமதி செய்யும் அரிசி சொந்தமாகச் செய்த அரிசியிலும் பார்க்க விலை மலிவு என்பதே காரணம் என்று அவர் விளக்கம் தருகிறார்.

பணப்பயிரின் கையோங்கியது. ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் அந்த அரசு நடத்திய புகையிலைச் செய்கை இப்போது மக்கள் வசமாகியது. 1851 இல் 10,000 ஏக்கர் நிலத்தில் புகையிலை பயிரிடப்பட்டதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. இதில் பெரும்பங்கு இந்தியாவுக்கு ஏற்றமதி செய்யப்பட்டது. விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உள்வடைந்தது.

மேலும் வெங்காயம், கச்சான், தேங்காய், மரக்கறி போன்றவையும் தமிழர் பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்டன.


1850 களில் 35,000 ஏக்கர் நிலத்தில் பனைமரம் யாழில் நிலைகொண்டிருந்ததாக இலங்கை வனவள இலாக்கா அறிக்கை (FOREST ADMINISTRATION OF CEYLON) தெரிவிக்கின்றது. வீடு கட்டுவதற்கும் வேறு தளபாடத் தேவைக்கும் யாழ்ப்பாண பனைமரம் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 600,000 துண்டுகள் வருடா வருடம் வெளிநாடுகளுக்கு ஏற்றமதி செய்யப்பட்டன. இதில் 297,973 துண்டுகள் (PIECES) இந்தியாவுக்குச் சென்றன. இவை மேற்கூறிய அறிக்கையில் இருந்து ஆசிரியர் திரட்டித்தரும் செய்திகளாகும். ஒல்லாந்தர் காலத்தில் அவர்கள் யாழ் தீபகற்பப் பனைகளை தமது நாட்டிற்கு எடுத்துச் சென்றனர்.

பனைக்கு பல்மைரா (PALMYRAH) என்று பெயரிட்டவர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட போத்துக்கேயராவர். அதனுடைய பயன்பாட்டை மெச்சி அவர்கள் வைத்த முழுப் பெயர் (PALMYRAH BRAVO) 19 ஆம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் நிர்வாகி ஜேம்ஸ் எமர்சன் டெனன்ற் எழுதிய நூலில் பனை பற்றிய செய்தி காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல மைல் நீளமான பனங்காடுகள் இயற்கையாகச் செழித்தோங்குகின்றன. இப்பிராந்தியங்களின் தீவுகளிலும் பனங்காடுகள் காணப்பட்டதாக அவர் (JAMES EMERSON TENNENT) தெரிவிக்கின்றார்.

இக் காலகட்டத்தில் ஆரம்பித்த பணப்புழக்கம் வடக்கு, கிழக்கு மக்களுக்கு, குறிப்பாக யாழ் தீபகற்பகத்தவர்களுக்கு கல்வி நாட்டம், அரச சேவையில் இடம், தமது பண்பாடுகள் பற்றிய மீளாய்வு, அரசியல் எதிர்காலம் பற்றிய சிந்தனை என்பனவற்றிற்கு வழிவிட்டதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

கடலின் கண் முத்து அல்லது யான் கண்ட இலங்கை (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை) என்ற தமிழ் நூலின் ஆசிரியர் சி.எம்.இராமசந்திர செட்டியார் பருத்தித்துறை ஊரில் வாணிபம் மிகுதி என்கிறார். அந்தக் காலத்தில் காற்றுக் கப்பல்கள் இங்கிருந்து தஞ்சை ஜில்லாவின் கோடிக்கரை தொடக்கம் பர்மாவின் அரக்கன் துறைமுகம் வரை செல்வது வழமை என்று குறிப்பிடுகிறார். யாழ்ப்பாண-த்து சரக்குகள் இவ்வாறு ஏற்றுமதியாகின்றன என்கிறார் செட்டியார். ஊர்காவற்துறையும் இதே வகையில் பயன்பட்டது.

இக்காலப் பகுதியில் தரவுகளைத் திரட்டுவதற்கு உதய தாரகை என்ற பத்திரிகையின் பழைய பிரதிகள் ஆசிரியர் குணசிங்கத்திற்கு உதவின. அமெரிக்க கிறிஸ்தவ மிசன் (AMERICAN CHRISTIAN MISSION) இப்பத்திரிகையை 1841 இல் அச்சிடத் தொடங்கியது. முதல்பிரதி 7 ஜனவரி 1841இல் வெளிவந்தது, இன்றுவரை தொடர்கின்றது. இதுவே தமிழில் வெளிவந்த முதலாவது பத்திரிகை. உண்மையில் இது இரு மொழிப் பத்திரிகை. ஆங்கிலம், தமிழ் பகுதிகளை ஒரே பத்திரிகையில் உள்ளடக்கியது. ஆங்கிலப் பகுதியின் பெயர் மோனிங் ஸ்ரார் (MORNING STAR). 1834 பெப்பிரவரி 4ம் நாள் ஆரம்பிக்கப்பட்ட ஒப்சேவர் (OBSERVER) பத்திரிகை 2000 ஏப்பிறில் 28ம் நாள் நிறுத்தப்பட்ட பின் இலங்கையின் மிகப் பழமை வாய்ந்த பத்திரிகை என்ற சிறப்பு இன்று உதய தாரகைக்கு உண்டு. 1850 ஜுன் 13ம் நாள் உதயதாரகை இதழில் பின்வரும் வாசகர் கடிதம் காணப்படுவதாக ஆசிரியர் குணசிங்கம் குறிப்பிடுகிறார். (பக்கம் 80) இத்தீவு பிரிட்டிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின் பல பெரிய மாற்றங்களும் திருத்தங்களும் இந்த மாகாணத்தில் நடைபெறுகின்றன. தெருக்களும், பாலங்களும் கட்டப்படுவதால் வர்த்தகம் பெருகுகின்றது. மக்கள் நலனில் அரசு எடுக்கும் அக்கறைக்கு உதாரணமாக இது விளங்குகின்றது.




1847 ஜனவரி உதயதாரகை இதழ் செய்திப்படி சிறு ஒழுங்கைகள் திறக்கப்படுவதால் மாட்டுவண்டில்களும் பாதசாரிகளும் இலகுவாகப் பயணிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. படிப்படியாக தெருக்கள் மூலம் வன்னியும் கிழக்குத் தமிழ் பிரதேசங்களும் யாழ் தீபகற்பத்துடன் தொடுக்கப்பட்டன. இத்தொடர்புகள் தமிழ் தாயகப் பிணைப்புக்கு அடித்தளம் அமைத்ததாக ஆசிரியர் குணசிங்கம் சுட்டிக்காட்டுகிறார்.

**ஆனைக்கோட்டை கோம்பயல்மணல் சுடலையை அண்டிய பகுதிகளில் அகழ்ந்து எடுக்கப்பட்டன. எலும்புக் கூடொன்றின் கைவிரல் எலும்பில் ஒரு இலச்சினை மோதிரமும் அதில் இருவரி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டும் காணப்பட்டன.**

1842 இல் யாழ் தீபகற்பத்தின் மக்கள் தொகைக் கணிப்பீட்டை அமெரிக்கன் கிறிஸ்தவ மிசன் நடத்தி வரைபடத்துடன் விரிவான அறிக்கையை சமர்ப்பித்தது. கிராமம் கிராமமாக மக்கள் தொகைக் கணிப்பீடு நடத்தப்பட்டது. வரைபடமும் கிராம மக்கள் தொகை கணிப்பீடும் இந்த நூலின் 84, 85 ஆம் பக்கங்களில் காணப்படுகின்றன. வரைபடத்தில் அப்போதிருந்த தெருக்களும் வரையப்பட்டுள்ளன. அறிக்கை தெரிவிக்கும் தகவல் 1814 இல் யாழ் மக்கள் தொகை 103,377, 1842 இல் 219, 540 அதாவது 28 வருடங்களில் 116, 163 ஆல் மக்கள் தொகை உயர்ந்துள்ளது.

சமுதாய, பொருளாதார, வேலைவாய்ப்புத் துறைகளில் பாரிய தாக்கங்களை இந்த எண்ணிக்கை உயர்வு ஏற்படுத்தியதாக ஆசிரியர் எமக்கு அறியத் தருகிறார். இடநெருக்கடி காரணமாக யாழ் மக்கள் வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கும், வட மேற்கு மன்னார் தொடக்கம் புத்தளம், சிலாபம் போன்ற இடங்களுக்கும் இடம்பெயர்ந்தனர். தென் பகுதிகளுக்கும் செல்லத் தொடங்கினர். இதன் பெறுபேறுகளில் ஒன்றாக தமிழ்-சிங்கள மக்கள் நெருங்கி உறவாடும் வாய்ப்பு ஏற்பட்டது. மிசன் அறிக்கை வெளிவந்த காலத்தில் வடக்கு-தெற்கு இணைப்புக்களான புகையிரதம், பெருந்தெரு என்பன் உருவாகவில்லை. பயணங்கள் கடல் மார்க்கமாக நடைபெற்றன.

மூன்று ஐரோப்பியர்களும் யாழ் தீபகற்பத்தையும் தமிழர் பிரதேசங்களையும் ஒருவர்பின் ஒருவராக ஆட்சி செய்த காரணத்தால் ஏற்பட்ட மிகப் பெரிய தாக்கம் மிகக் கூடுதலாகச் சைவ மதத்திலும் சற்றுக் குறைந்தளவில் மொழித்துறையிலும் ஏற்பட்டது. மத விவகாரத்தை மிக விரிவாக ஆசிரியர் ஆராய்ந்துள்ளார். அதற்கு முக்கிய காரணம் உண்டு. ஆசியக் கண்டத்தில் தோன்றிய தேசியம் சுதேச பண்பாட்டு

*(தொடர்ச்சி 28ம் பக்கம்)*

## நூல் அறிமுக விழா

கலாநிதி முருகர் குணசிங்கம் எழுதிய

**இலங்கை தமிழ் தேசியவாதமும் அதன் ஆரம்பதோற்றம் பற்றியதோர் ஆய்வும்**

**காலம்:-** 08.08.2004 ஞாயிற்றுக்கிழமை

**நேரம் :-** பி.ப. 3.30 மணி

**இடம்:-** பாரிஸ் முத்துமாரியம்மன் ஆலயம்
**22, Rue de Département,**
**75018 Paris.**
**M°: La Chapelle**

# புதிய நம்பிக்கையோடு 'சலனம்'

கலையில் கற்பனை கவிந்து நிற்க, அந்தக் கற்பனையை அடிப்படையாகக்கொண்டு அறிவு, ஊக்கம், செயல்திறம் ஆகியவை ஒருமுகப்படும்போது சமுதாயத்தினது எண்ணங்கள், அழகுணர்வுடன், கலை துல்லியம் பெற்றுத் திரையில் எதிரொலிக்கின்றன.

திரைப்படம் ஒரு கலை வடிவம். கலை வடிவங்கள் மாறுந்தன்மை கொண்டவை. நெகிழ்ச்சியுடையவை. உயிர்ப்புடையவை. துடிப்பதிர்வுடையவை. மூவளவையும் காட்சிப்படுத்தும் சினிமாப்படம் என்கின்ற நுட்பமான கலை வடிவத்தைச் சரியாகக் கையாளாவிட்டால் அது உயிரற்றதாக மாறிவிடும். இந்த உயிர்ப்பான கலைவடிவம் உள்ளியல்பா னது. உள்ளார்ந்த பண்புகளை வெளிக்கொணரும் இயல்பினைக் கொண்டது. உள்ளுக்குள்ளிருந்தே வளர்ச்சி பெறும் தன்மையைக் கொண்டது. ஆனால் இன்று வெளிவரும் தென்னிந்தியத் திரைப்படங்களைப் பார்க்கும்போது, அதன் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் பலர், தங்களால் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட ஒருவகை முறைமைக்குள் சிக்குண்டு தங்கள் பண ஆற்றல்களையும் வளங்களையும் வெறும் வர்த்தக நோக்கோடு முதலீடு செய்து தொழில் புரிவதைக் காணலாம். இன்னும் ஒரு பிரிவினர், தங்கள் திரைப்படங்கள் மூலம் தாங்கள் முனைப்பாகச் சொல்லவிழையும் செய்தியைக் கலை நயத்துடன் துல்லியமாக வெளிப்படுத்துவதில் சில குறை நிறைவுகளுடன் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார்கள் எனலாம். ஆனால் அவர்களுடைய வெற்றிகூட பெரும்பாலும் அவர்களை மீளமுடியாத பொருளாதார நட்டத்திற்கே இட்டுச்சென்றுள்ளது.



சில திரைப்படங்கள் தேவைக்கதிகமான முறையில் கலை நயநுணுக்க அறிவை வெளிக்காட்ட முனைவனவாக இருக்கின்றனவே தவிர, கலை வடிவ வகையில் அதன் நுட்ப வேறுபாடுகளுடனும், கருத்து வகையில் நய நுட்பவேற்றுமைகளுடனும், உணர்ச்சி வகையில் நுணுக்கத் திரிபு நயங்களுடனும் வெளிவராமை திரைப்படக்கலையின் தோல்வியையே சுட்டிக்காட்டுகின்றன.

கலையில் கற்பனை கவிந்து நிற்க, அந்தக் கற்பனையை அடிப்படையாகக்கொண்டு அறிவு, ஊக்கம், செயல்திறம் ஆகியவை ஒருமுகப்படும்போது சமுதாயத்தினது எண்ணங்கள், அழகுணர்வுடன், கலை துல்லியம் பெற்றுத் திரையில் எதிரொலிக்கின்றன.

குறும்பட விழா



க.நவரேந்திரன்

வியாபார நோக்கங்கொண்ட திரைப்பட விநியோகஸ்தர்கள் நிர்ணயிக்கும் இரசனை எல்லைக்குள் தான் தென்னிந்தியச் சினிமாப் படங்கள் வலம் வருகின்றன. இதனால் தமிழ்ச்சினிமா, மக்களை அநாகரிகமான பண்பாட்டு, கலாச்சாரச் சீர்கேட்டிற்கே இட்டுச் செல்கிறது. வன்முறையையும் சதைக் கவர்ச்சியையும் பிறழ்வான வாழ்க்கைப் பெறுமானங்களையே அது போதிக்கிறது. மக்களது பணத்தையும், அதற்கும் மேலாக அவர்களது பொன்னான நேரத்தையும் சிந்தனையையும் வீணாக்குவது தமிழ்ச்சினிமாவே.

சிந்தனைக்குத் தடையாய் இருப்பது மொழி. மொழி மனித வாழ்வுக்கு பேருதவியாக இருக்கின்ற போதிலும், மனிதனால் தன் உள்ளக்கிடக்கிலுள்ள துல்லிய உள்ளுணர்வுகளை எல்லாம் முற்றுமுழுதாக வெளியிட முடியாது. மொழியால் வெளியிட முடியாததை முகபாவங்களாலும், சைகைகளாலும், உடல் அசைவுகளாலும் கணிசமான அளவுக்கு ஈடுசெய்து உயிர்ப்புக் கொடுக்க முடியும். இந்த மௌன மொழிக்கு உள்ள சக்தியும், வலுவும், உயிரோட்டமும், பேசப்படும் மொழிக்குக் கிடையாது. சொல்லுக்குள் அகப்படாத உணர்வுகளை வெளிக்காட்ட இம்மௌன மொழியே தேவை. பேரிரைச்சல்தான் தமிழ்ச் சினிமாவின் தனி அடையாள முத்திரை. மௌன மொழியிலிருக்கும் உயிர்ப்பும், துடிப்பும், அமைதியும், சுகந்தமும், செறிவும், செழிப்பும், அழகும் தமிழ் சினிமா பார்ப்பவர்களுக்குத் தெரியாதவை - அந்நியமானவை.

இனியாவது தமிழ் மக்கள் தங்களது பார்வையைச் சீர்செய்ய வேண்டும்.

குறும்பட மாலை - கோடை 2004 என்ற நிகழ்வு, வில்தானூஸ் என்னும் இடத்தில் 17.07.04 சனி மாலை நடைபெற்றது. இந் நிகழ்வில் பல இரசிகர்கள் பங்குகொண்டமை ஊக்கமளிக்கும் விடயமாகும். 'சலனம்' என்ற பாரிஸ் தமிழர் சினிமாக்கலை இரசனை மன்றத்தின் முயற்சி ஒரு வரவேற்கத் தக்க பயன்தரு முயற்சியாகும். அவர்கள் ஆற்றும் இக்கலைச் சேவை, அறியாமையென்னும் துயிலில் மூழ்கியிருந்தும் மக்களைத் தட்டி எழுப்ப முயற்சிக்கிறது. அதற்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை. அது கிட்டினால் ஒரு சிலரேனும் சரியான சினிமாக்கலையை வேண்டாதனவற்றை நீக்கி, சரியாக இரசிக்கக் கற்றுக்கொள்வர். இப்புரிதல் அவர்களது உளப்பரிணாம வளர்ச்சிக்கு வழிகோலும். இதைத்தான் கிராமம் கிராமமாகச் சென்று சாதிக்க விழைகிறது 'சலனம்'.

'தாகம்' என்ற குறும்படம் நல்ல படைப்பு. இறுக்கமான மௌன மொழியாலும் இயல்பான நடிப்பாலும் படம் தனது இலக்கைச் சுலபமாக எட்டிவிடுகிறது. இந்த 15 நிமிடக் குறும்படம் சாதித்ததைத் தென்னிந்தியச் சினிமாக்காரர் தங்களது 17 ஆயிரம் அடி படச் சுருளாலும் கூடச் சாதித்திருக்கமாட்டார்கள். படத்தைப் பார்த்தபின் கணிசமான கரிமல வாயு எங்களுக்குள்ளிருந்து வெளியேறிவிட்ட மன ஆறுதல் எமக்கேற்படுகிறது.

'கனவுகள்' - நல்ல செய்தியைச் சொல்லும் கதை. தாயகத்திலிருந்து ஜேர்மனிக்கு இனிய எதிர்காலக்கனவுகளை மனத்தில் சுமந்துகொண்டு வந்த இளம் பெண்ணுக்குக் காத்திருந்த அதிர்ச்சி தரும் ஏமாற்றங்களை 27 நிமிடங்களில் தத்ரூபமாகக்கொண்டு வரும் முயற்சி வெற்றி கண்டுள்ளது என்றாலும், கதாநாயகியின் முகபாவங்களிலும் நடிப்பிலும். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்கும் அப்பாற்பட்ட ஒருவிதப் பதட்டம் தென்படுகிறது. கதாபாத்திரங்களுக்கிடையே நிகழும் உரையாடல்களிலும் எதிர்வினைகளிலும் காணப்படும் மௌனங்களுக்கிடையே இருக்கும் இடைவெளியின் விரிவு, கருவின் உயிர்ப்பை கொஞ்சம் மாசுபடுத்துகிறது.

'அழியாத கவிதை' என்ற 21 நிமிட குறும்படத்தில், தாய்நாட்டிலிருந்து பிரித்தானியாவில் தனது புகலிட மறுவாழ்வைத் தொடர முடியாத அளவிற்கு உளவியற் தாக்கங்களுக்கு உள்ளாகும் முதியவரது கதை வடிவாகச் சொல்லப்பட்டுள்ளது. மூத்த கலைஞர் இரகுநாதனுடைய பண்பட்ட நடிப்பால் படம் சிறப்புப்பெறுகிறது.

மற்றக்குறும்படங்களும் தாங்கள் சொல்ல வந்த செய்திகளைச் செவ்வனே சொல்லுகின்றன.

அனைத்துப் படங்களிலும் பின்னணி இசையின் இரைச்சல் அதிகமாக இருக்கிறது. ஒலி திருத்தியமைக்கப்படாத குறை பெரிதாகத் தென்படுகிறது. அச்சந்தரும் பேரிரைச்சல்களைத் தவிர்க்க வேண்டும்.

மொத்தத்தில் எம்மவரால் தயாரிக்கப்பட்ட இந்த ஆறு குறும்படங்களும் பலவகைகளில் தென் இந்தியத்திரைப்படங்களை விட மேம்பட்டிருக்கின்றன. எனவே அம்முயற்சிகளுக்குக் கட்டாயமாக ஊக்கமளிக்கவேண்டியது எமது கடமை. போலியான பெறுமானங்களை எம்மக்களது மனங்களில் விதைக்கும் தென்னிந்திய திரைப்படங்களைப் பார்த்துப் பார்த்து உண்மையான தரமான கலையை இரசிக்க முடியாத - தெரியாதவர்கள், அதற்கான யதார்த்தமான முதலடிகளை எடுத்து வைக்கவேண்டுமென்ற நன்னோக்குடன் 'சலனம்' -பரீஸ் தமிழர் சினிமாக்கலை இரசனை மன்றம் மேற்கொண்டுள்ள அரும் பணி மிகவும் போற்றத்தக்கது. இவர்கள் பணியை நாமனைவரும் வரவேற்க வேண்டும்.

குறும் படங்கள் காட்டப்பட்ட பின்னர் மூத்த கலைஞர் இரகுநாதன் அவர்கள் பொன்னாடை போர்த்தப்பட்டுப் பாராட்டப்பட்டார்.



அதைத் தொடர்ந்து ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இதில், பெண்கள் உட்படப் பலர் உற்சாகத்துடன் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளியிட்டனர். இது அவர்களது சிந்தனையில் ஏற்பட்ட நெகிழ்ச்சியைக் காட்டியது. தமிழ் மக்களது வாழ்க்கை முறையிலும் அவர்களது சிந்தனை ஓட்டத்திலும் உடனடி மாற்றங்கள் தேவைப்படுகின்ற இக்கால கட்டத்தில் இத்தகைய முயற்சியை மேற்கொண்டுள்ள 'சலனம்' குழுவினரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

பிரெஞ்சு சந்தாதாரர்களுக்கானது
75euro
52euro*
தனிஇதழ் 1euro50 1euro
30% 30% 30%
ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY
ஜூலை 27 முதல் ஓகஸ்ட் 31 வரை
சந்தாதாரர்களுக்கு 30% விசேட கழிவு!
சந்தாவை புதுப்பிப்பவர்களுக்கும்
புதிய சந்தாதாரர்களாக இணைபவர்களுக்கும்
இவ்வாய்ப்பு வழங்கப்படுகிறது!
இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்துபவர்களுக்கு நல்வாய்ப்புப் பரிசுகள்!!
இத்திட்டத்தின் கீழ் இணைந்த வாசகர்களின் சந்தா எண்கள் செப்டெம்பர் 2004 முதல் வாரத்தில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு, 5 நல்வாய்ப்பாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்!!!
சந்தாதாரராயின் சந்தா இலக்கம் F ....
பெயர் ....
முகவரி ....
தொலைபேசி இல ....
தொலைநகல் இல ....
கைத்தொலைபேசி ....
Email ....
(காசோலைகள்/காசுக்கட்டளைகளை Poobalam S.A.R.L. என்ற பெயரில் அனுப்பி வைக்கவும்)
Poobalam S.A.R.L. 22 Rue Perdonnet, 75010 Paris.
www.poobalam.com email- poobalam@free.fr
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16 RCS Paris B 452 164 817 (2004B03079)
* இத்திட்டம் ஓராண்டுச் சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டுமானது

சுஜி ஜுவல்லரி
SUJI JEWELLERY
சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004
தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜி ஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்க நகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.
Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02

## இலங்கை...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சிறீலங்காவுக்கு இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஏன் தேவைப்படுகின்றது? அது ஒரு தீவு. அங்கு இந்தியாவுக்கு வெளிப்படையான எதிரிகள் யாரும் இல்லை. அப்படி இருக்கையில் அவர்களுக்கு ஏன் பாதுகாப்பு உடன்படிக்கை தேவைப்படுகிறது.

தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்கு இந்திய இராணுவத்தைப் பயன்படுத்துவதே அவர்களின் நோக்கம்.

சிறீலங்கா ஜனாதிபதி, பிரதமர், வெளி விவகார அமைச்சர் அடங்கலாகப் பலரும் புதுடில்லிக்கு விஜயம் செய்து பாதுகா-ப்பு உடன்படிக்கையில் கையொப்பம் இடவேண்டும் என இந்தியாவை நச்சரித்து வருகின்றனர். புதுடில்லியைக் கவர்ச்சிகரமான பொறி ஒன்றுக்குள் சிக்க வைப்பதை அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். மீண்டும் ஒரு தடவை அந்தப் பொறிக்கு இந்தியா சிக்கிக் கொண்டால் மீண்டும் ஒரு தடவை ஏமாற்றப்படும்' என்றார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன், தலைவர் பிரபாகரனாலேயே உலகத் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்று சொன்னார்.

சிங்கள அரசுகள் இன்று புலிகளின் காலடியில் மண்டியிடுகின்றன என்றால் அதற்கு அவர்களது பலமே காரணம் என்றும் தெரிவித்தார்.

ம.தி.மு.க. தலைவர் வைகோ உட்பட பல தமிழ்ப் பிரமுகர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்ற தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் சென்னை விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## புதிதாகத்...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய சந்திப்பில் நோர்வேத் தரப்புப் பிரதிநிதிகளுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவாக்கியதோடு இடைக்கால நிர்வாக சபை பற்றிய பேச்சுக்களில் ஈடுபட்டு முடிவுகளை எடுப்பது, அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டதோடு, இவற்றை விரைவாக முன்னெடுப்பது தொடர்பாக வலியுறுத்தியதாகத் தெரிவித்த தமிழ்ச்செல்வன் அவர்கள், நோர்வேத் தரப்பினர் சிறீலங்கா அரசிடம் இருந்து எந்த ஒரு பதிலையும் கொண்டுவரவில்லை என்றார்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோது தெரிவித்த கருத்துக்களையே மீளவும் இன்றைய சந்திப்பில் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்த அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாகத் தோன்றியுள்ள ஆயுதக் குழுக்கள் தான் போர் நிறுத்த உடன்படிக்கையைக் கேள்விக் குறியாக்கியுள்ளன என்பதை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும், நோர்வே வெளிவிவகார அமைச்சரிடமும் தெளிவாக்கியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக இன்று முற்பகல் 10.45 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோரும், நோர்வேத் தரப்பில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்

## இலங்கைத்...

(26ம் பக்கத் தொடர்ச்சி)

மீட்பாகவே தோன்றியது. இந்திய சுதந்திரப் போர் பிரம்மோ சமாஜ், ஆரிய சமாஜ் போன்ற மத கலாசார இயக்கங்களின் பிறப்புடன் தொடங்கியது. ஈழத் தமிழர் தேசியமும் கிறிஸ்தவ மதப் பரவலுக்கு எதிரான இயக்கமாகவே ஊற்றெடுத்தது.

தனது நூலில் 89 தொடங்கி 109 வரையிலான பக்கங்களையும் மதம் பற்றிய ஆய்வுக்கு ஒதுக்கி மிக `நுண்மாண் புலமையுடன்' கிடைத்தற்கரிய பல தகவல்களைத் திரட்டித் தந்ததற்காக ஆசிரியரைப் பாராட்டவேண்டும். யாழ்ப்பாண ஆட்சியில் போத்துக்கேயர்கள் தங்களுடைய காலனித்துவக் கொள்கையை நடைமுறைப்படுத்தினர். `நாம் தேடுவது கிறிஸ்தவர்களையும், வர்த்தகத்தையும்' (WE SEEK CHRISTIANS AND TRADE) என்பது அவர்கள் ஆட்சிமுறை.

யாழ்ப்பாண ஆட்சியாளன் டி ஒலிவீரா (DE OLIVERA) தனது ஆட்சிக் காலத்தில் (1619-27) 500 சிவாலயங்களை இடித்துத் தள்ளியதாக மேலிடத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தான். ஆனால் போத்துக்கேயர் பரப்பிய கத்தோலிக்க மதம் பிற்கால ஐரோப்பிய ஆட்சியாளரின் எதிர்ப்பையும் மீறி எம்மக்கள் வாழ்வில் நிலையான இடத்தைப் பிடித்திருக்கிறது. ஒல்லாந்தர்கள் தீவிர மதமாற்றக் கொள்கையை கடைப்பிடிக்காவிட்டாலும் தமக்கே உரித்தான புரொட்டஸ்தாந்து ரகக் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் அக்கறை காட்டினர். ஆனால் கத்தோலிக்க மதத்திற்கு எதிரான கடும்போக்கை கடைப்பிடித்தனர். பிரிட்டிசார் வருகையோடு கத்தோலிக்க மதத்தினருக்கு எதிரான நடவடிக்கைகள் யாவும் முடிவுக்கு வந்தன.



## எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...

(20ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்வான இலட்சிய நெருப்பைச்
சுமந்து குளிர்ந்த தண்மதி
தன் விறல் வேங்கைத் தோழிகளுடன்
வீர சொர்க்கத்தில்
தண்மதியாய் நடந்தவள் - இன்று
விண்ணிலுள்ள தண்மதியுடன் , விண்மீன்கள்
புடை சூழ காத்திருக்கிறாள்.
வீட்டில் சிவாஜினியாய் செல்லமொழி பொழிந்தவள்
நாட்டின் நலிவு கண்டு தண்மதியாய் எழுந்தவள்
ஏட்டில் எழுதா வீணை இணையில்லா தலையவன் காட்ட
வேட்டாலே சொல்லி விட்டாள் வெற்றி புலிகளுக்கென்று
நாட்டினாள் வீரம் தன்னை
நம்மிடை மிளிரும் பிள்ளை
நாட்டுவோம் இவள் வீரத்தை...
வீரசொர்க்கத்தில் வாழும் வீரப் பிள்ளைகாள்...
கேட்டிடுங்கள்
விடுதலை தூரமில்லை..
விலை உங்கள் உயிர் அல்லவா..
தலை கொடுத்தேனும் தமிழர் தன்மானம் நாட்டி நிற்போம்....
உயிர் விலை கொடுத்த பிள்ளையாய் உறங்கம்மா உறங்கு
விடியும்.

**- உ.கேமா (தனியன்டு)**

# துயர் பகிர்தல்

குருவடி சரணம் திருவடி சரணம்



**திருமதி விஜயலட்சுமி தங்கராஜா**

**தோற்றம்: 22.07.1947**

**மறைவு: 23.07.2004**

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், லண்டன் Wallingtonஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி விஜயலட்சுமி தங்கராஜா அவர்கள் கடந்த 23.07.2004 அன்று இறைவனடி எய்தினார்.

இவர் செல்லத்துரை தங்கராஜாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான மாணிக்கவாசகர் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், தேவினி (கனடா), சாந்தினி (இங்கிலாந்து), சுரேஸ் (இங்கிலாந்து), ரமேஸ் (கனடா) ஆகியோரின் நேசமிகு தாயாரும், சிவசுப்பிரமணியம், சிவச்செல்வம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜிறோசாந்த், ஹரிசாந்த், மயூரி, நிலானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜெயலட்சுமி, இராஜலட்சுமி, சந்தானலட்சுமி, கலாலட்சுமி, திருக்கேதீஸ்வரன், கோணேஸ்வரன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற புனிதமலர், கமலாம்பிகை, செல்வமலர், கலைவாணி, சந்திரகாசன், மனுவேந்தன் ஆகியோரின் ஆசை மைத்துனியும் ஆவார்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்' - திருக்குறள் அதி.5-இல்லறவியல்

மேலதிகத் தொடர்புகளுக்கு: **0208 773 89 33**
**07811 200 510**

# சமாதானச் சூழல் இழுத்தடிக்கப்படுகிறது காத்திருக்கப் புலிகள் இயக்கம் தயாரில்லை

## விடுதலைப் புலிகள் பத்திரிகையின் தலைப்புச் செய்தியில் தெரிவிப்பு

சமாதானச் சூழல் இழுத்தடிக்கப்படுவதை உணர்ந்தும் முட்டாள்தனமாகக் காத்திருக்கப் புலிகள் இயக்கம் தயாரில்லை என்று புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை கூறியுள்ளது.

'கேள்விக்குறியாக உள்ளது சமாதானத்தின் எதிர்காலம்' என்ற தலைப்புச் செய்தியுடன் வெளியான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் (ஜூன்-ஜூலை மாதத்திற்குரிய 117ஆவது இதழ்) தலைப்புச் செய்தியில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக சந்திரிகா அம்மையாரின் குழப்பகரமான கருத்துக்களும் சிங்கள அரசின் ஸ்திரமின்மையும் ஒன்று சேர்ந்து சமாதானச் சூழலை கேள்விக்குறியாக்கி வருகின்றன.

சமாதானப் பேச்சை அர்த்தமுள்ளதாக்கத் தேவையான அரசியல் நடைமுறைகளை விடுதலைப் புலிகள் இயக்கம் தெளிவாக வரையறுத்து உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளது. கசப்பான கடந்தகால அனுபவங்களை கருத்தில் எடுத்து பேச்சுக்களை இடைநடுவில் குழம்பாவண்ணம் விவேகமான வகையில் அரசியல் நிகழ்ச்சி நிரலை விடுதலைப்புலிகள் வரைந்து அரசிடம் கையளித்திருந்தனர்.

ஆனால், சந்திரிகா அரசு இதுவரை விடுதலைப்புலிகளின் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்ளவும் இல்லை முற்றாக நிராகரிக்கவும் இல்லை. அதற்குப் பதிலாக நேரத்திற்கு ஒருகருத்தைக்கூறி காலத்தைக் கடத்தும் தந்திரத்தையே அது கடைப்பிடித்து வருகிறது.

1994ஆம் ஆண்டு அம்மையார் வெளியிட்ட தீர்வுப் பொதியின் அடிப்டையிலேயே பேச்சுநடத்தப்பட வேண்டும் என்று அவர் பொதுக் கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார். இத்துடன் பேச்சுக்களைமுன்னெடுக்க ஓர் ஆலோசனைச் சபை வேண்டுமென்று கூறி அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட சபை அமைக்கப்படும் என்றும் அம்மையார் கூறியுள்ளார்.

அம்மையாரின் முன்னைய தீர்வுப்பொதி தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு எப்போதோ செத்துப் போய்விட்டது. பத்து வருடங்களின் பின் மீண்டும் அதற்கு உயிர் கொடுக்க அம்மையார் முனைவது எந்தப் பயனையும் கொடுக்கமாட்டாது. ஏற்கனவே, இருக்கின்ற அமைப்பு முறையே சமாதானத்தை முன்நகர்த்த உதவாதபோது மேலும் ஒரு சபை என்ற கருத்து சலிப்பைத் தருவதாகவேயுள்ளது.

இதேவேளை, அம்மையாரின் ஆட்சிப் பங்காளிகளான ஜே.வி.பியினர் பேச்சு எப்படி நடத்தப்பட வேண்டும் என்றும் சிங்கள மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட வேண்டும் என்றும்கூறியுள்ளனர்.

இவையெல்லாம் தற்போதைய சமாதானச் சூழலுக்கு ஏற்புடைய விடயங்களல்ல.. பேச்சை நடத்தும் நிலையில் அரசு இல்லை என்ற உண்மையைத்தான் காட்டுகின்றன. ஒரு கூட்டத்தில் சமாதானம் பற்றி அம்மையார் ஒரு கருத்தைக் கூறுகிறார். பின்னர் அதை அவரேமறுக்கின்றார். அம்மையார் கூறியதற்கு முரணாக ஜே.வி.பி. இன்னொரு கருத்தைக் கூறுகிறது. அதை அம்மையாரும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று ஜே.வி.பி. கூறுகின்றது. தமிழ்த் தேசியகூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சபையைவிட்டு விரட்டியடிக்க வேண்டும் என்று பச்சை இனவாதத்தை, ஜே.வி.பி. தலைவரே கூறுகிறார்.

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக நச்சுப் பிரச்சாரத்தைச் சிங்களப் பேரினவாத சக்திகள் வேகப்படுத்தியுள்ளன. ஜே.வி.பி. இதில் முன்னணி வகிக்கின்றது. சிங்கள ஊடகங்களும் தமது பங்கிற்கு இனவாதப்பணி செய்கின்றன.

கிராமங்கள் தோறும் ஜே.வி.பி. இந்த நச்சுப் பிரச்சாரத்தைத் தீவிரமாகச் செய்து வருகின்றது. சமாதான முயற்சிகள் தொடர்பாக புலிகளின் நிலைப்பாடுகள் எதையும் ஏற்க மறுத்துள்ள ஜே.வி.பி., இப்போதே போர்ப்பிரசாரங்களை ஆரம்பித்துவிட்டது. சந்திரிகா அம்மையாரும் தமது கட்சியின் நிலைப்பாட்டை நிராகரிக்கவில்லை என்று ஜே.வி.பி. கூறிவருகின்றது.

இத்தகைய சமாதான விரோதக் கருத்துக்கள் தமிழ் மக்களை விரக்தியின் விளிம்புக்குக் கொண்டு செல்கின்றன. சமாதான வழியில் தமிழரின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட முடியாத ஒன்று எனத் தமிழ் மக்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.

சமாதானப் பேச்சைத் தட்டிக்கழிக்கும் அதேவேளை, சிங்கள அரசு தமிழ்த் தேசியத்தை சிதைக்கமுனையும் அரசியல் சதிகளிலும் ஈடுபட்டுவருகின்றது. தனது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரைப் பயன்படுத்தி கிழக்கில் கொலைகளிலும் குழப்பத்தை உண்டுபண்ணும் செயல்களிலும் ஈடுபடுகின்றது.



இத்தகைய சதி அரசியல் மூலம் புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தலாம் என்று சிங்கள அரசு நினைத்தால் அது பல வரலாற்றுப் பாடங்களை மறந்துவிட்டது என்பதுதான் அர்த்தமாகும்.

துரோகங்களும், சதிகளும் புலிகள் இயக்கத் தைப் பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக பலப்படுத்தியுள்ள பல வரலாற்றுச் சம்பவங்களை எமது போராட்ட வாழ்க்கையில் காணலாம்.

சமாதானத்திற்குச் சாதகமாகவும் சிங்கள அரசு செயற்படவில்லை. போர் நிறுத்தத்தையும் அது மதிக்கவில்லை. ஆனால், சமாதானச் சூழல் நிலவுகின்றது என உலகிற்கு காட்ட விரும்புகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சமாதானமும் இல்லை அபிவிருத்தியும் இல்லை மீள்குடியமர்வும் இல்லை. அகதி வாழ்வும் தொலைந்தபாடு இல்லை. நிகழ்கால நிம்மதியுமில்லை எதிர்கால நம்பிக்கையும் இல்லை என்ற விரக்தி நிலையிலேயே உள்ளனர்.

தமிழ் மக்களின் இந்த அரசியல் மனநிலைக்கு மதிப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் புலிகள் இயக்கத்திற்கு உண்டு. போர்மூலம் தோற்கடிக்க முடியாத தமிழரின் விடுதலைப் போராட்டத்தை சமாதானம் என்ற சதி அரசியல் மூலம் தோற்கடிக்க சிங்கள அரசு முயல்கின்றதோ! என்ற ஐயம்தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

காலம் கடந்தபடி உள்ளது. சமாதானத்திற்காகக் காத்திருக்க புலிகள் தயார். ஆனால், சிங்கள அரசு ஒரு சூழ்ச்சிகரமான நிகழ்ச்சி நிரலை வைத்துக்கொண்டு அதை நடைமுறைப் படுத்துவதற்காக சமாதானச் சூழலை இழுத்தடிப்பதை உணர்ந்துகொண்டும் முட்டாள்தனமாகக் காத்திருக்க புலிகள் இயக்கம் தயார் இல்லை. அதை தமிழ் மக்களும் அனுமதிக்க மாட்டார்கள்.

தமிழ் மக்களின் இந்த அரசியல் மனநிலையை சந்திரிகா அரசும் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ளவேண்டும் என்று அதில் உள்ளது.

## முல்லைக் கடற்பரப்பில் மீனவர் மீது சிறீலங்கா கடற்படையினர் தாக்குதல்!

முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் சிறீலங்காக் கடற்படையினரால் கடந்த வியாழக்கிழமை தாக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வண்ணாங்குளத்தில் இருந்து ஒரு படகில் தொழிலுக்குச் சென்ற கோ.பிரபாகரன், சுமன் ஆகியோர் நடுக்கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா கடற்படை டோறாவினால் மறிக்கப்பட்டனர்.

படகினை டோறாவிற்கு அண்மையாக வரச்செய்த படையினர், முதலில் பிரபாகரனை கடுமையாகத் தாக்கினர். பின்னர் சுமனைப் பிடித்து இழுத்த சிறீலங்கா கடற்படையினர் கடுமையாக தாக்கியுள்ளதால், அவர் முல்லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

## போலி அடையாள அட்டை வழங்கியவர்கள் கைது!

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலையடுத்து ஆட்பதிவுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளதாக சிறீலங்கா காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் மரணமான பெண்ணிடமிருந்து போலி அடையாள அட்டை கைப்பற்றப்பட்டதையடுத்து, ஆட்பதிவுத் திணைக்களத்தில் காவல்துறையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது நான்கு ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகளைக் கைது செய்த காவல்துறையினர் திணைக்களத்தின் தலைமையதிகாரியையும் விசாரணக்கு உட்படுத்தியிருந்தனர்.

இந்த விசாரணைகள் மூலம் மிக நீண்டகாலமாக போலி அடையாள அட்டைகளை வழங்கும் மோசடியில் ஆட்பதிவுத் திணைக்கள தலைமை அதிகாரி ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

நாள் ஒன்றுக்கு சுமார் 100 போலி அடையாள அட்டைகளை வழங்கும் இவர், ஒரு அடையாள அட்டைக்கு சுமார் 5,000 ரூபாவிலிருந்து 8,000 ரூபாய் வரை அறவிட்டு பின்னர் அவற்றை தமக்கு கீழ் உள்ள அதிகாரிகளுடன் பங்கிட்டுக் கொண்டதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஆட்பதிவுத் திணைக்கள தலைமை அதிகாரியும், அவருடன் சம்பந்தப்பட்டவர்களும் இலங்கையிலிருந்து தப்பியோட முடியாத வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

NIGHT TRAVEL நைற் ட்ரவல்ஸ்
உங்கள் விமானப் பயணத் தேவைகளை சிறந்த தரத்துடன் இலகுவாக ஆக்கிக்கொள்ள எங்களை நாடுங்கள். தரமான விலை, சிறந்த சேவை,
நிறைந்த பயன் போன்றவற்றோடு இரவுநேர ஆசனப் பதிவுகளை 21.00 மணி தொடக்கம் 01.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்களும் தொலைபேசியில் செய்து கொள்ளலாம்.
எங்கள் ஆரம்பத்தை முன்னிட்டு எயர் லங்கா விமானத்தில் கொழும்பு
சென்றுவர 970 பிராங்குகள் மட்டுமே
தொடர்புகளுக்கு: 031-302 53 37, 079 - 546 45 20 e-mail:nighttravel@hispeed.ch

# தமிழ் மக்கள் மத்தியில் மத ரீதியான பிளவை ஏற்படுத்தும் சக்திகள் குறித்து விடுதலைப் புலிகள் எச்சரிக்கை

## ஆண்டான் குளத்தில் தமிழ்ச்செல்வன் முக்கிய சந்திப்பு

மன்னாரில் அண்மைக் காலமாக மதரீதியான கசப்புணர்வுகள் தோன்றுவது தொடர்பாகத் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த புதன் கிழமை காலை மன்னார் ஆண்டான் குளத்தில் முக்கிய சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். தற்போதைய நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் மத ரீதியான பூசல்கள் எழுவதைத் தவிர்க்கும் நோக்கிலேயே ஆண்டான் குளத்திற்கு வருகை தந்து தமிழ்ச்செல்வன் இந்தச்சந்திப்பை நடத்தினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஆண்டான் குளம் றோமன் க.த.க. பாடசாலையில் இந்தச்சந்திப்பு விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் தலைமையில் நடைபெற்றது. இதில், மன்னார் அரசாங்க அதிபர் வீ.விஸ்வலிங்கம், மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள், இந்து, கத்தோலிக்க, முஸ்லிம் மதப் பெரியார்கள், பொது அமைப்புகளினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பிரதிநிதிகள், தழிழீழ துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.தங்கன், நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் எஸ்.ஜோசப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு தமிழ்ச்செல்வன் உரையாற்றுகையில், மன்னாரில் அண்மைக் காலமாக மதரீதியாக விரிசல்கள் ஏற்படுவது வருந்தத்தக்கதெனவும் கூறியதுடன், சில சக்திகள் தமிழ் மக்களிடையே மதரீதியான பிளவை ஏற்படுத்தி விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விட முற்படுவதால் அனைவரும் மிகு-ந்த எச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனுமிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பில் கத்தோலிக்கர்கள் சார்பில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் ஏ.சேவியர் குருஸூம், இந்துக்கள் சார்பில் மன்னார் இந்து ஆலயங்களின் பரிபாலன சபை உறுப்பினர் எஸ்.பிருந்தாவன நாதனும், முஸ்லிம்கள் சார்பில் மன்னார் ப.நோ.கூ. சங்கத் தலைவர் எஸ்.என்.எம்.ஏ.கஜானியும், அரசாங்க அதிபரும் உரையாற்றினர். இதன் பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் அங்கு, திணைக்களத் தலைவர்களுடனும் அரச அதிபருடனும் தமிழ்ச்செல்வன் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

# இந்திய பருப்பு வேண்டாமென ஆர்ப்பரித்தோர் இன்று உதவி கேட்டு டில்லிக்குப் படையெடுப்பு!!

## ஐ.தே.க. சாடுகிறது

ஜே.வி.பி. இன்று அரசுக்குள் ஒருவிதமாகவும், நாட்டு மக்கள் மத்தியில் இன்னொரு விதமாகவும் இரட்டை வேடம் பூண்டு செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவிக்கின்றார். அரசு பதவிக்கு வந்து மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்றையேனும் நிறைவேற்றவில்லை.

எதிர்க்கட்சிகளின் குறைகளைத் தேடிக் கொண்டிருக்கும் அரசு, மக்களின் தேவைகள் குறித்து அக்கறை காட்டுவதாகத் தெரியவி-ல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த 21ம் திகதி புதன் கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆளும் சுதந்திர முன்னணியினர் தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதிகளை மலையாகக் கொட்டினர்.

அவர்களின் பேச்சில் மக்கள் மயங்கி எதிர்காலக் கனவுடன் வாக்களித்து அவர்களை ஆட்சிப்பீட மேற்றினர். சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்த ஜே.வி.பி.யினர் அன்று அளித்த வாக்குறுதிகளையும் மக்கள் நம்பினர். ஆனால், ஜே.வி.பி.இன்று இரட்டை வேடம் பூண்டு செயற்படுகின்றது. ஆட்சியில் தொடர்வதற்காகச் சகலவிடயங்களையும் கண்டும் காணாததுபோல் இருக்கும் அதேசமயத்தில் தாங்கள் அரசுடனிருந்தாலும் தனித்துவமாக இயங்கி மக்கள் குறை தீர்க்கப் போவதாகப் புளுகி வருகின்றனர்.

மக்கள் ஜே.வி.பி.யின் கபட நாடகத்தை இன்று புரிந்து கொண்டு விட்டனர். அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்றையேனும் நிறைவேற்ற முடியாத நிலையில் அரசு இருக்கின்றது. அரசாங்கம் ஸ்திரமற்ற நிலையில் மூன்று மாதங்களைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றது.

அன்று இந்திய பருப்பு வேண்டாம் என்று ஆர்ப்பாட்டம் செய்த ஜே.வி.பி. அமைச்சர்கள் இந்தியாவிடம் உதவி கோரி அங்கு படையெடுக்கின்றனர். மேற்குலக அரசியல் கொள்கைகளை விமர்சித்த ஜே.வி.பி.இன்று அதிகாரத்துக்கு வந்த பின்னர் இரகசியமான தமது பகட்டு வாழ்க்கையை ஆரம்பித்திருக்கின்றனர்.

இன்னும் எவ்வளவு காலத்துக்கு அரசு இப்படியே நாட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கின்றது? மக்களின் பொறுமையைச் சோதிக்காமல் அளித்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும். இல்லாது போனால் மக்கள் போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் எனவும் காரியவசம் குறிப்பிட்டார்.

# ஜாதிக ஹெல உறுமயவின் ஆலோசகராகத் திலக் கருணாரத்ன

ஜாதிக ஹெல உறுமயவின் பிரதம அரசியல் ஆலோசகராக திலக் கருணாரத்னவை அதன் உயர் சங்க பீடம் கடந்த 20ம் திகதி செவ்வாய்க்கிழமை முழுமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது. கடந்த சில தினங்களாக ஜாதிக ஹெல உறுமயவின் பௌத்த குரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சிஹல உறுமய மற்றும் ஹெல உறுமய ஸ்தாபகருமான திலக் கருணாரத்னவுக்கு இடையே இடம் பெற்று வந்த முறுகல் நிலைக்கு இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது முடிவு காணப்பட்டதாக திலக் கருணாரத்ன தெரிவித்தார்.

# கருணா வெளிநாட்டுக்குத் தப்பி ஓட்டம்?

தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து விலக்கப்பட்ட தமிழத் துரோகி கருணா வெளிநாடொன்றுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. கடந்த வியாழக் கிழமை அதிகாலை 1.30 மணியளவில் சிங்கப்பூர் நோக்கிப் பயணமான விமானத்தில் இவர் சென்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை சிறீலங்கா அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான அனுரா பண்டாரநாயக்க சீனாவுக்கு விஜயம் செய்துள்ளார். இவரும் சிங்கப்பூர் வழியாக கருணா சென்ற விமானத்திலேயே சீனா சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# போர் திணிக்கப்பட்டால் படையினர் சடலங்களைத்தான் அனுப்புவோம்:

## கஜேந்திரன் நாடாளுமன்றில் முழக்கம்! ஆளும் தரப்பு, ஹெல உறுமய சீற்றம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை சிறீலங்கா ஆட்சியாளர்களையும் மற்றும் பேரினவாதக் கட்சியான ஹெல உறுமயக் கட்சி எம்.பி.க்களையும் கடும் சீற்றமடையச் செய்துள்ளது. சிறீலங்கா அரசு மேற்கொண்டு வரும் அட்டூழியங்கள் தமிழர் தாயகத்தில் இழைக்கப்படும் கொடூரங்கள் பற்றியும் கஜேந்திரன் எம்.பி. நாடாளுமன்றில் முழக்கமிட்டார்.

சிறீலங்கா அரசு சமாதானத்தை இழுத்தடித்துக் கொண்டு போர் திணிப்பை மேற்கொண்டு வருவது குறித்தும் அவர் கவலை வெளியிட்டார். மட்டக்களப்பில் இடம்பெற்றும் வரும் படுகொலை சம்பவங்கள் ஊடகவியலாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் கண்டனம் தெரிவித்த கஜேந்திரன், தொடர்ந்தும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு மீண்டும் போர் திணிக்கப்பட்டால் தமிழர் தாயகப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிங்களப் படையினர் சவப் பெட்டிகளில் தென்னிலங்கைக்கு திரும்புவர் எனக் காரசாரமாக உரையாற்றினார்.

இந்த உரையையடுத்து ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர். ஹெல உறுமய பிக்குகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை கண்டித்ததுடன் ஆளும் தரப்புக்கு ஆதரவு வழங்கப் போவதாகவும் தெரிவித்தனர். இதேவேளை பிரதிச் சபாநாயகர் கீதான்சன குணவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் இடம்பெறும் கன்சாட் பதிவிலிரு-ந்து கஜேந்திரனின் உரையை நீக்குமாறு உத்தரவிட்டார்.

ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78
Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: **அன்பு**
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

சுவிஸ் தமிழர் இல்லம் அனைத்துலக ரீதியில் நடாத்தும்
தமிழர் விளையாட்டு விழா 2004ல்
Basel ரவி கடை நடாத்தும்
மாபெரும் மலிவு விற்பனை
இடம்: Sportanlage Deutweg und Talgut Winterthur Zu

**முக்கியகுறிப்பு:**
தாய் நிறுவனம் Basel ரவி கடை
061/272 90 30
061/272 09 90
079/356 22 78
கிளை நிறுவனம் Bern ரவிகடை

# இனவிடுதலையை விற்றுப் பிழைப்பது எப்படி?

# சிங்கப்பூரில் கருணா ஆற்றவிருக்கும் உரை!!

சிங்கப்பூரில் உள்ள அமெரிக்க அரசாங்க அதிகாரிகளின் அழைப்பின் பேரில் அந்நாட்டுக்குச் சென்றுள்ள கருணா சிங்கப்பூரில் உள்ள அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிதிகளுடன் சந்திப்பொன்றை நடாத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பிரதிநிதிகள் ஒழுங்கு செய்துள்ள ஒரு முக்கிய மாநாட்டில், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்த ஒரு உரையொன்றைக் கருணா ஆற்றவுள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

அமைப்பிற்கெதிரான துரோகச் செயல்களில், பெண்களுடன் தொடர்பு, தலைமைக்கெதிராக இரகசியமாகச் செயற்பட்டமை உட்பட பல குற்றச்செயல்கள் கண்டு பிடிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா நீக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் தனது சுயநலனுக்காகப் பிரதேசவாதத்தைக் கவசமாகப் பயன்படுத்தினாலும், ஒரு சில நாட்களில் தோல்வி கண்ட கருணாவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் நெருங்கிய இரகசியத் தொடர்புகள் இருந்தமை குறித்த தகவல்கள் ஏற்கனவே வெளியாகியிருந்தது.

இந்நிலையில், சிறீலங்காவின் அமைச்சரவையின் முக்கிய அமைச்சரான அநுரா பண்டாரநாயக்கா சிங்கப்பூர் சென்ற போது, அதே விமானத்தில் கருணாவும் பயணித்துச் சென்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் சென்றுள்ள கருணாவை, தற்போது அமெரிக்காவில் தங்கியிருக்கும் சிறீலங்காவின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மீண்டும் கொழும்பு திரும்பும் வழியில் சிங்கப்பூரில் தரித்து, கருணாவுடன் சந்திப்பொன்றை நடாத்தவுள்ளதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

இது தவிர, சிங்கப்பூரில் கருணா தங்கியிருக்கும் போது, சிங்கப்பூரில் நடைபெறவுள்ள அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிகளுடனான விசேட கூட்டத்தில், 'பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

கருணாவின் உரை அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவமற்றதாக இருப்பினும், கருணாவைத் தங்கள் வலையில் வளைத்துப் போடும் நோக்கில் அவரையும் உரையாற்றப் பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கருணாவை அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய நபராக மாற்றி எடுப்பதன் மூலம் திருகோணமலையைப் பெற்றுக் கொள்வது உட்பட, வடக்கு- கிழக்கை நிரந்தரமாகப் பிரித்து, விடுதலைப் புலிகள் அமைப்பைப் பலவீனப்படுத்துவதே அமெரிக்காவின் முக்கிய நோக்கம் என்றும் கருதப்படுகிறது.

இதேவேளை, கருணாவின் பாதுகாப்புக்கென இரண்டு சிறப்பு அதிரடிப்படையினரும் கருணாவுடன் சிங்கப்பூர் சென்றுள்ளதாகக் கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், சிங்கப்பூர் சென்றுள்ள கருணா, மலேசியா சென்று அங்குள்ள தனது துனைவி, பிள்ளைகளையும் சந்திக்கவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளதாக குறிப்பிட்ட ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

## 90ம் நாள் நினைவாஞ்சலி

அன்னை மடியில்: 14.04.1929



இறைவன் அடியில்: 14.04.2004

### சோமசுந்தரம் குமாரசாமி

அன்பின். ஒளி விளக்கே!
நாங்கள் நலமாக வாழ,
நல் வழிகாட்டிய தந்தையே!
எங்களை விட்டு நீங்கள் பிரியவில்லை,
ஐயா!
உங்கள் நினைவுகளை தந்துவிட்டு,
நீண்ட தூரம் போனதென்ன?
நீங்கள் இல்லையென்று நினைக்கையிலே,
நெஞ்சு வலிக்குதய்யா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்

தகவல்: கண்ணன்- 0041313312085 (UK)
வசந்தன் - 004402085867025 (UK)
பிரித்தானியா


தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளையின் அனுசரனையுடன், ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் (பிரான்ஸ்) தனது 10வது, ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும்

லெப்.கேணல் விக்ரர் (ஒஸ்கா)

ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணத்திற்கான, சர்வதேச அளவிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி.

**காலம்: 29-08-2004**
**நேரம்: காலை 09:00 மணி**

**முக்கிய குறிப்பு:** இச்சுற்றுப் போட்டியை சிறந்த முறையில் நடாத்துவதற்கு விளம்பரம் தந்துதவ விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.

**01 43 58 11 42 - 06 17 80 18 26**

## மணமகன் தேவை

தமிழீழம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 24 வயதுடைய கொழும்பில் வாழும் க.பொ.த. உயர்தரம் வரை கவ்வி கற்ற மணமகளுக்குச் சுவிற்சர்லாந்தில் வாழும் அவருடைய அப்பா, ஐரோப்பாவில் வாழும் நல்ல வரனைத்தேடுகிறார்.

**தொலைபேசி: 0041Ø71 722 67 03**
**0041Ø71 7226703**

24-6-8

## வீடு வாடகைக்கு

Corbeil Essonnes ல் RER-D க்கு மிக அருகாமையில் அமைந்துள்ள Moulin Galant Station க்கு அருகே 45 சதுர மீட்டரைக் கொண்ட FI / Kitchen / Bathroom / Balcony Cave gas வசதியைக் கொண்ட Appartment க்கு குடியிருக்க தேவை ஒரு நபர்.

**வாடகை 300 ஈரோ**

**Transport வசதி RER D, RER C**

தொலைபேசி: **01 49 60 85 26 / 08 71 76 85 26**
**01 64 96 68 82 / 06 26 56 13 95**

25

## உணவகம் வாடகைக்கு உண்டு



வாடகை
2164Euro
(14194.91F)

பாரிசிலிருந்து 25 கிலோமீற்றர் தூரத்திலுள்ள பொசாம்ப் பகுதியில் இந்திய உணவகம் வாடகைக்கு உண்டு. 200 சதுரமீற்றர் உணவகத்துடன் 4அறை கொண்ட வீடும் உண்டு. 1000 சதுர மீற்றர் பரப்பளவில் வாகனம் நிறுத்தும் வசதியும் உண்டு. தொடருந்து நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. முற்பணம் 145, 000 ஈரோ. (951,127.65 F) 10 km சுற்றளவில் வேறு இந்திய உணவகங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு: 06 67 63 99 68 / 06 60 56 49 76

24

## Asha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073**

Pub-Fr-39

உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

**RESTAURANT ROYALTANDOURI**

***Métro: Bellville***

**தொடர்புகளுக்கு: 01 43 14 67 49 - 06 64 00 66 62 - 06 10 59 37 44**

*Restaurant* **Tharsana's**

**தர்ஷனாஸ் உணவகம்**

23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்

* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

**தர்ஷனா & பிரஷா உணவகங்கள்**

இங்கு சாப்பாடுகளை ஒடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

*Restaurant* **Prassah**
*Gastronomiques Indiennes*

**பிரஷா உணவகம்**

54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

AA EXPRESS
நிறுவப்பட்டது 1972
உங்களது சகல பொதிகள், பயணிகள் தேவைகளுக்கு.
இது வடக்கு இலண்டனிலுள்ள முதல்தர வாடகை மோட்டார் நிறுவனம்.
Cab & உள்நாட்டு சர்வதேச கூரியர் சேவை நிபுணர்கள்.
020 8902 0123
விமான நிலைய இடமாற்று நிபுணர்கள். பயணத்துக்குச் சகல வாகனங்கள் கிடைக்கும்.
வருடத்தில் 365 நாட்களும் திறந்திருக்கும். வெம்பிளியில் நீண்ட காலமாக இயங்கிக்கொண்டிருக்கும் தனியார் நிறுவனம்.
உங்களிடம் 3 வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட U.K. லைசென்ஸ்சும் 7 வருடங்களுக்கும் குறைவாக மோட்டார் வண்டியும் இருக்கிறதா?
'ஆம்' என்பது உங்கள் பதிலாக இருந்தால்,
நீங்கள் கிழமை ஒன்றிற்கு £500 அல்லது அதற்குமேலும் சம்பாதிக்கலாம்.
அனுபவம் தேவையில்லை. பயிற்சி அளிக்கப்படும்.
புதிதாய்ச் சேர்வதற்கு:
Hotline 020 8903 8586
www aaexpress.co.uk யில் உங்களைப் பதிவுசெய்யுங்கள்.
Fax: 020 8903 1771
தொடர்பு:
ContactUs@aaexpress.co.uk
நீங்கள் www aaexpress.co.uk மூலம் கட்டணம் செலுத்தலாம்.
VISA Visa Electron

# நாம் தனித்துவமான தேசிய இனம் இதை யாராலும் மறுக்கமுடியாது

## பாரம்பரியக் கலைவிழாவில் இளம்பரிதி

இன்னுமொரு யுத்தம் எம்மீது திணிக்கப் பட்டால் பெரும் அழிவுகளைச் சந்திக்கப் போவது தமிழினம் அல்ல என்பதை ஆக்கிரமிப்பாளர்கள் உணர வேண்டும். ஏனென்றால் தமிழினம் விடுதலையெனும் ஆன்மாவிற்காகத் தன் உயிரையும் இழக்கத் தயாராகவுள்ளது.

இதனைக் கடந்த கால யுத்தம் நன்கு உணர்த்தியுள்ளது.'

என்று விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு நிலையத்தினர் நடத்திய பாரம்பரியக் கலைவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:- எந்தவொரு தேசிய இனமும் தனது ஆணி வேரான பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்களைப் பேணிக்காக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது.

அந்த வகையிலே இன்று இந்த மண்டபத்தில் எமது பாரம்பரியக் கலைகளையும் மூத்த கலைஞர்களையும் கௌரவிப்பது ஒரு பாராட்டுக்குரிய நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம்.

ஓர் இனத்தின் தனித்துவம் பாரம்பரிய விழுமியங்களைப் பேணி வளர்ப்பதில் அதீத அக்க றையுள்ளவர்களாக இன்றைய இளம் சமுதாயம் தோற்றம் பெறவேண்டும்.

யுத்தத்தினால் தமிழினத்தைத் தோற்கடிக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்ட ஆக்கிரமிப்பாளர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தித் தமிழ்த்தேசியத்தைச் சின்னா பின்னமாக்கப் பாரம்பரிய கலாசார விழுமியங்களைச் சிதறடித்து அதன் மூலமாவது நசுக்கிவிடலாம் என்று தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்.பொது நூலகத்தை எரித்து நாசமாக்கினார்கள்.

பின்னர் எம்மீது பல்வேறுபட்ட அக்கிரமங்களைக் கட்டவிழ்த்து விட்டார்கள். எதனாலுமே எம் இனத்தை நசுக்கிவிட முடியவில்லை. அண்மையில் கூட பிரதேசவாதம் என்கின்ற மாயை தமிழ்த்தேசியத்துக்கு எதிரான விரோதிகளால் தோற்றுவிக்கப்பட்டது.

அதன்மூலம் நாம் பேரம்பேசுகின்ற வல்லமையினைக் குறைத்து விடலாம் என்று எதிரியும், துரோகிகளும் கண்ட கனவு கலைந்து போனது.

பிரதேசவாதத்தைக் கிளப்பியவுடன் அந்தப் பிரதேச மக்களாலேயே அந்த வாதம் தோற்கடிக்கப்பட்டது. இதன்மூலம் ஒன்று மட்டும் தெளிவாகியுள்ளது. என்னவென்றால் எமது தமிழ்த் தேசியக் கொள்கையினையும் விடுதலை வேட்கை உணர்வையும் இனி எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாதென்பதாகும்.

ஓர் இனம் தேசிய இனமாக இருக்க வேண்டுமானால் தனக்குரிய நிலப்பரப்பினை வைத்திருக்க வேண்டும். அதனைத் தக்கவைப்பதற்குப் படைபலம் இருக்கவேண்டும். எம்மிடம் 70 வீதம் நிலப்பரப்பு கைவசம் உள்ளது. அதனைக் கட்டிக்காக்க, தக்கவைக்கப் போதுமான படைப் பலம் உள்ளது. இதனை எமது இனத்திற்குரிய கட்டுமான வரைபுகளோடு கூடிய நிர்வாகமுள்ளது. ஆகவே, நாம் ஒரு தனித்துவமான தேசிய இனமென்பதை யாராலும் மறுக்க முடியாது - என்றார்.

# கருணாவின் முக்கிய சகாக்களை சுட்டுக்கொலை செய்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்

கருணாவின் முக்கிய சகாக்களையும், சிறீலங்கா புலனாய்வு அதிகாரி ஒருவரையும் சுட்டுக் கொலை செய்தவர்கள், தம்மிடம் சரணடைந்திருப்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளர்.

இதுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்நபர்கள் கருணா குழுவினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் ஞாயிறு அதிகாலை அவர்களைச் சுட்டுக் கொலை செய்துவிட்டு, தம்மிடம் சரணடைந்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிறீலங்கா அரசாங்கத்தின் இரகசிய ஏற்பாட்டில் கொழும்புப் புறநகர்ப் பகுதியிலுள்ள உச்ச கட்டப் பாதுகாப்பு நிறைந்த இல்லத்தில் தங்க வைக்கப் பட்டிருந்த கருணாவின் ஏழு முக்கிய சகாக்களும், ஒரு புலனாய்வு அதிகாரியுமே சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இத்தாக்குதலில், கருணாவின் மிக நெருங்கிய சகாவும், கருணாவின் அடுத்தகட்ட நிலையில் உள்ளவர்களான குகநேசன், காஸ்ரோ, கேசவன், றூபன், ஆர்ப்பரன், விக்கி, விமலகாந்த் ஆகியோர் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

# போர் நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கும் வாய்ப்பில்லை!

## அவுஸ்திரேலிய வானொலி கருத்துக் கணிப்பு தெரிவிப்பு

சிறீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கும் வாய்ப்பில்லை என்று அவுஸ்திரேலிய வானொலிக் கூட்டுத்தாபனம் நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

இந்த நிறுவனம் தனது ஆசிய பசுபிக் சேவையினூடாக நடத்திய இக்கருத்துக் கணிப்பில் 90 சத வீதமானோர் போர் நிறுத்த ஒப்பந்தம் நீடிக்காது என்று வாக்களித்துள்ளனர். 10 சத வீதமானோரே இவ்வொப்பந்தம் நீடிக்கும் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளைச் சேர்ந்தவர்களிடம் மட்டுமே இக்கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இவ்வாறு கருத்துத் தெரிவித்தவர்கள், இலங்கை நிலவரம் தொடர்பாக ஊடகங்களில் வெளிவரும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டே தமது வாக்குகளை அளித்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற படிப்படியான அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து இன்று மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி மக்கள் மத்தியில் அச்சம் எழுந்துள்ளது.

அந்த வகையில் அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தற்போது நடத்தியுள்ள கருத்துக்கணிப்பில் இந்த விவரம் வெளியாகியிருக்கிறது.

Phone 2000 - Sonia restaurant ஆதரவில் ஆர்.ரி.எம். பிறதெர்ஸ் இன்ரநெஷனல் பெருமையுடன் வழங்கும்
15 வது கலைத்தென்றல்
'கீதம் சங்கீதம்'
'நகைச்சுவை விருந்து'
'பாட்டுக்கு பாட்டு'
கலைஞானிதன் பி.எச். அப்துல் ஹமீட் வழங்கும்
'பாட்டுக்கு பாட்டு'
இலங்கை வானொலி, தொலைக்காட்சி புகழ் பயஸ் - ரட்ணம் கலந்துகொள்ளும்
சுப்பர் சண் இசையில் இலை மறை காய்களாய் இருக்கும் பாடகர்களை
வெளிக்கொண்டுவரும் இனிய நிகழ்ச்சி
பாட்டுக்கு பாட்டு போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்புவோர்
15.07.2004 இற்கு முன் தொடர்புகொள்ளவும்.
அவதாரனம்
மதி குழுவினரின்
மேலைத்தேய நடனம்
மேலதிக தொடர்புகளுக்கு
Phone 2000 -01 40 05 03 43
Siva: 06 20 21 11 11
Nice Telecom: 01 40 37 63 68
ஸ்ரீ பாரதி அச்சகம்: 01 42 05 46 04
Espace Amorc
199 rue saint martin
75001 Paris
(Mo: Etienne marcel)
08.08. 2004 ஞாயிறு
மாலை 5.00 மணி